[illegible]

ஐப்பசி 1997

03,m211,40sc
N97.
218535



# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு 71 பரல்- 8
ஏப்ரல் 1997
வள்ளுவர் ஆண்டு 2028
பங்குனி

# "செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு :

முனைவர் பொன் கோதண்டராமன்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் க. ப. அறவாணன்

முனைவர் கு. சுந்தரமூர்த்தி

பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

முனைவர் வீ. ப். கா. சுந்தரம்

கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.,

ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிட்.,


## உள்ளுறை


| | |
|---|---|
| தாமரைச் செல்வர் வ.சு. ஐயாவின் சிற்றிலக்கியத் தொண்டு | 281 |
| செய்யுட் கோயில் | 285 |
| சக்தி ஐயாவின் திரு அருள் விளக்கம் — ஓர் ஆய்வு | 288 |
| திருவிடைமருதூர்க் கலம்பகம் | 291 |
| தேன்நாவால் பேசுகின்றோம் | 297 |
| திருவிளையாடற் புராணத்தில் வழக்காறுகள் | 298 |
| பாவேந்தர் நினைவுகள் | 301 |
| அண்ணாவின் கவிதைகள் ஓர் ஆய்வு | 310 |
| ஈஸ்வர ஆண்டே வருக | 318 |
| நூல் மதிப்புரை | 319 |
| மறைமலையடிகள் நூலக வளர்ச்சி நன்கொடை | 320 |



## மானிட உடலியக்கவியல்

டாக்டர் அ. கதிரேசன், எம். டி.,

இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமையான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறது.

**விலை ரூ. 35/-**



தமிழ்நாடு அரசுச் சுவடிக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி

24 மே 1997

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் எழும்பூர், சென்னை-600 008



செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு 2028 - பங்குனி

ஏப்ரல் - 1997

சிலம்பு - 71 பரல் - 8


## தாமரைச் செல்வர் வ. சு. ஐயாவின் சிற்றிலக்கியத் தொண்டு

"தமிழ்ச் செய்யுட்கள் தனிநிலை, தொகை நிலை, தொடர் நிலை என முத்திறப்படும். அவற்றுள் தொடர் நிலை, சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை என இரு வகைப்படும். பொருட்டொடர் நிலைச் செய்யுள் நாற்பொருள் பயக்கும் நடைநெறித்ததாகிப் பல்லியல்பானும் விரிந்து நடப்பதும் அவ்வாறின்றிக் குறைபாடுடையதும் என இரண்டாம். அவற்றுள் முன்னதனைப் பெருங்காப்பியமென்பர். பின்னதையும் அதுபோன்ற சொற்றொடர் நிலைச் செய்யுளையும் சில தனிச் செய்யுட்களையும் பிரபந்தம் என வழங்குபவர் தமிழ்ப் பிரபந்தங்களைத் தொண்ணூற்றாறாக வகுத்திருக்கின்றனர்." என சிற்றிலக்கியத்திற்கு விளக்கம் தந்திருப்பவர் மொழித்திறன் முட்டறுப்பதில் வல்லவராயும் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களுள் தலைசிறந்தவர்களுள் ஒருவருமாய நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள்.

இலக்கியத்தில் நாட்டார் ஐயா என்றால் இவர் ஒருவரைத்தான் குறிக்கும். இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய 'பரணி' பற்றிச் செந்தமிழ்ச் செல்வியில் கட்டுரை எழுத முற்பட்டபோது இவ்விளக்கத்தை நாட்டார் ஐயா தந்துள்ளார். இதைவிட இரத்தினச் சுருக்கமாக இதற்கு விளக்கம் தர யாராலும் முடியாது. இன்றைய தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் இவ்விளக்கத்தை யாருடைய உதவியுமின்றித் தாமே படித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பார்களாயின் தமிழ்க் கவிதை பற்றிய முழுவிளக்கத்தையும் தெரிந்து கொள்பவர் ஆவர்.

தமிழ் இலக்கியங்களுள் 'சிறுபிரபந்தம்' என்ற தொடர் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை பரவலாகப் பயின்று வருகிறது. சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டுகளுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முதலிய ஆற்றுப்படை இலக்கியங்களை உள்ளடக்கிய பத்துப்பாட்டு நூல்களுமே தனித்தனி சிறு

பிரபந்தங்கள் தாம். அக்காலத்தில் நிலவி வந்த சிறுபிரபந்தங்களுள் சிறந்த பத்தினைத் தேர்ந்தெடுத்து 'பத்துப்பட்டு' எனத் தலைப்பிட்டு பதினெண் மேல்கண்க்கு நூற்களுள் இவற்றையும் சேர்த்து விட்டனர்.

பன்னிரு திருமுறை காலத்தில் அந்தாதி போன்ற இலக்கியங்கள் தோன்றி அத்திருமுறை வரிசையில் இடம் பெறலாயின. [illegible] கோவையில் தலைசிறந்த 'திருக்கோவையார்' (மாணிக்கவாசகர்) எ[illegible] திருமுறையில் திருவாசகத்தோடு சேர்க்கப் பெற்றது.

நாயன்மார்களுள் மூத்தவராகக் கருதப்பெறுபவர் காரைக்காலம்மையார். அதன் பொருட்டே அவர் பாடிய பதிகத்தை மூத்த திருப்பதிகம் என்று குறிப்பிடுகின்றனர். இரட்டை மணி மாலை என்ற பிரபந்தம் பற்றிய குறிப்பில் இலக்கிய வரலாற்றாசிரியர் மு. அருணாசலம் 'தமிழ் மொழியில் முதன்முதல் 5 ஆம் நூற்றாண்டில் காரைக்காலம்மையார் இரட்டை மணி மாலை பாடியுள்ளார்' என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து பத்துப்பாட்டு வரிசைக்குப்பின் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் சிறு பிரபந்தம் பாடத் தொடங்கப்பெறுகிறது என்று பெறப்படுகிறது. காரைக்காலம்மையாரை யொட்டி மூத்த பட்டினத்துப் பிள்ளையார் பாடிய கோயில் நான்மணிமலை, திருவிடைமருதூர், திருக்கழுமல மும்மணிக்கோவைகள் 11 ஆம் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. சேரமான் பெருமாணாயனார் பாடிய 'ஆதியுலா' எனும் திருக்கயிலாய ஞானவுலா, திருவாரூர் மும்மணிக்கோவை போன்றவையும் திருமுறை வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருமுறைக்குப்பின் பிரபந்தங்கள் புற்றீசல் போல் பெறாலபொல எனவும் கலகல எனவும் பல்கிப் பெருகின. 12 ஆம் நூற்றாண்டு முதல் இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை இவை கோலோச்சி நின்றன. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை (மறைமலையடிகள்). கச்சிக்கலம்பகம் (பூண்டி அரங்கநாத முதலியார்). முதல் இன்றுள்ள மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ் பாவேந்தர் பிள்ளைத் தமிழ் வரை இருபதாம் நூற்றாண்டையும் இவ்வகை இலக்கியம் விட்டு வைக்கவில்லையெனத் தெரிகிறது.

காலங்காலமாக 'பிரபந்தம்' எனப் பழகி வந்த இலக்கிய வகையைச் 'சிற்றிலக்கியம்' என மாற்றியமைத்தது வ.சு.ஐயா அவர்கள்தான் என்பதில் ஐயமில்லை. பழந்தமிழ் இலக்கியத்துக்குச் சொற்பொழிவு மாநாடு நடத்தியதுபோல சிறப்பான சிற்றிலக்கியங்களின் பெருமைகளை எடுத்துக் கூறும் 'சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்' என்ற வகையில் ஆறு மாநாடுகளை ஐயா [illegible]த்தினார்.

218585





இலக்கிய மாணவர்களும் தமிழ் இலக்கிய அன்பர்களும் இந்தச் சொற்பொழிவு வரிசை நூல்களைப் படித்தால் சிற்றிலக்கிய வரிசை நூல்களையே படித்தது போன்ற தெளிவும் இன்பமும் கிடைக்கும். இருபதாம் நூற்றாண்டில் இவ்வகை இலக்கியத்திற்குச் சிறந்த அறிமுக நூல்களாக இவை அமைந்துள்ளன.

இவைதவிர மூல சிற்றிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து தக்க அறிஞர்களைக் கொண்டு உரையுடன் வெளியிட்டுத் தமிழ் அன்பர்களிடையே பரப்பிய பெருமை வ.சு. அவர்களையே சாரும். உலா, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு போன்ற ஒவ்வொரு சிற்றிலக்கிய வரிசையிலும் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து வ.சு. வெளியிட்டார்.

கழகம் நூல் வெளியிடத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே (1921) முதல் சிற்றிலக்கிய நூலாக அதிவீரராம பாண்டியரின் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி நூலை வெளியிட்டது.

அதன்பின் சிற்றிலக்கிய வகைகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு வகையிலும் சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து வெளியிடலாயிற்று. எதை மக்கள் கட்டாயம் படிக்க வேண்டுமோ அதையும் எது அவ்வகையில் சிறந்து விளங்கியதோ அதையும் வெளியிட்டுள்ளது.

சிற்றிலக்கியங்களுள் அந்தாதி இலக்கியமும் பிள்ளைத்தமிழ் இலக்கியமும்தான் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. பின்னைத் தமிழ் நூல்களில் குமர குருபரர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழும் புகழ் பெற்றவை. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைக் குமரகுருபரர் அரங்கேற்றிய போது மதுரை மீனாட்சியம்மையே குழந்தை வடிவில் வந்து அவருக்கு முத்துமாலை பரிசளித்ததாக வரலாறு உண்டு.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல். இவற்றைக் கழகம் வெளியிட்டதுடன் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், திருமலை முருகர். பி.த. திருவிலஞ்சி முருகர் பி.த. திருவிரிஞ்சை முருகன் பி.த. கோமதியம்மை பி.த. போன்றவையும் கழக வழி வெளிவந்துள்ளன.

அந்தாதி இலக்கியம் மக்கள் விரும்பிப் படிக்கும் சிற்றிலக்கிய வகையாகும். இன்று அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதியைப் படிக்காதவர் கிடையாது எனலாம். அதைப் படித்தால் 'தனம்தரும் கல்விதரும்' என்ற எண்ணம்

D21 211,805C N97

பரவலாக உள்ளது. இது தவிர கம்பர் இயற்றிய சரசுவதி அந்தாதி, அருணகிரியந்தாதி, பழமலையந்தாதி, திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி போன்றவையும் பதிற்றுப்பத் தந்தாதி வரிசையில் இளசை, குளத்தூர், கலைசை, மதுரைப் பதிற்றுப் பத்தக்தாதிகளும் வ.சு. ஐயா அவர்களால் வெளியிடப்பெற்றன.

உலா இலக்கியத்தில் ஆதியுலாவான திருக்கைலாயஞான உலா, திருப்பூவண நாதருலா, மூவருலா போன்றவை வெளியிடப் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| கலம்பக வரிசை | – | நந்திக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், திருச்செந்திற் கலம்பகம், கச்சிக் கலம்பகம் |
| பரணி | – | கலிங்கத்துப்பரணி |
| கோவை | – | திருக்கோவையார் அம்பிகாபதிக் கோவை, தஞ்சை வாணன் கோவை |
| குறவஞ்சி | – | திருக்குற்றாலக் குறவஞ்சி |
| பள்ளு | – | முக்கூடற்பள்ளு |
| வெண்பா | – | சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய குறள் வெண்பா நூல்கள், அகலிகை வெண்பா |
| சிலேடை வெண்பா | – | கலைசை, சிங்கை, நெல்லைச் சிலேடைவெண்பாக்கள் |
| சதகம் | – | குமரேச சதகம், அறப்பளீசுரச்சதகம் |
| மாலை | – | மதன வித்தாரமாலை. |
| விலாசம் | – | சந்திர விலாசம், சமுத்திர விலாசம் |

இவ்வாறு சிறந்த சிற்றிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மக்களிடையே பரப்பினார் வ.சு. ஐயா சங்க இலக்கியம், சமய இலக்கியம், காப்பிய இலக்கியம் போன்றவற்றைப் படிப்பதற்கு முன் எளிய, இனிய இலக்கியமாக இச் சிற்றிலக்கியம் திகழ்ந்தது, அதன் அருமை உணர்ந்து அதனைத் தமிழன்பர்களிடையே நல்ல முறையில் அறிமுகப்படுத்தினார்கள்.

பெரும்பாலும் இந் நூல்கள் வித்துவான், புலவர், பட்டத் தமிழ் இலக்கிய வகுப்புகளுக்குப் பாடமாக வைக்கப்பெற்ற காரணத்தால் தமிழ் இலக்கியம் பயின்ற மாணவர்கள் இவற்றை விரும்பிப்படித்தனர். இன்று பாடமுறையில் ஏற்பட்ட மாறுதல்களினால் இச்சிற்றிலக்கிய நூல்கள் முழுமையாகப் பாடமாக வைக்கப் பெறுவதில்லை. இதன் காரணமாக இன்றைய மாணவர்கள் இவற்றைப் படிக்காமலே விட்டுவிடுவது பெருவருத்தத்திற்குரியது. இவற்றைக் காப்பாற்ற வ.சு. ஐயா பட்டபாடு வீணாகப்போய்விடக் கூடாது. இவற்றை மீண்டும் பாட நூல்களாக்க முயல வேண்டும்.



# செய்யுட் கோயில்

**(பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்.)**

அப்பர், சம்பந்தர் முதலிய சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தமிழை இறைவனோடு தொடர்புபடுத்திப் பாடியுள்ளனர். குமரகுருபரர், சிவப்பிரகாசர் போலும் புலமை சால் அடியவர்களும் தமிழைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அவருள், கற்பனைக் களஞ்சியமாம் சிவப்பிரகாசம் தமிழ் நூல்களையும் தமிழ்ச் செய்யுள்களையும் போற்றிப் பாடியுள்ளார். வள்ளுவர் வாய்மொழி நூலின் குறளைச் சிவபிரான் திருவடிகளுக்கு உவமை கூறியுள்ளார். எப்படி?

சிவபிரான் உமையொருபாகன். அவன் திருவடியிரண்டுள் வலப்பக்கத்திருவடி, ஆண் உருவுக்கேற்ப நீண்டும், இடப்பக்கத் திருவடி, பெண் உருவுக்கேற்பச் சிறியதாகியும் அமையும். அதனால், அத்திருவடிகள் வள்ளுவரின் குறள்போல் இருக்கின்றன என்றார். குறளின் முதலடி நேரடியாகவும் பின்னடி சிந்தடியாகவும் அளவில் நீண்டும் குறைந்தும் காணப்படும். எனவே அளவொப்புமையைக் கற்பித்துக் கொண்டு உமையொரு பாகனின் திருவடிகள் திருவள்ளுவரின் குறள்போல் உள்ளன என்றார்.

**"என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும்**
**என்தலையில் இருத்தும் இறை"**

(திருவெங்கைக் கலம்பகம் 42)

என்பது அவர் வாக்கு. என்னடிகள் என்றது திருவள்ளுவரை. 'இறைவன் திருவடி, தொழுவார்க்கு வீடுபேறருளும்; திருக்குறள் நெறியில் ஒழுகுவார்க்கு அக்குறள் நூல் வீடுபேறருளும்' என்பது சிவப்பிரகாசர் வாக்கின் உட்பொருளாகும்.

குறள் வெண்பாச் செய்யுளை இறைவன் திருவடிகட்கு உவமை கூறிய சிவப்பிரகாசர், பொதுவாகத் தமிழ்ச்செய்யுளைத் திருக்கோயிலுக்கு உவமை கூறியதும் மிகப்போற்றற்குரியதாகும்.

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த வெங்கனூர் என்னும் ஊரிலிருந்த வள்ளல் அண்ணாமலை இரெட்டியார், தம்மைப் போற்றிப் புரந்தமை குறித்து நன்றியுணர்வுடன் திருவெங்கையுலா என்னும் தமது நூலில், அவர் அவ்வூரில் அமைத்த இறைவன் கோயிலைத் தமிழ்ச் செய்யுள்போல் இருக்கிறது என்றார்.

"வல்லகோல் அண்ணா மலைவள்ளல் - மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகும்சீர் கெடாதடுக்கிப்
புந்திமகிழ் அற்புத அணித்தா - முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில் உள்ளிருந்தெம்
மையுள்போக் கிற்கும் பரஞ்சோதி"

(திருவெங்கையுலா. *65-67*)

என்பது அவரது வாக்கு. செய்யுளுக்குச் சந்தியெழுத்துகளைப் பொருத்துதலும், செய்யுளுக்குரிய சீர்கெடாமல் அடுக்குதலும், அறிவுமகிழும்படியாக அணிபெறச் செய்தலும் ஆகியன செய்யுள் செய்வார்க்கு உரிய தொழில்கள். அவ்வாறே கோயில் அமைப்பாரும் கட்டட அமைப்புச் சிறக்குமாறு வரிக்குவரி சந்திபொருத்துதலும, ஒழுங்கு கெடாமல் அமைத்தலும், காண்பார் அறிவு மகிழும்படி அழகு பெறச் செய்தலும் ஆகியவற்றை மேற்கொள்வர். இவ்வகையில் அண்ணாமலை வள்ளல் அமைத்த கோயில் அமைந்துளது.

'செய்யுள்போற் செய்த திருக்கோயில்' என்றதால் செய்யுளை வெறுங்கல் கட்டடத்துக்கு உவமையாகக் கூறிவிட்டார் சிவப்பிரகாசர் என்று கொள்ளக்கூடாது. திருக்கோயிலின் உள்ளிருப்பவர் சிவபிரான். சிவபிரான் பிறவித்துன்பத்தைப் போக்குபவர். அக்கோயிலுக்குச் செய்யுள் உவமை கூறப் பட்டதால், செய்யுள் எப்படியிருக்கவேண்டும் என்பதையும் பெறவைத்தார். பிறவித்துயரைப் போக்கும் சிவபிரான், கோயிலின் உள் இருக்கிறார் என்பதால், செய்யுளின் உட்பொருளும் படிப்போரின் துன்பங்களைப் போக்கும் சிறப்புடையதாக அமைதல் வேண்டும் என்பதாம். உமையொருபாகன் திருவடி களுக்குக் குறளை உவமை கூறியதும் சிந்திக்கத் தக்கது.

சிவப்பிரகாசர் செய்யுள் என்பது எப்படியிருக்க வேண்டும். என்பதைச் 'செய்யுட் கோயில்' என்றதன்மூலம் தெரிவித்தது போலத் திருக்குறளை உமையொருபாகன் திருவடிகட்கு உவமை கூறியதுகண்டு, யான் திருக்குறளை ஒருகோயிலாகக் கொண்டு பின்வரும் வெண்பாவை யியற்றினேன். அது,

உலகறி தோற்றத்தால் உள்ளே பயிலப்
பலமனம் போக்கலால் பார்க்கும் - கலையால்
செருக்கறுக்கும் செம்பொருள் சேர்தலால் நல்ல
திருக்குறளைக் கோயிலெனத் தேர்

என்பதாகும். "உலகறிந்த தோற்றம் கொண்டதாலும் உள்ளே ஆழ்ந்து பயில மனதைப் பலவகையில் அலைவதினின்றும் நீக்கி ஒரு நிலைப்படுத்துவதாலும், கலை நுணுக்கம் கொள்வதாலும் ஆணவத்தைப் போக்கும் செம்பொருள் சேர்வதாலும் திருக்குறளைக் கோயில் என்று தெளிவாயாக" என்பது பொருள்.





குறளுக்கு உலகம் அறியும் புகழ் உண்டு; கோயிலும் தன்னில் உள்ள இறைவனின் அருள்மேம்பாட்டால் உலகம் அறியுமாறு அமையும். குறளை உள்நோக்கிப்படிக்க. மனதின் பல்வகையான அலைச்சலைப் போக்கும். கோயிலும் உள்ளே சென்று நீண்ட நேரம் இருக்க மனம் ஒருமைப்பாடு கொள்ளும்படிச்செய்யும். கலையழகு இரண்டிற்கும் உண்டு. குறள் படிப்போர் ஆணவம் அடங்குவர். கோயிலும் தன்னிடத்தமரும் இறைவனால் ஆணவம் அழிக்கச் செய்யும். எனவே திருக்குறள் கோயிலுக்கு ஒப்பாகும் என்பதாம்.



கவிஞர் வேலூர் ம. நாராயணன் எழுதிய நூல்கள் வெளியீட்டு விழாவில் (31.1.97) தமிழக செய்தி விளம்பரத்துறை அமைச்சர் வ. முல்லைவேந்தன் பேசுகிறார். அருகில் விக்கிரமன், ம.பி. சுதாகர் உள்ளனர்.

## சக்தி ஐயாவின் திருஅருள் விளக்கம் - ஓர் ஆய்வு

திரு. மு. இளங்கோ
விக்கிரமசிங்கபுரம்

### சரீரம்

இந்த உடம்புக்கு சரீரம் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? சரம் என்றால் பிராணன் அல்லது மூச்சுக் காற்று எனப்படும். ஈரம் என்பது உடம்பில் அன்னத்தால் ஏற்படும். இதைத்தான் அனத்தால் ஆய உடம்பு என்றனர். சரம் ஈரம் சேர்ந்து சரீரம் ஆயிற்று என்கிறார் ஆசிரியர்.

### சித்தன்

பிறர் நோகத்தான் நோவான் பிறர் மகிழத்தான் மகிழ்வான். அன்பும் அடக்கமும் அருளும் அறமும் கொண்டு தன்னுரிமை போற்றிப் பிறர் உரிமையை மதித்து நடப்பவனே சித்தன்.

### திருவருள்

திரு என்றால் உடம்பு அரு என்றால் உயிர் உள் என்றால் மூச்சுக் காற்று. இம்மூன்றும் சேர்ந்ததே திருவருள் விளக்கம் 'உடம்பால் அழியின் உயிரால் அழிவர்' உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே என்பதெல்லாம் சித்தர் வாக்குகளே. தேவர்களாக இருந்தாலும் உடம்பெடுத்துதான் தெய்வத்தோடு ஒன்ற முடியும்.

### உடம்பு தோன்றிய விதம்

ஆணின் சுக்கிலமும் பெண்ணின் சுரோணிதமும் சேர்ந்து உடம்பு தோன்றுகிறது. சுக்கிலம் ஒளி எனவும் விந்து எனவும் பெறும். சுரோணிதம் ஒலி எனவும் நாதம் எனவும் பெறும்.

ஒரு உடம்பு தோன்ற ஆடவன் தாது தருவதால் அவன் தந்தை என்றும், சுக்கிலம் எனப்படும் அப்புவைத் தருவதால் அப்பன் என்றும்; தாதுவை தந்தை வழி பெறுவதால் தந்தை என்றும் அத்தாதுவை அவன் தந்தைக்கு தந்தை தருவதால்; (தாது அவர் தந்ததால்) தாத்தா எனவும் அழைக்கப்படுகிறார். புல்லின் பனித்துளியில் ஒருபாதியே உடம்பாக உருப் பெறுகிறது.



ஒரு மடமாதும் ஒருவனும் ஆகி இன்ப சுகம்தரும்
அன்பு பொருந்தி உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணிதம் மீது கலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளி மாது பண்டியில் வந்து
புகுந்து திரண்டு பதம் அரும்பு கமடம் இதென்று
பார்வை மெய் வாய் செவி கால் கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர்வளர் மாதம் ஒன்பதும் மூன்றும்
நிறைந்து மடந்தை உதரம் அகன்று புவியில் விழுந்து

குழந்தையாக உருப்பெறுவதை பட்டினத்தார் கூறுகிறார். கரு தோன்றிய மூன்றாம் நாள் முதல் அது பிரணவை வடிவமாக இருப்பதை படங்கள் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார். உயிர்கள் தோற்றமெல்லாம் பிரணவ வடிவமாக இருப்பதை உணர்த்தவே விநாயகர் தோற்றம் உண்டாயிற்று போலும்.

இப்படி கிடைத்த உடம்பை உணவு மைதுனம் உறக்கம், பயம் அதிவேகப் பேச்சு செயல், விளையாட்டு ஆகியவற்றால் நட்டமடையச் செய்யாமல் செபம், தவம் ஆகியவற்றில் ஈடுபட வேண்டுமென்றும் கூறுகிறார்.

### ஆத்ம வடிவு

ஒரு ஆவின் ஒரு உரோமத்தை நூறு ஆயிரம் கூறு செய்தால் அந்த நூறாயிரம் கூற்றில் ஒரு பாகம்தான் ஆத்ம வடிவு என திருமந்திரம் 2011 வது பாடல் கூறுகிறது.

### தன்னை அறிந்திடும் தத்துவம்

ஐம்பெரும் சக்திகளாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன் ஆகியன அக்னி இவற்றுடன் 'விராட்டு' என்னும் பிரபஞ்ச முழுமையும் ஒரு புடை பெயர்ச்சியாய் திரண்டு பெற்றது இவ்வுடல். அண்டத்தில் உள்ள அனைத்தும் பிண்டத்தில் உள்ளது. இவற்றை 36 தத்துவங்களில் அடக்குவர். 96 தத்துவங்களாக விரிப்பர். 24 தத்துவங்களுக்குள் சுருக்குவர். மறைமொழிகளால் அனலூத அனுபவ அறிவு பிறக்கின்றது. அனுபவ அறிவு பிறந்தால் ஒருவர் தலைவனை அறியலாம்.

**கூர்தத் மெய்ஞானம்**

உடம்பில் மெய் சிலிர்த்தல் ஏற்படும் சில சமயங்களில் இறையன்பில் கலக்கும்போது உள்ளம் உருகும்போது உவகை பொங்கும் போது இது உண்டாகும். 'கூர்த்த மெய்ஞானம்' என்று இதை ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இப்படி ஒரு உடல் தொடர்ந்து 6 நாட்கள் பூரிக்குமானால் உடல் மதிக்க ஆரம்பிக்கும். 6 முதல் 12 வருடங்கள் இறையாக பயின்றால் ஒளியுடம்பு பெறலாம்.

உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி யபானனைச்
சிந்தித் தெழும்ப சிவனவ னாமே

திருமந்திரம் 732

என்ற பாடல் சிவன் தானே சிவமாகும் தத்துவம் கூறுகிறது.

மேலும் நூலாசிரியர் 3 மனை வெல்ல, திருமந்திரம் 442 ஆம் பாடலையும், மாரடைப்பு வராமலிருச்க திருமந்திரம் 615 ஆம் பாடலையும், ஆயிரமாண்டுகள் வாழ திருமந்திரம் 866 ஆம் பாடலையும் கூறியுள்ளார். இதுவரை கூறிய செய்திகள் எல்லாம் முதலாமதிகாரத்திலே கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் அதிகாரம் கேள்வி பதிலாய் உள்ளது. இதில் சித்த ஆற்றலின் தன்மை, அவற்றால் ஏற்படும் பயன் ஆறு ஆதாரங்கள் அவற்றில் உறையும் தெய்வங்கள், அவற்றிற்குரிய மந்திர எழுத்துக்கள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் மூச்சுப்பயிற்சியின் அவசியம் மூச்சை பயன்படுத்தும் விதம் பற்றியும் கூறியுள்ளார்கள். மேலும் பிராணன் அபானக் பற்றியும் அவற்றின் தொழிற்பாடுகள் பற்றியும் கூறி தீவன் சிவனாகும் நிலைபற்றி கூறியுள்ளார்கள். மேலும் 'திரு' ஆகிய உடம்பு 'அரு' ஆகிய உயிர், 'உள்' ஆகிய மூச்சுக்காற்று உள்ளபோதே இறைவனை அறிய வேண்டும் என்பதே திருவருள் விளக்கம் ஆகும்.



## திருவிடைமருதூர்க் கலம்பகம்

**- (பொன். முத்தையன்) தே.நி. விரிவுரையாளர்**
**ஆடவர் கல்லூரி, கும்பகோணம்**

பக்தி இலக்கியங்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படுவது திருவிடை மருதூர்க் கலம்பகம் ஆகும். இந்நூல், திருவிடை மருதூரில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு மகாலிங்கப் பெருமானைப் பாடிப் பரவுகின்ற இனிய சிற்றிலக்கியமாகும். திருவிடை மருதூர் என்னும் இத்தலம் தேவார மூவராலும், மணிவாசகர், அருணகிரியார், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, கருவூர்த்தேவர், சபாபதி நாவலர், அனந்த பாரதி, போன்றோரால் பாடப்பட்டதாகும். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரியற்றிய 'மருதவனப் புராணமும்' இத்தலச் சிறப்பினைப் பேசுகிறது. மருத மரத்தினைத் தல மரமாகக் கொண்டு, மல்லி கார்ச்சுனம், புடார்ச்சுனம் இவைகளின் நடுவில் உள்ளதால் இத்தலம் 'இடைமருதூர்' எனப்படுகிறது. வடமொழியில் மத்தியார்ச்சுனம்' என்பர். 'அர்ச்சுனம்' என்ற சொல் 'மருத மரம்' என்ற பொருள் தரும்.

இந்நூல், கடவுள் வாழ்த்தில் தொடங்கி, சமயாசாரியார் துதி, பட்டினத்தார் துதி, அவையடக்கம், இவைகளுடன் 105 செய்யுட்களில் அமைந்துள்ளது. இனிய நடையில் அமைந்துள்ள இச்செய்யுட்களின் வாயிலாக, இறைவனின் பல்வேறு பெயர்கள், அருளிப்பாடுகள், புராணச் செய்திகள், சுவை நலன்கள் போல்வன எடுத்தாளப்படுகின்றன. கலம்பக உறுப்புக்களாக, இக்கலம்பகத்தில் 'ஐம்பது' உறுப்புக்கள் சொல்லப்படுகின்றன. பிற கலம்பகங்களில் காணப்படாதனவாக, கிளிப்பயிற்று, கீரையார், குரவை, சல்லாபம், பள், வினாஉத்தரம் என்ற பகுதிகள் இந்நூலாசிரியரால் புதியனவாகப் படைக்கப்பட்டுள்ளன. 'தூது' என்ற தலைப்பில், இந்நூலில் அன்னம், குயில், கிளி, தென்றல், நாரை, நெஞ்சு, பூவை, மேகம் என்பன தனித்தனியே பாடப்பட்டுள்ளன. மேலும் நாணிக்கண் புதைத்தல், நற்றாயிரங்கல், வெறிவிலக்கல், முதலான அகத்துறைகளும், உயிர் வருக்கமோனை, அரதன மாலை, முதலான அணியழகுகளும் அமைந்து சுவை தருகின்றன.

இத்தலத்து இறைவர் மகாலிங்கப்பெருமான், இறைவி பெருநல மாமுலையம்மை. இந்நூலாசிரியர், இறைவனையும், இறைவியையும், 'பொய்யா மணிவிளக்கு' என்றும், 'நல முலைப்பிரமி' என்றும் குறிப்பிடுகிறார். இத்தலத்தின் தைப்பூச விழா, வரகுண பாண்டியன் மகாலிங்கரை வழிபட்டுப் பேறடைந்தது, பெருமான், இத்தலத்தில் தம்மைத்தாமே

அருச்சித்த சிறப்பு, போல்வன நூலின்கண் பாராட்டப்படுகின்றன. மேலும், பாசுபதம் தந்தது, பன்றிக்கோடு அணிந்தது, திரிபுரம் எரித்தது, பாற்கடல் ஈந்தது, கண்மலர் கொண்டு மாலவன் வழிபட்டது முதலான பல புராணச்செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நூலின் இடையிடையே, அணியழகுகளும், சான்ற உவமைகளும், வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களும் பயின்று வந்துள்ளன.

நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தில் இத்தல வினாயகரால் ஆண்ட பிள்ளையார், 'பாராண்ட யானை' என்று பாராட்டப்படுகிறார். 'சமயாசாரியார் துதியில் ஞான சம்பந்தர், எலும்பைப் பொன்னாக்கியது, திலகவதியாரால் திருநாவுக்கரசர் மேன்மை பெற்றது, பரவையார்பால், சுந்தரர் இறைவனையே தூதனுப்பியது போன்ற செய்திகளும், மணிவாசகர், ஊமைப் பெண்ணைப் பேச வைத்ததும் பாராட்டித் துதிக்கப்படுகின்றன. அப்பர் பெருமானுக்குத் திருவாளன் திருநீற்றை அளித்த தமக்கையார் திலகவதியாரை, இந்நூலாசிரியர், 'பெண்ணின் உயர் தமக்கை' என்ற அடை மொழி தந்து சிறப்பிக்கிறார். 'தந்தையர்கள், தம் பிள்ளைகளின் புன்மொழியினை மெச்சுதல் போன்று என் புன்மொழியினையும் ஆன்றோர் பாராட்டுவர் என்று உவமையழகுடன் இந்நூலாசிரியர் பாடியுள்ள அவையடக்கப்பாடல் நெஞ்சில் நிற்கும்.

பரம்பொருளாம் சிவபெருமானுடைய பல அருட்செயல்கள் இந்நூலாசிரியரால் பாராட்டப் படுகின்றன. இவ்வாறு பாராட்டுகின்ற இடத்தில் ஏழாம் பாடலில்,

> **மெய்ப்பொருள் தருகின்ற சிந்தாமணியே!**
> **மேன்மை விளங்கும் சிலப்பதி காரமே!**
> **இமவான் பெற்ற மணிமேகலையே! பெண்ணணி**
> **வளையாபதியே! செவியராக் குண்டல கேசியே!**

என்று பாடும்போது, இறைவன் பெருமையினையும், ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களையும் இணைத்துப் பாடியுள்ளது கற்றறிந்தார்க்கு இன்பம் நல்கும் விருந்தாம்.

'தூது' என்ற தலைப்பில் இந்நூலாசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் கற்பார் உள்ளம் கவர்வன. கனிச்சுவை தருவன எனலாம். ஒருபாடலில்,

> **"மடமை செறிதரும்என் மைம்மனப் பீடிகைமேல்**
> **இடர் அற மாதோடு எய்தினான் இன்னருள்செய்**
> **இடைமருதீசன், எனும்எழிற் கோபாலனே"**





என்கிறார் நூலாசிரியர். சிவனாம் மகாலிங்கப் பெருமானை இப்பாடலில் 'கோபாலன்' என்று பாடுவது கருதத்தக்கது. 'கோ' எனில் 'கண்' என்றும், 'பாலம்' எனில் 'நெற்றி' என்றும் கொண்டு, 'நெற்றிக் கண்ணுடையான்' என்று நயமாகப் பொருள் காண வைக்கிறார். சிவபெருமானுக்கு இந்நூலாசிரியர் 'கோபாலக் கோபாலன்' என்ற புதிய பெயரொன்றும் சூட்டி மகிழ்கிறார். இதோ அப்பாடல்,

> **கோபால னஞ்செய்த கொள்கையாற் சீதரனைக்**
> **கோபால னென்றுலகர் கூறுவதால் - கோபாலக்**
> **கோபால என்றுனையான் கூறுவேன் வண்மருத**
> **கோபால னைமெய்யுட் கொண்டு** - (10)

பசுமேய்க்கும் தொழிலைக் கொண்டுள்ளமையால் திருமாலைக் கோபாலன் என்பர் உலகோர். உயிர்களை நீ காத்திடலால், 'சிவனே! உன்னை, நெற்றிக் கண்ணுடைய சிவனென்றுயான் கூறுவேன்' என்பது இப்பாடலின் கருத்தாகும்.

எல்லாம் இறைவன் செயல். நம் செயலால் ஆவது ஒன்றில்லை என்பது மெய்யுணர்ந்த ஆன்றோர் முடிவு. இதனையே இந்நூலாசிரியர் ஒரு பாடலில் 'எல்லாம் இறைவனாம் இடை மருதீசன் செயல்' என்கிறார்.

> **ஆடச்செய் வானும் அசையச்செய் வானும்மெய் யன்புளத்தில்**
> **கூடச்செய் வானும் கொழிக்கச்செய் வானும்கை கூப்பு நரை**
> **நீடச்செய் வானும் நிலைக்கச் செய்வானுநான் நின்றுதனைப்**
> **பாடச்செய் வானும் இடைமரு தூரிலக பாலனன்றோ?** (13)

என்ற இந்த அழகிய பாடலின் கருத்து எவ்வளவு விளக்கமாக உள்ளது! இடைமருதீசனைக் கண்டு கை கூப்பி வணங்கினால் அவர்கள் வாழ்நாள் நீண்டுபோகுமாம்! யாரிதனை வேண்டாமென்பார்?

'மெய்யன்பர்களையே இறைவன் விரும்புகிறான்' என்பர் அடியார்கள். உள்ளத்தில் கள்ளமில்லாது பள்ளம் நோக்கிப் பாய்கின்ற வெள்ளம்போல் பக்தியால், பரமனைப் போற்றிப்பாட வேண்டும் என்பார். எல்லாம் வல்ல சிவனாம் இடை மருதூராளியை, நாம் எப்படிப் பாராட்ட வேண்டும் தெரியுமா? இதோ அவர் சொல்வதனைக் கேளுங்கள் "மருத நகர்க்கிறையே! மாற்றுயர்ந்த பொன்னே! போற்றலுறும் மெய்ஞ்ஞான பூரணமே! சான்றறிய வித்தகமே! யோக விளக்கே!" என்று அவனை நாம் மெத்தப் பாராட்டினால் அவன் நம்மீது பேரன்பு கொள்வானாம். நம்மை நெருங்கி வருவானாம்.

இந்நூலின்கண், இன்பச் சுவையாம் அகச்சுவைக்குப் பஞ்சமில்லை. 'இடைச்சியார்' என்ற கலம்பக உறுப்பினைப் பாட

வருகின்ற நூலாசிரியர் பின்வருமாறு பாடுகின்றார். இப்பாடலின் பொருள் வெளிப்படை

"படிப்பால் உயர்ந்த புலவர் நிதம்
பரவும் பெருமா முலையெனும்பைங்
கொடிப்பால் மருவப் பசுபதியாம்
குலகற் பசும்வாழ் மருதூர்க்கண்
குடிப்பா லெனவே யதிகவிலை
கூறிவிற்கும் இடைச்சியர் நும்
மடிப்பால் மேலார் குடப்பாலுண்
மகிழ்வாய்த் தரில்நாம் வாங்குவமே"

'ஊசல்' என்ற தலைப்பில் வருகின்ற ஒரு பாடலின் கருத்து, சுவைத்து மகிழ்தற்குரியது. தல இறைவனாம் மகாலிங்கப் பெருமானையும் இறைவியாம் பெரு நலமாமுலை அம்மையையும் ஒரு சேர ஊசலில் வைத்து, 'ஊசலாடுக' என்று கூறும் முகமாக, இந்நூலாசிரியர், பல தத்துவக் கருத்துக்களை அழகுற அமைத்துப் பாடுகிறார். "மகாலிங்கப் பெருமானை! சஞ்சலம் மிக்க, பிறப்பு எனும் சுழலில் ஆழ்ந்து எக்காலமும் துன்பமடைகின்ற ஜீவான்மாக்களின் தாபம் நீங்குமாறு நீவிர், உமையம்மையுடனிருந்து ஊசலாட வேண்டும்! பஞ்சாக்கரமென்ற பலகை வைத்து, அதன்கண் 'அன்பர் தோத்திரம்' என்ற கயிறு கொண்டுகட்டி, 'வேதாகமம்'என்ற பீடத்தில் ஏறி, உமையவளுடன் அருகமர்ந்து, மகாலிங்கப்பெருமானே! ஊசல் ஆடுக!" என்ற இப்பாடலின் கருத்துக்கள் எத்துணை நுட்பம் சான்றவை?

சிற்றிலக்கியங்களில், 'அணிநலம்' அமையப்பாடுதல் என்பது இயல்பே. 'புலவர்களின் புலமை வளத்திற்கேற்ப, இச்சுவை அமையும் என்பர். இத்திருவிடை மருதூர்க் கலம்பகத்தில், 'அணிகள் பல அமைந்துள்ளன. 54 வது பாடலில் 'அரதனமாலை' என்ற அணி அமைந்துள்ளது ஞாயிறு முதலாக வருகின்ற கிழமைப் பெயர்களை வைத்துப் புலவர் நயமான இலக்கியச் சுவையினைத் தருகின்றார். பாடலை முதலில் காண்போம்.

வருஞாயிற் றைந்நிகர் மெய்!திங்கள்
போலும் வதனம்! செவ்வாய்
விருமறை ஓங்கும்! விரும்புதன்
கையில் வியாழப் பணி!
மருவும்வெள் ளிப்பொருப் பார்ந்தே
பலவினை மாற்ற சனி
பொருவப் புன்றீர்க் கருண்மரு
தாவென்பர் புங்கவரே! (54)





இப்பாடலில், முதலில் வருகின்ற ஞாயிறு, திங்கள் என்ற சொற்களுக்கு முறையே சூரியன், நிலவு என்று பொருள். பின்னர், 'விரும்பு தன்கையில் வியாழப்பணி' என்று படிக்கவேண்டும். கோள்களில் ஒன்றான வியாழனுக்குப் 'பொன்' என்ற பெயருண்டு. இங்கு 'பணி' என்ற சொல் அணிகலனைக் குறிக்கும். கிழமையை அன்று. அடுத்து, 'மாற்ற சனி' என்பதனை 'மாற்று அசனி' எனப் படிக்க வேண்டும். 'அசனி' எனில் 'இடி' என்பது பொருள். ஞாயிறன்னமேனியும், திங்களன்ன முகமும், மறைபோலும் செவ்வாயும் கொண்டு, கையில் பொன்னணி பூண்ட வெள்ளி மலையினனாம் சிவனை அடைந்தால், அவன், நம்பாவினைகட்கு இடிபோன்று அமைந்து விளங்குவான் என்கிறார்.

'தைப்பூச விழா' தமிழக விழாக்களில் மிகச் சிறப்பானது. இவ்விழாவினைத் திருஞானசம்பந்தர், இடை மருதூர்ப் பதிகத்திலும், மயிலைப் பதிகத்திலும் குறிப்பிடுவார். திருவிடை மருதூர்க் கோயிலைக்கட்டிய 'வீரசோழன்' என்பவனே, இக்கோவிலில் 'தைப்பூச' விழாவினையும் தொடங்கி வைத்தான். பத்து நாட்கள் நடைபெறுகின்ற இப்பூச விழாவின் நிறைவு நாளில், அருள்மிகு மகாலிங்கப்பெருமான், அம்மையுடன், இடபவாகனத்தில் எழுந்தருளி வீதிகளிலும் வலம் வந்து காட்சி தருவார். பின்னர் காவிரிக் கரையில் பூச தீர்த்த மாடுவார். பூச தீர்த்தச் சிறப்பினையும், விழா மாண்பினையும் அடியார்கள் பலர் பலவாறு சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

திருவிடை மருதூர்க் கலம்பகமும், இவ்விழாவினைப் போற்றிப்பாடுகின்றது. இதன்முன், எவரும் பாடியிராத புதுமையான வகையில் இது பாடப்பட்டுள்ளது. "ஆறு தலைக்கொண்ட மகாலிங்கத்தின் பெருமையினைப் பேசாத நா வெறிகொண்ட நா! பிரமனும் வந்து கண்டு மகிழும் தைப்பூச விழாவினைக் காணாத கண்கள் துன்பம் மிக்கவை" என்றார். நான்கே அடிகளில் அமைந்துள்ள நயமான பாடல் இதோ!

'பிஞ்சு மதிச்சடிலப் பெருமான் மருதேத்தார்
வெஞ்சரவர் நாவோவெறிநாவே! - கஞ்சன்மகிழ்
தென்கவின் தைப்பூசத் திருவிழாக் காணாத
கண்களோ கூறுபழங் கண்" (64)

'குரவை' என்ற பகுதியில், குரவையாடும் பெண்களைப் பார்த்தது,

'பதியுணர்த்தும் உயர் தமிழ் மறைத்தொகுதி
படியெனக் குரவை இடுமினோ!'

என்று பாடும் இடம் சுவை மிக்கது. சான்றோர் பாடிய தேவாரம் முதலான தமிழ் வேதங்களைப் படிக்கவேண்டும்' என்று

சொல்கிறார் நூலாசிரியர். ஏனெனில், இத்தகு பாடல்களே, நமக்குப் பதியாம் இறைவனை உணர்த்துவன' என்பதால் இந்நுட்பமான கருத்து இவ்வரிகளில் அமைந்துள்ள அழகினை உணர்ந்து பயில வேண்டும்.

'உயிர் வருக்க மோனை' என்ற அணியழகு இந்நூலில் காணப்படுகிறது. இஃது என்னவெனில், நெடுங்கணக்கில் 'அ' முதல் 'ஔ' வரை வருகின்ற பன்னிரண்டு எழுத்துக்களையும் பாடலடியின் முதற்சீரில் வைத்துப் பாடும் மரபாகும். இந்நூலாசிரியர் இந்த அணியினை இந்நூலின் 67 வது பாடலில் பயன்படுத்தி நம்மைக் களிப்பூட்டுகிறார்.

"அருள்பொழி நயனத் தற்புத நாயக!
ஆரணம் பராவு மகார வாச்சியே!
இமயமா மகளுக் கிடந்தரும் வித்தக
ஈறிரு முகன்மாற் கெட்டாச் சோதிய!
உவமையில் பொருள்முறீக் கோறிய நற்றவ!
ஊனமொன் றறியாதெளிற் - பரானந்த!
எண்டிசை யோர்நித மேத்தும் தயாபர!
ஏகநா யகனெனு மிடைமரு தீச!
ஐயா னனம்பெறும் ஆனந்த மூர்த்தி!
ஒப்புயர் வில்லா தோங்கும் பரம!
ஓரா யிரமுகத் தொருநதி வேணிய!
ஔவிய மகற்றியா னெனவறை மனனே! ( )

இவ்வாறே 'மடக்கு' முதலான பிற அணி நயங்களும் இக்கலம்பகத்தில் பயின்று வந்துள்ளன.

சுருங்கச் சொன்னால், சொல் வளமும், பொருள் அழகும், அணி நலனும், ஒருங்கே அமையப் பெற்ற இக்கலம்பக நூலைப் படிப்போர் பயன்பெறுவார் எனலாம். இத்தகு, சிறந்த நூலினை இயற்றியார் 'இராமசாமிச் செட்டியார்' என்பாராவர். 'திரு எவ்வுளூர்' என்னும் ஊரினர். சிவபக்தர். இவர் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியாக இருக்கலாம் என்று இந்நூலின் முதற்பதிப்பின் மூலம் அறிய வருவதாக, இந்நூலின் குறிப்புரையாசிரியர் வித்வான் த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூறுகிறார். இந்நூலாசிரியரின் பிற நூல்களாக கழுக்குன்றக் கலம்பகம், 'சிறுத்தொண்டர் கீர்த்தனை' போல்வன என அறியமுடிகிறது. திருவிடை மருதூர்க் கலம்பகம் - என்ற இந்நூல் 1963 இல் மீண்டும், பதிப்பிக்கப் பட்டுள்ளது. வித்வான் த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் குறிப்புரையுடன், இந்நூல் திருவாவடுதுறை யாதீனத்துத் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி தேவஸ்தான வெளியீடாக வந்துள்ளது.





மருதவாணராம் இடை மருதரை,
தேயாத சீர்த்திக் திகழ்மருதீ சன்பதத்தை
வாயார வாழ்த்தி வணங்குவோர்க் - கேயாப்
பவநோயும் தீரும்! பகர்கால னார்செய்
அவநோயும் தீரும் அறி" (64)

என்று இந்நூல் பாடுகிறது. பழவினை தீரும் எமபயம் இல்லை. இவையாவும் இடைமருதனை வழிபடுவதால் என்கிறது இப்பாடல். யார்தான் இதனை வேண்டாமென்பார்? கனியினும் சட்டி பட்ட கருப்பினும் இனிக்கும் இடை மருதூர்க் கலம்பகத்தினைச் சுவைப்பாம்! அவனையும் கண்டு மகிழ்வாம்! வாருங்கள்.

## தேன் நாவால் பேசுகின்றோம்

- பாவலர். கருமலைத்தமிழாழன்

யார்வீட்டுக் கூரையிலும் அமரு கின்றாய்
யார்வீட்டு உணவினையும் உண்ணு கின்றாய்
பேர்சொல்லி சுற்றத்தை அருக ழைத்துப்
பெற்றதனைப் பகிர்ந்தளித்து மகிழு கின்றாய்
ஊர்சுற்றித் தூய்மையினைச் செய்யும் காகம்
உன்னைப்போல் பரந்தமனம் எமக்கோ இல்லை
சீர்போலே சாதியினை நெஞ்சில் பூட்டி
சீர்திருத்தம் நாவாலே பேசு கின்றோம்!

தவழ்ந்துவரும் பைங்குழவி மழலைப் பேச்சாய்த்
தழுவலிலே இன்பத்தைக் கூட்டு கின்றாய்
எவரிடத்தும் எப்போதும் காழ்ப்பே யின்றி
எல்லோர்க்கும் மகிழ்வள்ளி வீசு கின்றாய்
சுவர்வேலி பகைநாடு தடைக ளின்றி
சுகமளிக்கும் இளந்தென்றற் காற்றே உன்றன்
தவஉள்ளம் எமக்கில்லை: சூதை நெஞ்சுள்
தவழவிட்டுத் தேன்நாவால் பேசு கின்றோம்!

கார்முகிலாய் வெண்முகிலாய் நீலம் காட்டிக்
கருக்கொண்டு மழையாகப் பெய்யு கின்றாய்
யார்வீட்டு முற்றமென்று பார்த்தா நீயும்
இரவுபகல் பாராமல் கொட்டு கின்றாய்
வேர்விட்டுப் புல்முளைக்க பயிர்செ ழிக்க
வேறுபாடு நீயிங்கே பார்த்த துண்டோ
மார்தட்டும் நாங்களிங்கே கனிவுப் பேச்சு
மறைவாகக் கொடுஞ்செயலே செய்யுகின்றோம்!

# திருவிளையாடற் புராணத்தில் வழக்காறுகள்

பா. சிவநேசன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.
தமிழ் விரிவுரையாளர்,
அரசு ஆடவர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.

மக்களிடத்தில் தொன்று தொட்டுப் பலகதைகளும், பழக்கவழக்கங்களும் நிலவி வருகின்றன. அவ்வாறு வருவன வழக்காறுகள் எனப்பெறும். அத்தகையவற்றை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்தில் வழக்காறுகள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம், நரி பரியாக்கிய படலம், மண் சுமந்த படலம் எனும் மூன்று படலங்களில் இடம் பெற்றுள்ள வழக்காறுகள் இங்குத் தொகுத்துத் தரப்பெறுகின்றன.

## 1. தீட்சைக்குரியவர் தேர்வு

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில், தீட்சைக்குரிய மாணாக்கரைச் சோதிப்பது சுட்டப்பட்டுள்ளது. தீட்சைக்குரிய வரை முதல் நாளிரவு தருப்பைப் புல்லிலான படுக்கையில் துயிலச் செய்வர். தீட்சைக்குரியவர் அப்பொழுது கனவு காணுவர். அவர் கண்ட கனவு நன்மையுடையதாயின், தீட்சைக்குரியதான தகுதியைப் பெறுவர். கனவு தீமையுடையதாயின், அதன் பொருட்டு ஆகமத்தில் கூறப்பட்ட கழுவாய் புரிந்து தீட்சை கொடுப்பர்.

காலை முங்கனாக் காட்சியு நிமித்தமுங் கடிந்தார்
சில மானவர் செவ்விதேர் தேசிகன் என்னை
மூல வாகமம் ஓதினான் முறுக்கவிழ் கமுநீர்
மாலை சாந்தணிந்து அடியின்மேல் வன்கழல் வீக்கி (44)

எனும் பாடல் மணிவாசகர் உபதேச வரலாற்றில் அமைந்தது. ஆதீனத் தலைவர்கள் தம் சீடர்களுக்குத் தீட்சை செய்வது மரபாக இருந்து வருகின்றது. குருக்கள், தேசிகர், சைவச் செட்டியார், சைவப்பிள்ளைமார் முதலாயினோர் சிவ பூசை எடுத்துக் கொள்வதற்கு முன் தீட்சை பெறுவது வழக்கம். சிவ பூசை பெறும் விழா ஆச்சாரியாபிடேகம் என்று மூன்று நாட்கள் நடைபெறும். அப்போது சமயதீட்சை, நிர்வாண தீட்சை முதலியன நிகழும். இதனை நோக்க இவ்வழக்கம் மக்களிடம் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ளது எனத் தெரிகிறது.

## 2. வாளுக்கு நஞ்சு பூசுதல்

பழங்காலத்தில் முக்கியமான போர்க்கருவிகளுள் ஒன்றாக வாள் விளங்கியது. போர் வீரர் பகைவரைத்தாக்க இதனைப்





பெரிதும் பயன்படுத்துவர். அவ்வாளில் நஞ்சு பூசும் வழக்கமும் இருந்துள்ளது. அவ்வழக்கத்தைப் பரஞ்சோதியார்,

"நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேன் அல்லேன்" (55)

என்று மணிவாசகர் குருநாதரைக் காணாது புலம்புமிடத்து காட்டியுள்ளார்.

### 2 – 1 வீரக் கழலணிந்து வாளேந்துதல்

பகை வெல்லப் போர் செய்வோர், வீரக்கழலணிந்து வாளேந்திப் போர் புரிவர். அதுபோன்று அடியார்களின் பிறவிப் பகையை அறுக்க இறைவன் கழலணிந்து வாளேந்தினான் என்பர் பரஞ்சோதியார்.

'வான நாயகன் ஏந்திய மறையுறை கழித்த
ஞான வாள்புற இருளையு நக்கிவாள் எறிய்ப' (37)

என்று நரிபரியாக்கிய படலத்தில் அமைந்துள்ளது.

## 3. கயிறுமாறுதல்

பசு, எருமை, குதிரை முதலியனவற்றை வாங்குவோர், அவை தமக்கு உரிமையானமைக்கு அடையாளமாக வேறு கயிறு பூட்டிக் கொள்ளுதல் மரபு. இவ்வணிக வழக்கை, குதிரைச்சேவகனாக வந்த சிவ பெருமான், பாண்டியனிடத்துக் குதிரைகளை ஒப்படைத்த பின்னர், கயிறு மாற்றிக் கொள்ளக் கூறினான் என்ற விடத்துக் காணமுடிகிறது.

இன்னவாம் பரிகள் என்பால் இன்றுநீ கயிறுமாறி
நின்னவாக் கொள்ளு நீநான் இன்னவாம் பரியே நாளை
என்னவா யிருந்த வேணு மென்குமுன் தனக்குங் கொண்டு
மன்னவா கருமம்இல்லை பரிவிலை வழக்கீது என்றார் (83)

என்பது பாடல்.

### 3 – 1 குதிரைகளைப் பூசித்தல்

வேந்தர்கள் குதிரைகளை வாங்கும் பொழுது குதிரைகளைப் பூசித்து வணங்கிக் கயிறு மாறுவர். இவ்வழக்கு இன்றளவும் மேற்கொள்ளப் பெறுகின்றது. இதனைப் பரஞ்சோதியார்

'பரியைப் பூசனஞ்செய்து இறைஞ்சி' (120)

என்று நரிபரியாக்கிய படலத்தில் கூறியுள்ளார்.

### 4. கூலியாட்கள் பெயர்ப்பதிவு

கூலியாட்கள் தம்பெயரை எழுதிக்கொள்ளச் செய்தல். அலுவலர்கள் கூலியாட்களுக்குரிய பணியளவினை அளவிடுதல் முதலியன பொதுப் பணியில் உள்ள வழக்குகள். இவ்வழக்கு,

"வெறித்த டக்கைமத யானை மந்திரிகள்
வேறு வேறுபல குடிகளும்
குறித்தெ டுத்தெழுதி எல்லை யாட்டுஅளவு
கோல்கி டத்திவரை கீறியே
அறுத்து விட்டு நகர் எங்க ணும்பறை அறைந்து
அழைத்துவிடும் ஆளெலாஞ்
செறித்து விட்டுஅவ ரவர்க்குஅ ளந்தபடி
செய்மின் என்று வருவித்தனர்" (3)

எனும் பாட லில் காணப்படுகிறது.

### 4 – 1 கூலியாட்களின் சீழ்க்கைஒலி

வாயைக் குவித்து எழுப்பும் சீழ்க்கை ஒலியால் காற்றை வருவித்தல் பணியாளரிடையே காணப்படும் ஒரு வழக்கு. அதனைப் பரஞ்சோதியார்,

"வேலையினால் அறவருந்தி இளைத்தார்போல்
மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியால் காற்றழைத்து" (31)

என்று மண்சுமந்த படலத்தில் உணர்த்தியுள்ளார். இவ்வழக்கு இன்றும் பணியாளரிடையே உள்ளது. அவர்கள் மகிழ்ச்சி வெளிப்பாட்டின் போதும், பொழுது போக்காகவும் சீழ்க்கை ஒலியை எழுப்புவர்

திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் தொன்றுதொட்டு மக்களிடம் உள்ள வழக்காறுகளைக் கூறியுள்ளார். அவற்றுட் சில இன்றளவும் பின்பற்றப் படுகின்றது. அவற்றில் வாளில் நஞ்சு பூசுதல் ஒன்றே வழக்கொழிந்ததாகத் தெரிகின்றது. புராணம் முழுமையும் இந்நோக்கில் ஆராய்ந்தல் பெரும்பயன விளையும்.



## பாவேந்தர் நினைவுகள்

டாக்டர் மு. துரைசாமி, மலேசியா

(சிலம்பு - 71, பரல் - 7, பக்.162ன் தொடர்ச்சி)

### 19. நூல் அன்பளிப்பு

மலாயா மருத்துவக் கழகமென் பெயரை
நிலையாய்ப் பதிவு செய்ய நீண்ட
காலம் எடுத்த காரணத் தாலே,
அறுபத் திரண்டின் இறுதிப் பகுதியில்
மைசூர் 'ரெயில்வே' மருத்துவ மனையில்
மருத்துவ னாக இருக்க நேர்ந்தது.
மறுவாண் டினிலே மார்ச்சு மாதம்
திரும்பினேன் மீண்டும் சென்னை நகர்க்கு.
வந்ததும் சென்றேன் வழக்கம் போல
அந்தி வேளையில் ஐயாவைக் காண.
அதிக மகிழ்ச்சியில் ஐயா இருந்தார்.
புதிதாய்க் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்'
'மணிமே கலைவெண் பா'என இணையாய்
இரண்டு நூற்களை எனக்குத் தந்தார்
இரண்டிலும் தமது கையால் எழுதி.
மணிமே கலைவெண் பாவைப் பணிவுடன்
இரந்தார்க் கீந்தேன்: இழந்தேன்! கண்ணகி
புரட்சிக் காப்பியம் பொறுப்புடன் வைத்துளேன்.
ஐயா அவர்களின் கையெழுத் தை.அவர்
கையால் வரைந்த கலையைக் காண
ஆவல் கொண்டோர்க்(கு) அளிக்கிறேன்
ஓவியம் போன்றஅவ் வுயர்கலை தனையே!

## 20. பிரியா விடை

பிறந்து வளர்ந்த
பெருநாட்டை விட்டுப்
புறப்பட்டு நான்மல்ாயா
போகின்ற நேரம்,
அறுபத்து மூன்றில்
மலாயா அரசும்
இறுதியாய் 'வீசா'
எனக்களிக்க வந்ததாம்.
சூன்மாதம் தன்னில்
சுறுசுறுப் பாகவே
நான்போகு தற்கு
நலமாய் எலாமுடித்தேன்.
போகின்றேன் என்றறிந்த
போதிலிருந் தேநாளும்
நோகின்ற உள்ளந்தான்
உற்றேன் நொடிதோறும்.
தன்னந் தனியாய்ப்
பிறந்தேன்; தமிழ்நாட்டில்
என்றன் உறவென்றும்
யாருமப்போ தில்லை.
பிறந்தவுடன் தந்தையோ
விட்டுப் பிரிந்தார்.
வறுமையிலே தாய்எனைத்.தாய்
வீட்டில் வளர்த்தாள்.அப்
பெற்றவளைப் பின்இழந்தேன்
பேதைப் பதினைந்தில்.
கற்றபதின் மூன்றைக்
கழித்தேன் விடுதிகளில்.
கல்லூரி யிற்படித்த
காலத்தில் மாணவர்கள்
எல்லாம் விடுமுறையில்
ஏக்கத்தோ(டு) ஓடிடுவர்
தந்தைதாய் தம்பிஎனும்
தத்தம் உறவுகளைச்
சிந்தை மகிழவே
சேர்த்தணைத்துக் காண
விடுமுறை என்றால்
விடுதியே காலி.
விடுவதில்லை தண்ணீரை:
மின்னிணைப்பும் இல்லை.
இருண்டும் வறண்டும்
இருக்கும் விடுதி:
இரண்டுமா தங்களுக்கு
ஈயுமிருக் காதங்கே!
சிற்றூரில் என்பாட்டன்
சேர்த்துவைத்த நஞ்சை புஞ்சை



சற்றே இருந்தாலும்
சார்ந்தோர்தின் றேப்பமிட்டார்!
எங்கேநான் போவேன்?
எனக்கென்றோர் வீடு,சுற்றம்
அங்கெங்கும் இல்லா
அநாதைநான் அன்றோ?
விடுமுறைக்கா லத்தும்
தொடர்ந்துநான் அந்த
விடுதியிலே யேதங்க
விண்ணப்பம் 'வார்டனி'டம்
சென்று கொடுப்பேன்.
திறந்துகுழாய்த் தண்ணீரும்
மின்னிணைப்பும் தந்தளிப்பார்
மேல்மாடி ஒன்று.
வெளியே உணவு,
விடுதியிலே தங்கல்.
எளியேன் இரண்டுமாதம்
இங்ஙன் தனித்திருப்பேன்.
வாய்த்தஅந்தச் சூழலிலே
வாடிமுகம் நானிருந்தால்,
'நோயா? பசியா?
நுவல்'எனக்கேட் பாரில்லை!
செத்துத் தொலைந்தாலும்
தேடவுமங் காருமில்லை!
இத்தகை வாழ்வே
இளமையில்நான் கண்டதம்மா!
விட்டுப் பிரிவதற்கு.
வேதனை கொள்வதற்கு,
ஒட்டிப் பிறந்தோர்,
வேதனை கொண்டோர்கள்,
உற்றார், உறவென்(று)
ஒருவருமில் லைஎனினும்
பற்றுமிக வைத்திருந்த
பாவேந்தர் தம்மையும்,
பள்ளிப் பருவத்தில்
பாவேந்தர் பாடலினால்
கொள்ளையார்வம் எந்தமிழ்மேல்
கொண்டு வளர்ந்தஅந்தச்
சூழலையும் விட்டுவரச்
சூழாதோ துன்பந்தான்,
வாழ்வு தரமலாயா
வாவென் றழைக்கையிலும்!

### பள்ளிப் பருவத்தில்

ஏழேழாம் ஆண்டினிலே,
என்பதினான் காம்வயதில்,
தாழாத் தமிழுக்குப்
பாவேந்தர் தந்த
'தமிழியக்கம்' தாங்கியுள்ள
நூற்றிருப தெல்லாம்
அமைவாய் மனப்பாடம்:
ஆவேசத் தோடிசைப்பேன்!

நள்ளிரவில் தூக்கத்தில்,
நான்விழித்(து)அப் பாடல்களைத்
தெள்ளத் தெளிவாய்
உறங்கவே பாடிடுவேன்.
பள்ளியிலே கற்றுவந்த
பாடமெனஎன் தாயும்
உள்ளிய வாறே,
"உறங்கப்பா, காலையிலே
பாடத்தை எல்லாம்
படித்துக் கொளலாமே
கேடப்பா, தூக்கமும்
கெட்டால் உடற்கு" என்பார்!
(அல்லும் பகலும்
அதிகம் படிப்பவர்க்(கு)
எல்லாம் பிடித்திடும்
பைத்தியம் என்றஞ்சும்!)
அல்லும் பகலும்
அதிலுள்ள பாடல்களைச்
சொல்லி மகிழ்ந்திடுவேன்;
தோழர்க்கெல் லாம்சொல்வேன்.
அன்ன விதத்தினிலே
அந்தத் 'தமிழியக்கம்'
சின்ன வயதிலே யென்
சிந்தையைப் பற்றியதாம்.
பாவேந்த ரைநேரில்
பார்த்ததில்லை அந்நாளில்.
பாவேந்தர் பாட்டினிலே
பார்த்தேன் அவர்முகத்தை!
பின்னாளில் பார்த்துவக்கும்
பேறு கிடைத்தபோது
அன்னார் முகத்தில்அப்
பாட்டின் பொருள்பார்த்தேன்!
அந்த முகத்தை
அடிக்கடி போய்ப்பார்த்து
வந்த மகிழ்ச்சிக்கும்
வந்ததே ஓர்முடிவு!
நாட்டை விட்டுப் போகின்ற
நாள்நெருங்கப், பாவேந்தர்
வீட்டுக்குச் சென்றேன்
விடைபெற்றுக் கொள்வற்கே.
என்சூழல் பற்றி
எதுவும் அவரறியார்.
துன்பம் தனிமையெனச்
சொன்னதிலை நான்யார்க்கும்.
தாங்கா மனத்துயரைத்
தாங்கியே சென்றேற்கோ,
ஆங்கே பெரிய
அதிர்ச்சி இருந்ததம்மா!
முன்னிருந்த வீட்டிலே
முன்போல் இல்லாமல்,





பின்னிருந்த சின்ன
புறவீட்டி லேயிருந்தார்.
வாடகை கட்ட
பெரிய வளமனைக்குக்
கூடவில்லை என்றே
குடிபெயர்ந்தார் பின்வீட்டில்.
என்ன கொடுமையம்மா!
எந்தமிழர் வீட்டிலெல்லாம்
குன்றாக் 'குடும்ப
விளக்கு'க் கொளுத்திவைத்த
இந்தப் பெருங்கவிக்கா
இன்ன அவலநிலை?
தந்தார் 'தமிழியக்கம்'
தாமிஃது அடைவதற்கா?
பாவேந்தர் நூலைவிற்றுப்
பல்லோர் கொழுத்திருக்க,
நாவேந்தச் சோறில்லா
நாளும்இவர் காண்குவதோ?
தாழ்ந்த தமிழகத்
தின்தலை தான்நிமிர
வாழ்ந்தபா வேந்தர்க்கு
வாய்த்த நிலையிதுவோ?
என்றெலாம் எண்ணி
உளமெலாம் நொந்தபடி
நின்றஎன் கண்முன்
நிறைந்தஅக் காட்சியோ:
நான்சென்ற நேரம்
நளிர்மாலைப் போதாகும்.
வான்கூரை யாக,
மணல்தரையே மாளிகையாய்,
வெட்ட வெளியில்,பா
வேந்தர்நாற் காலியின்மேல்
உட்கார்ந்து மேசைமேல்
ஒன்றெழுதிக் கொண்டிருந்தார்.
கண்ணீர் பெருகக்,
கரகரத்த தோர்குரலில்,
உள்நீர்மை யையடக்க
ஒண்ணாம லேயழுது
அன்னார் நலங்கேட்(டு)
அறிந்தபின்,நான் போம்சேதி
சொன்னேன்; சொலக்கேட்டுப்
பாவேந்தர் சொன்னார்கள்.
"சிங்கப்பூர் தன்னில்
திராவிடச் செம்மலெனத்
தங்கத் தமிழராம்,கோ.
சாரங்க பாணியெனும்
நண்பர் இருக்கின்றார்;
நம்மவர். நீர்அவரைக்
கண்ட பொழுதில்
கவலை யெலாம்விடுக.

ஆனவை எல்லாம்
அவர்செய்(து) உதவுவார்.
போனபின் என்றனக்குப்
போடுக அஞ்சல்" என்று
அன்னார்க்(கு) அறிமுக
அஞ்சலொன் றைஎழுதி
என்கையில் தந்தார்.
எழுந்தேன் விடைபெறவே.
நின்றேன் நெடுநேரம்,
விட்டுவரக் கூடாமல்;
என்றன் முகத்தை
இருகைக ளால்பொத்திச்
சின்ன பையனைப்போல்
தேம்பி அழலானேன்.
"என்ன, குழந்தையைப்போல்
இப்படித் தேம்புவதா?
எல்லாமே நல்லபடி
யேநடக்கும்; ஏன்கவலை?
நல்லா இருப்பீர்;
நலமாகப் போய்வருக"
என்றே விடைதந்தார்.
என்னுயிரை அங்குவிட்டுப்
புன்னுடலைத் தாங்கிப்
புறப்பட்டு நான்நடந்தேன்!
என்னென்ன மோதுயரம்,
ஏக்கம் இருக்கையிலும்,
சின்ன அகவையிலே
என்னைவிட்டுச் சென்றஎன்
தந்தையைப்போய்க் காண்கின்ற
வாய்ப்பு தனைநினைத்தேன்.
அந்த நினைப்பெனக்கோர்
ஆறுதல் தந்ததம்மா!
பாவேந்த ரோடன்(று)
எடுத்த படம்,பாட்டின்
மாவேந்தர் எற்கு
வழங்கிய காப்பியங்கள்
'கண்ணகி (யின்)புரட்சிக்
காப்பியம்', பாவலர்க்கு
வெண்பா விருந்தாம்
'மணிமே கலைவெண்பா'
பாப்புனைய ஏற்ற
பயிற்சி பெறவேண்டி
யாப்புக்குக் 'காரிகை'யை
யான்கற்(று) எழுதிவைத்த
சின்னக் குறிப்பேடு.
மாற்றச் சிலதுணிகள்
என்பவையே என்உடைமை!
பையில் இவைவைத்து,
வானூர்தி ஏறினேன்
வண்டமிழ் நாட்டுக்கு
நானூறு நன்றி
நவின்று!



## 21. முன்னும் பிறந்ததில்லை, பின்னும் பிறப்பதில்லை.

மலாயாநான் வந்தபின்
ஏழெட்டு மாதம்,
மலாக்கா தனைச்சேர்ந்த
தம்பினில் வாழ்ந்துவந்தேன்.
சின்னஅவ் வூர்வந்து
சேர்ந்ததும்,பா வேந்தருக்கு
அன்னார் நலம்வினவி
அஞ்சல் எழுதினேன்.
மாதங்கள் சென்றும்
வரவில்லை ஓர்பதிலும்.
யாதும் அவர்பற்றி
யானறியக் கூடவில்லை.
வந்த புதுவிடத்தில்
வந்தன துன்பங்கள்
நொந்தென் மனமும்
நொடியும் படியாக,
கள்ளம் இலாமனமும்,
காசைப் பெரிதாக
எள்ளளவும் எண்ணா
இயல்பும், எளிதினிலே
எல்லாரை யும்நம்பும்
என்குணமும், அப்போது
வல்லார் எனைஏய்க்க
வாய்ப்பாய் அமைந்தனவே!
தம்பினை விட்டொருவர்
தந்ததோர் வாக்கினை
நம்பிக் கிளந்தானை
நாடியே வந்தேன்
அறுபத்து நான்கின்
தொடக்கத்தில், அன்று,
பொறுப்பும் கொடுத்தெனக்கு
நன்மை புரிந்தார்
அரசலிங்கம் என்னும்
அருங்குண நண்பர்.
அரசனைப்போல் தான்வாழ்ந்தார்
அன்னார்அந் நாட்களிலே.
பொன்மணல் என்று
பொருள்படும் 'பாசிர்மாஸ்'

என்னும்அயல் ஊரினில்
        எல்லா வளத்தோடும்!
நானொருநாள் நண்பகல்அந்
        நண்பரது வீட்டிலுண்டு
வானொலியைக் கேட்கையிலே
        செய்தி வழங்கியவர்,
பாவேந்தர் பாரதி
        தாசன்மறைந் தார்என்று
நாவே நடுங்க
        நவின்றாரே என்சொல்வேன்!
கண்ணீர்தான் ஊற்றெடுக்கக்
        கல்லாய்ச் சமைந்துபோனேன்.
நண்பரோ என்னஎன்றார்.
        நான்வாய் திறக்கவில்லை.
வாய்திறக்கக் கூடவில்லை;
        வார்த்தை வரவில்லை.
மாய்ந்தார்,பா வேந்தர்!
        மனமதை நம்பவில்லை.
என்தமிழும் நானும்
        உடல்உயிர் என்றாரே,
இன்தமிழைத் தங்கவிட்டு
        எவ்வாறு போனாரோ?
தந்தை,அன்னை தம்பி,மனை,
        அண்ணன்,பிள்ளை அயலார்,
சிந்தை நிறைந்துதமிழ்
        சேர்ந்துறைவ தால்என்றார்,
அந்தத் தமிழை
        அயலாக்கிப போனாரோ?
செந்தமிழாம் ஊனைவிட்டுச்
        சென்றதுவோ அவ்வுயிரும்!
பாவேந்தர் என்றால்
        புலவர் படைநடுங்கும்!
யார்வேந்தே எந்தமிழுக்(கு)
        ஏற்ற துணைஇனிமேல்!
என்றெல்லாம் உள்ளத்தில்
        ஏங்கி அழுதிருந்து.
பின்னர்அந் நண்பரிடம்
        பேசநான் வாய்திறந்தேன்.
'பாவேந்தர் இன்றில்லை!
        பாரில்"தமிழுக்குக்
காவேந்தர் இல்லாத
        காலமும் வந்ததையோ!





பாரதியார் பாரதி
        தாசர் ஒருவரைத்தான்
பாரடையச் செய்துசென்றார்.
        பாரதி தாசனாரோ,
பன்னூறு பாரதி
        தாசர் பரம்பரையை
என்னோடும் சேர்த்தேதான்
        இவ்வுலகுக் கீந்தாரே!
பாரதி தாசர்
        பருவுடல் மாய்ந்திடலாம்.
பாரதி தாசர்
        படைத்த தமிழுணர்வோ
யார்எதிர்த்து வந்தாலும்
        என்றும் மறையாதே!
போர்முரசம் கொட்டுதற்குப்
        போதும் 'தமிழியக்கம்'!
ஆயிரம் காலத்திற்கு
        அன்னார் படைப்புகளும்
போயளிக்கும் நம்மொழிக்குப்
        புத்துணர்வும் போர்ப்படையும்!
ஆனால் அவர்இறுதிக்
        காலம், வறுமையில்
தானே கழிந்துஇன்னல்
        தாங்கவும் நேர்ந்ததையோ!
பாவேந்தர் பாக்களை
        விற்றுப் பிழைத்தோரைச்
சாவேந்திச் செல்லும்!
        வரலாறு சாற்றாதே!
சாவாரின் வாழ்வுக்குச்
        சாகாத தண்டமிழ்ப்
பாவாக்கித் தந்தநம்
        பாவேந்தர் சாகாரே!
முத்தமிழ்ச் சங்கங்கள்
        மூன்று முதற்கொண்டு
எத்தனையோ பாவலர்கள்
        எந்தமிழில் தோன்றினாலும்.
இன்தமிழ்மேல் இத்துணைப்
        பற்றுகொண்ட பாவலர்
முன்னும் பிறந்ததில்லை
        பின்னும் பிறப்பதில்லை!
என்றேன். மறுநாள்,
        இதுவே 'தமிழ்நேசன்'
தன்தலையங் கத்தின்
        தலைப்பு!

(முற்றும்)

# அண்ணாவின் கவிதைகள் – ஓர் ஆய்வு

**கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.**
**இந்திய அரசு வைப்பகம், வேலூர்**

அண்ணாவின் கவிதைகள்.... நமக்குப் பெரும் வியப்பு, பேரறிஞர் அண்ணா கவிதைகளும் எழுதியிருக்கின்றார்களா, ஓர் இனத்தின் வழி காட்டி; ஓர் இயக்கத்தின் தலைவர்; இந்த நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர்; மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று; கட்டுரைப் பூந்தென்றல்; திரைத்துறை உரையாடல் இமயம் என்றெல்லாம் தானே அண்ணாவை இவ்வுலகம் அறியும். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் ஒரு நற்றமிழ் கவிஞராகவும் திகழ்ந்திருக்கின்றார். இவ்வுண்மையைக் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

சித்திரைக் கோடையில் தமிழர் சிக்கித் தவிக்கையில் தூய முத்திரைப் பொன் மழையாய் முகிழ்த்தவர் நம் அண்ணா; அவர், வான்புகழ் வள்ளுவர்க்குப் புவியில் வாய்த்த நல்லிலக்கியமாய் நம் தேன்தமிழ்ப் பெருமைகளைத் திக்கெட்டும் சொன்னவர்; ஈரோட்டுப் புத்தருக்கு இலக்கிய அசோகனுமாய், அறிவுத் தேரோட்டி நானிலத்தைத் திருத்திய மன்னவர்.

கதை, கட்டுரை, நாடகம், சொற்பொழிவு இவற்றால் தமது உணர்வுகளை உலகிற்கு அறிவித்து வந்த நம் அண்ணா, தமது காஞ்சி திராவிட நாடு இதழ்களில் அவ்வப்போது கவிதைகளும் யாத்து, அவற்றின் வாயிலாகவும் மக்களிடையே விழிப் புணர்ச்சியை உருவாக்கியுள்ளார்.

கவிதை இயற்றுவதென்பது அவ்வளவு எளிதான செயலா? காரிகை கற்க வேண்டும்; எழுத்து, அசை, சீர், தளை, தொடை, அறிய வேண்டும்; அண்ணாவிற்கு இவையெல்லாம் தெரியுமா? எனக் கேட்போர்க்கு எடுத்த எடுப்பில் அண்ணாவே விடை கூறி விடுகின்றார்.

> **"பாடுகின்றான் அண்ணன் ஓர் கவிதை என்று**
> **பரிவாலே எண்ணிடாதீர் உடன்பிறந்தோரே,**
> **சீர் அறியேன், அணி அறியேன், சிந்தை உந்தும்**
> **செய்திதனைத் தெரிவித்தேன்; ஆசையாலே,"**

என்கின்றார்.





அண்ணாவைப் பொறுத்தவரையிலும் கவிதைக்குரிய இலக்கணங்களாக அவர் கொண்டிருந்தவை புஷ்கின் - வால்டேர் - வால்ட் விட்மன் போன்றோரின் பின்வரும் கருத்துக்களைத் தான்;

> **"எண்ணம் துடிக்கும் - அவன் இதயம் பாடும்**
> **கனவுகள் வெடிக்கும் கவிதைகள் மலரும்**
> **கண்ணீர் வடிக்கும் சொல்நீர் சுரக்கும்."**

இஃது கவிதை பற்றிய புஷ்கினின் கருத்து; வால்டேர் கூறுகின்றார்;

> **"உன்னத எண்ணம் உயர்ந்த உணர்ச்சி**
> **எழுப்பின் காட்டும் இனிய சங்கீதம்**
> **அதுவே கவிதை."**

வால்ட் - விட்மன் பார்வையில் கவிதை என்பதும் கவிஞன் என்பதும்,

> **"எதுகை மோனை எழில்தரும் உவமை**
> **வசீகர வர்ணனை; பழமைக்கு மெருகு**
> **இத்தனையும் தேடி எங்கெங்கோ ஓடி**
> **வார்த்தை முடையும் வலைஞன் அல்ல."**

என்பதாகும்.

இக்கருத்துக்களை நெஞ்சில் நிறுத்தியே அண்ணா தமது கவிதைகளைப் புனைந்துள்ளார். 'நான் எழுதுவது கவிதை அல்ல; கவிதை ஆக்கிக் கொள்க' என்று பல வேளைகளில் அண்ணா பணிவோடு கூறிவிட்டுத் தம் கவிதைகளைத் தந்திருக்கின்றார்.

அண்ணாவின் கவிதைகளில் பெரும்பாலானவை ஆசிரியப் பாவாகவும், செந்தொடையாகவும் அமைந்து நமக்கு இன்பந் தருகின்றன. சில வேளைகளில் அறுசீர் விருத்தங்களாகவும் அமைந்துள்ளன. ஆனால் அனைத்துக் கவிதைகளிலும் உயிர் இருக்கின்றது; உணர்ச்சி இருக்கின்றது; கருத்துக்கள் காலக் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

வால்ட் - விட்மனின் கவிதையொன்றினை அண்ணா மொழி பெயர்த்துள்ளார்; இது 'வசன கவிதைக்குச்' சிறந்த சான்று:

> **"மனிதா,**
> **நீ யாருக்கும் தலை வணங்காதே.**
> **நிமிர்ந்து நட,**
> **உலகைக் காதலி,**
> **செல்வரை, செருக்குள்ளவரை,**
> **மதவெறி சாட்சியே உன் தெய்வம்.**

உழைப்பை மதி; ஊருக்குதவு
உனக்கு எட்டாத கடவுளைப் பற்றிப் பிதற்றாதே.
சிந்தனை செய், செயலாற்று."

கிளாடி ஜோசப் ரோஜட் டிலிஸ்லி என்னும் பிரெஞ்சுக் கவிஞரின் பாடல் ஒன்றை அண்ணா உணர்ச்சி பொங்கப் பின்வருமாறு தமிழில் தந்துள்ளார்:

"விழித்தெழுக, வீறுகொள்க, வீர பிரான்சு மக்களே,
கேண்மினோ, கேண்மினோ, கேடுகளை மினோ
மக்கள் மனையாள் பெற்றார் உற்றார்
கண்கள் கசிய, கதறுதல் கேண்மினோ....
வெல்க, வெல்க, இன்றேல் மடிக."

'சூரிய குட்டியைத் தேடிய மாப்பிள்ளை' என்றொரு கவிதையில் அறிவியல் அற்புதங்களை வியக்கும் கிராமத்தானாக இருந்து அண்ணா பாடுகின்றார்;

"மாடு இல்லா வண்டி
மானத்திலே போவு ,ாம்,
மனுஷன் போலப் ாடுதாம்,
மைதானத் திலே ஒரு கம்பி,
எண்ணெய் இல்லே திரியுமில்லே
எரியுதாம் விளக்கு,
என்னென்னமோ இருக்குதாம்
என் மாமன் வாழும் சீமையிலே."

'சின்னான் சிந்து' என்னும் கவிதையில் அண்ணா பாடுகின்றார்:

"வெள்ளைக்கார கூட்டமெல்லாம்
வெளியேறிப் போகணும்;
சள்ளை பிடிச்ச வாழ்வு போயி
ஒரு சவுகரியம் பிறக்கணும்:
கொள்ளையிடும் கும்பலது
கூண்டோடு தொலையணும்
பள்ளுபறை என்ற பேச்சைப்
பழசாக்கிப் போடணும்."

எளிய சொற்கள்; இனிய ஓசை நயம் இப்பாடலில் துள்ளுவதை உணரலாம்.

'வண்டிக்காரன் மகன்' என்னும் அண்ணாவின் கவிதை இவ்வாறு அமைந்துள்ளது:

"ஓயாமல் உழைக்கின்றாய்
உன் மகனை ஆளாக்க
ஊர் மெச்சும் வாழ்வுதர





உருக்குலைய உழைக்கின்றாய்
பேர் சொல்லி மகன் வாழ்வான்
பெருமை மிகும் என்றெண்ணி
பேய்மகனும் உனை மறந்தால்
நாய் மகனே ஆவான் காண்,;

'இதுவா தமிழ் மறவன்' என்றொரு கவிதையில் அண்ணா பாடுகின்றார் :

"தன்னாட்டைத் தான் பெறான் உலகில்
எந்நாட்டானாயினும் இழிந்தவன் தோழி.
முன் நாட்டை ஆண்டவன் முழுவாழ்வு வாழ்ந்தவன்
தென்னாட்டான். இந்நாளில் தில்லிக் கடிமையவன்
என்னேடி தோழி. இழிவில் இழிவன்றோ?"

என்று நாட்டுப் பற்று அற்றவரை இடித்துரைக்கின்றார்.

இப்பாடல்களெல்லாம் தமிழ்க் கவிதை யாப்பு முறையில் 'செந்தொடை' எனக் கொளவர் புலவர். இனி, அண்ணாவின் ஆசிரியப் பாவால் அமைந்த பாடல்களைப் பார்ப்போம்.

பொதுவாக, தமிழ்க் கவிதை உலகில் 'ஆசிரியப்பா' என்பது 'அவசரப் பா' ஆகும். கவிஞர்கட்கு அவசரத்திற்குக் கைகொடுத்து உதவுவது இந்த 'ஆசிரியப்பா' தான். கவிதை எழுதத் தொடங்குபவர்க்கு உதவுவதும் இந்த 'ஆசிரியப்பா' தான். கவிதைத் துறையின் கொடுமுடியைத் தொட்டவர்கள் விரும்புவதும் 'ஆசிரியப்பா' தான். இங்கு நம் அண்ணாவிற்கு ஆசிரியப்பா வெகு எளிதாகவும், இயல்பாகவும் வாய்த்திருக்கின்றது என்பதை அவரது பல கவிதைகள் பறை சாற்றுகின்றன.

'கதரின் மகிமை' பற்றிய அண்ணாவின் ஆசிரியப்பா:

"இருப்பூ ராரிடம் குவிந்து விட்ட
கருப்புப் பணத்தின் தொல்லை யினால்
ஏறுது, ஏறுது, விலைமேல் மேலே
ஏழைகள் துடிக்கிறார் புழுப் போலே."

"என்ன ஆட்சி இது அநியாயம்,
எனஎவ ரும்பேசு கிறார்மனம் நொந்து
எதிர்ப்பு எங்க ளும்வெடித் திடுது
இந்நிலை வளர்ந்திடல் என்றும் ஆபத்து."

என்று ஒரு குறுங்காவியமாகவே அக்கவிதை நீண்டிருக்கிறது.

'கோபம்' எனுந் தலைப்பில் அண்ணா பாடியுள்ள நெடும் பாடலொன்று ஏழையர் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றது :

"குப்பத்துச் சுப்பனுக்குக் கொள்ளைக் கோபம்
குடித்திட்ட கூழதுவும் வேக வில்லை
கடித்திட வெங்காயம் தானு மில்லை
கேட்டதற்கு குப்பி தந்த பதிலிலே
உப்பில்லை. சப்பில்லை ஒப்ப வில்லை
மாடாக நான் உழைத்து வீடு தேடி
மண் தின்னத் தான் வர வேண்டுமோடி
வரவர உன்புத்தியுமே பாழாய்ப் போச்சி
வாயினிலே வந்ததென்ன புத்து தானோ?"

'நானே தலைவன்' என்றொரு கவிதையில் அண்ணா, இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் வாழ்க்கையை எழிலுறப் பாடுகின்றார். கவிதையைக் 'கவிதை அல்ல; ஆக்கிக் கொள்ளலாம்' என்று முன்னுரையோடு தொடங்குகின்றார்; ஆனால் யாப்பமைதி கொண்ட சிறந்த கவிதையாகவே அப்படைப்பு திகழ்கிறது.

"காதரைன் என்னும் அப்பெருமாட்டி
அரசியானாள்; அழகுதா னில்லை
அரசன் வனப்பு மிக்கோ னோஎனில்
ஆடவன், ஆகவே கேள்வி எழாதென
அறைகுவர் பல்லோர், அறிவீர், நீவிர்,
காதரை னோடு வாழ்ந்த போது
கடும் புயல், கர்த்தர் மார்க்கத் துறையில்
போப்பின் ஆட்சி புனிதம் மாய்க்கும்
நீக்கிரை யாக்கும் திருமறை தனையும்
என்றே எழுந்து புரட்சி செய்தனர்
புராடெஸ் டண்டு பிரிவினர் எங்கும்."

எனத் தொடங்குகிறது அப்பாடல்.

ஒரு சோதிடன், ஒரு மருத்துவன், ஓர் இசைக் கலைஞன் மூவருமாகச் சேர்ந்து நெடும் பயணம் செல்கின்றனர்; வழியில் ஓரிடத்தில் தங்கி இளைப்பாறி உணவுண்டு செல்ல விழைகின்றனர். ஒரு வேளை உணவு சமைப்பதற்கு அந்த மூவரும் படுகின்ற - படுத்துகின்ற பாட்டினை அரிய நகைச்சுவைக் கவிதையாக்கித் தருகின்றார் அண்ணா. கதை பழையதுதான் எனினும், அதனை கவிதையாக்கித் தரும் முயற்சி புதியது; இனியது:

"கத்திரிக்காய், விலை மலிவு. என்றான் கடைக்காரன்.
மெத்தச் சூடலவோ வயிறும் வலிக்குமென்றான்,
வெண்டை களியூட்டும் உருளை உடல் ஊதும்
கருணை நல்லதுதான்: என்றாலும் கடும் வாய்வு,
என்றே ஒவ்வொன்றும் ஒவ்வோர் நோயூட்டுமெனும்
மருத்துவத்தை உரைத்தான் மதித்தெதையும் கொள்ளாது"





'வைத்தியன் பதார்த்தக் கடைக்குப் போன கதை' இத்தகையது என்கின்றார் அண்ணா,

"சாதாரணச் சமையல், அதனைச் சரி செய்திடவோ
சங்கீதம் கற்றவனோ, ஜாதகம் கணிப்பவனும்
நோய்தீர்க்கும் மருத்துவனும் கூடிமுடிய வில்லை
காரணமோ,
குறிக்கோளிதனைக் கெடுக்கும் குறை அறிவு, கொண்டதுதான்
மற்றும் தமக்கென்று மாமேதாவித் தன்மை
மெத்த இருக்குதென்ற பித்தத்தி னாலுங் காண்."

என அழகாகக் கவிக் கூற்றாகத் தமது கருத்தைக் கூறிக் கவிதையை அண்ணா நிறைவு செய்கின்றார்.

இனி, அண்ணாவின் அறுசீர் விருத்தப் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

"இரவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனால் பகலுக்கு ஒன்றே
ஆயினும் சூரியன் மறைந்தால்
உலகத்தில் ஒளி இல்லையே.
அறிவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனால் நெஞ்சுக்கு ஒன்றே.
ஆயினும் அன்பு குறைந்தால்
வாழ்வில் ஒளி இல்லையே"

போர்டில்லன் என்னும் ஆங்கிலக் கவிஞனின் 'மலர்மனம்' என்னும் கவிதையின் அண்ணாவின் தமிழாக்கமே இக்கவிதை.

'காந்தி பனிரெண்டு' எனினும் கவிதை முழுவதும் அறுசீர் விருத்தமாய். மூன்றாம் சீரும் ஆறாம் சீரும் மாச்சீராய்ப் பொருந்து வருமாறு அண்ணா இயற்றியிருப்பது வியப்பளிக்கின்றது:

"வருகிறார் காந்தி என்றார்
        வருகுது வாழ்வு என்றார்
வரமது தந்து நம்மை
        வகைசெயும் வள்ளல் என்றார்
வரண்ட என்வாழ்வு தன்னில்
        இருண்டிருக்கும் இடரும் போகத்
திரண்டிடும் ஆவலோடும்
        ஓடினேன் காந்தி காண.
தவமுனி தன்னைக் காணத்
        தவத்திடும் திறனைக் கண்டேன்:
பவமறுத் திடுவோர் கூறும்
        பண்புரை கேட்க நின்றேன்.

கதருடைக் கூட்டம் அங்குக் காளி
காவிடை வண்டு வோலக்
களித்திட வந்தார் காந்தி
காரிருள் ஒழியும் என்றார்."

இனி, அண்ணாவின் சில இசைப் பாடல்கள்:

'வீட்டு விளக்கு' என்னும் பாடல் இவ்வாறு தொடங்குகின்றது:

"தங்கம் விளையும் நம் நாட்டினிலே
தரித்திரம் இருப்பதும் எதனாலே....?
தட்டிக் கேட்டிடும் தமிழ் வீரர்
சட்ட சபைக்குள் இல்லாமையால்...?
தட்டிக் கேட்டிடும் தமிழ்வீரர் சட்ட
சபைக்குச் செல்லாததேன்?
வெட்டிப் பேச்சு வீணர்கள் தம்
வெறும் பேச்சு வெற்றி பெற்றதனால்....

என்று தொடர்ந்து செல்கின்றது இப்பாடல், இப்பாடலின் அடிக்குறிப்பாக அண்ணா இவ்வாறு எழுதுகின்றார்:

'எனக்கு மட்டும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமியின் குரல் இனிமை இருந்தால், வீடெல்லாம் கேட்கும்படி நாடெங்கும் சென்று இது போலப் பாடிக் காட்டுவேன். பாடல் ஏதேனும் சுவைபடப் பாடிட வேண்டும் என்பதாலே அல்ல; நாடு கேட்டிட வேண்டிய 'செய்திகள்' இதுபோல, எங்கும் பரப்பப் பட வேண்டும் என்ற ஆர்வத்தினாலே'

காதல் பாடல்கள் புனைகின்ற முயற்சியிலும் அண்ணா வெற்றி பெற்றுள்ளார் என்பதற்குப் பின்வரும் இரண்டு இசைப் பாடல்கள் சான்று:

"நீ என்னடி கண்டாய் அந்த
மன்னவன் தரும் இன்பம்.
வாயாற் சொல்ல முடியாதடி
தேனிலந்த இனிப்பேதடி (நீ என்னடி)
தமிழ் பேசுதல் கேளாச் செவி
இருந்திடுவது வீணே
அமைவாய் என்ன மாதேஎன
அன்புடன் தழுவிடுவானே, (நீ என்னடி)
இரவே பகல் நாளேகலை
நல்விருந் துயர்காதல்
உருவேவிழி. வாழ்வே மணம்
இன்ப அருவி. அதன் மீதிலே : (நீ என்னடி)





'வண்டு கண்டேன்' என்றொரு இசைப்பாடலில், ஆடவரினத்தைப் பற்றி வண்டு எச்சரிக்கை செய்வதைப் போன்று அருமையாக நிறைவு செய்திருக்கின்றார் அண்ணா :

"பண்பாடும் வண்டு கண்டேன் - காதல்
பண்பாடும் வண்டு கண்டேன்
பாராயோ, எனைச் சேராயோ,
இன்பம் தாராயோ, எனப் (எண்..)
தித்திக்கும் இசையளித்து
தேடிஎனை அழைத்து
சுற்றிச் சுற்றி வட்டமிட்டு
சுருதி கூட்டிடும் அன்பு
மெத்தவும் உருக்கு தெந்தன்
சித்தமதை என்று எண்ணி
சிரித்திட (பரி...)
கள்ள மில்லாக் கன்னியரைக்
காதலில் இழுத்து வைத்துக்
காரியம் கனிந்த பின்னர்
பாதகம் செய்யும் கயவர்
எங்கள் இனம், எங்கள் இனம்
எச்சரிக்கை, எச்சரிக்கை
என்று முழங்குவது போல்
எனக் கனிவிக்கும் இன்ப

இவை போன்ற பல இசைப்பாடல்களை அண்ணா படைத்துள்ளார். ஒல்லும் வகையால், அவை திரைப்படங்கள், ஒலிநாடாக்கள் வழி வெளிவருமானால் நாட்டிற்கு நல்ல பயன் விளையும்.

ஒரு மிராசுதார் வேடனொருவனிடம் வாங்கிய புலிக்குட்டியை வளர்த்து வருகின்றார்; நன்கு வளர்ந்த நிலையில் அதனைத் தான் வேட்டையாடிக் கொண்டுவந்து கூண்டிலடைத்துள்ளதாக பொய்ப் பெருமை பேசித் திரிகின்றார். எப்படியோ தப்பி, ஒரு நாள் அந்தப் புலி நாடுவிட்டுக் காடு சென்று விடுகின்றது; வழியில் கடவுளைச் சந்திக்கின்றது.

கடவுள் அந்தப் புலியிடம், 'பிற உயிர்களை வதைத்துக் கொன்று வாழ்கின்றீர்களே, நீயும் உன்னினமும், இது நியாயமா?' என்று கேட்கின்றார். அப்பொழுது அந்தப் புலி விடையிறுப்பதாக அண்ணா கூறியுள்ள கருத்து அவரது உரத்த சிந்தனைக்குத் தலையாய் சான்று:

"பசிக்காக இரை தேடும்
பாவி நாங்கள், பரமனே, கேள்
குருதி குடிப்பது கொன்று தின்பது
எமதியல்பு, மறுக்க வில்லை.
எம் இயல்பு மாறிட, நன்மை
தீமை உணர்ந்திட
அறமறிய, அன்பு நெறி அறிய
பண்பு அறிந்து ஒழுக,
அறிவு கொளுத்த. நீர்
அனுப்பிய வள்ளுவர்
நாங்கள் உயர்ந்திட காடா வந்தார்,
நாட்டிடை நவின்றார்.

ஆம், நாட்டிடை வந்த வள்ளுவரை - வள்ளுவத்தை நன்முறை பயன்படுத்தினோமா? பின்பற்றினோமா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு, ஒரு பெருங்கவிஞர்களுக்குரிய கூறுகளனைத்தும் வாய்க்கப் பெற்றிருந்த நம் அண்ணா கவிதைத்துறையிலும் ஆழ்ந்த கவனஞ் செலுத்தியிருப்பாரேயாயின், நம் தாயகமாம் தமிழகம் மற்றுமொரு பாவேந்தரை நிச்சயம் பெற்றிருக்கும்.

**ஈஸ்வர ஆண்டே வருக**

ப. இராமசாமி, வெள்ளாளபாளையம்

எம்மிறைவன் எழிற்பெயர்கொள்
ஈஸ்வரநல் ஆண்டே
இன்பமிகு பல்வளங்கள்
எய்தவருள் ஈண்டே
உம்வரவு நல்வரவா
உலகமெலாம் வாழ்த்த
உழவுமுதற் றொழில்புரிவோர்
உவந்து மகிழ்ந்தேத்த
செம்மைதரு நீதிஅறம்
நேர்மையுளம் தேங்க
தெம்புநிறை அன்பறிவு
திறமை வளர்ந்தோங்க
இம்மையிலிங் கொருகுறைவு
மின்றி நிறைவாக
எழிலியுளங் கனிந்துமழை
பொழிந்திட நீவருக.





# நூல் மதிப்புரை

நூல் : சாம்பன்
ஆசிரியர் : கால்கூட் (சமரேஷ் பாசு)
வெளியீடு : சாகித்திய அக்காதெமி
"ஸ்வாதி" மந்திர் சாலை, புதுதில்லி – 1
பக் : 142 விலை : ரூ. 60/-

இந்நூல் ஆசிரியர் சமரேஷ் பாசு இயற் பெயரிலும், 'கால் கூட்' எனும் புனை பெயரிலும் எண்ணற்ற இலக்கியங்களை உருவாக்கிய வங்க மொழி அறிஞர்.

மகாபாரதத்திலுள்ள சாம்பனின் கதையை இந்நூலில் நவீன முறையில் வடித்தளித்துள்ளார், ஆசிரியர்.

சாபத்தால் தொழு நோயால் பாதிக்கப்பட்ட சாம்பன், விதிக்கு அடிபணிய மறுத்து, தொழு நோயைப் போக்கக் கடினமான பயணத்தை மேற்கொள்கின்றான், வெற்றியும் பெறுகின்றான் என்பதை இந்நாவல் உணர்த்துகின்றது. நாவல் பயில்வார்க்கு ஆவல் சுரக்கும் வண்ணம் க. கிருஷ்ண மூர்த்தி இந்நூலைத் தமிழில் தந்துள்ளார். இந்திய மொழி இலக்கியங்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பிற இந்திய மொழிகளில் தரும் பெரும்பணியைச் செய்துவரும் சாகித்ய அகாதெமியைப் பாராட்டுகிறோம்.

நூல் : காந்தி அண்ணல் கதைப்பாட்டு
ஆசிரியர் : வே. இரா. சிவஞான வள்ளல்
வெளியீடு : 6, கலைஞர் தெரு, புலவர் நகர்
வேலூர் – 9, வ. ஆ. அ.
பக் : 64 விலை : ரூ. 12/-

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இனிய பாக்களாக்கிக் குழந்தைகட்குத் தந்துள்ளார் ஆசிரியர்.

வெற்றுக் கவிதைகள் மலிந்துள்ள இந் நாளில் இந்நூலில் அனைத்தும் சத்துக் கவிதைகள்.

"வாய்மை வெல்லும் என்பதை
வாழ்ந்து காட்டி வென்றவர்
தூய்மை யான நெஞ்சினர்
தேசத் தந்தை காந்தியே....! (பக். 6)

ஆட்டுக் குட்டி வருத்தம் கண்டே
அதனைச் சுமந்தார் புத்தரே!
மாட்டின் துன்பம் கண்டு வண்டி
தன்னை இழுத்தார் காந்தியே! (பக். 30)

காந்தி அண்ணலின் தமிழக வருகையின் பொழுது டாக்டர். உ. வே. சா. வழங்கிய வரவேற்புப் பா நிகழ்ச்சி இந்நூலில் நன்கு நினைவு கூரப்பட்டுள்ளது. (பக். 58)

வேலூர் ம. நாராயணன் எம்.ஏ.

## மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79. | 5 00 |
| தவத்திரு. ஈசுவர அடிகள் அவர்கள் | 5 00 |
| திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2. | 25 00 |
| புலவர் வீ. பழனிவேல் | 10 00 |
| தாமரைச் செல்வி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| முத்துமணி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம், சென்னை – 18. | 10 00 |
| டாக்டர் பூவண்ணன், கோவை – 11 | 10 00 |

## மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| தவத்திரு. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம் வழிபாட்டுச் செலவு | 25 00 |

மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

செயலாளர், மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம்

154, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

முத்தமிழ்ச்செம்மல்

# டாக்டர் புரட்சிதாசன் எம்.ஏ.

எழுதிய நூல்கள்

### மரபுக் கவிதைகள்

| | |
|---|---|
| தொல்காப்பிய ஐந்திணை | 100 00 |
| வரலாற்றில் இந்து மதம் | 50 00 |
| செந்தமிழ்ப் பாடல் திரட்டு | 50 00 |
| கோடை மழையில் குயில் பாட்டு | 50 00 |
| கன்னித் தமிழ்க் கவிதை பாடுவோம் | 50 00 |
| விடுதலை வெண்பா | 50 00 |
| கருப்பு மெழுகுவத்தி | 30 00 |
| சிவப்புக் கவிதைகள் | 30 00 |
| சட்டி சுட்டது கைவிட்டது | 30 00 |
| இயற்றமிழ் வெண்பா | 10 00 |
| இசைத்தமிழ் வெண்பா | 10 00 |
| குறிஞ்சி வெண்பா | 10 00 |
| முல்லை வெண்பா | 10 00 |
| நெய்தல் வெண்பா | 10 00 |
| பாலை வெண்பா | 10 00 |
| ஐயம்திரிபற 6000 குறள் | 150 00 |

### இலக்கிய உரைநடைகள்

| | |
|---|---|
| தமிழ்ச் சங்கம் | 50 00 |
| சமயமும் சங்கத் தமிழும் | 50 00 |
| பழந்தமிழ்க் கூத்தே பரத நாட்டியம் | 50 00 |
| சிலப்பதிகாரக் கூத்து | 50 00 |
| சினிமாவும் அரசியலும் | 50 00 |

### இசையியல் மரபுகள்

| | |
|---|---|
| ஏழிசை | 50 00 |
| இசைத் தமிழ் | 100 00 |
| தமிழிசையில் சாமகானம் | 100 00 |
| சிலப்பதிகாரச் செங்கோட்டியாழ் | 50 00 |
| நாட்டிய நன்னூல் | 100 00 |
| நாட்டிய முத்திரைகள் | 75 00 |

### வரலாற்றாய்வுகள்

| | |
|---|---|
| கொடுங்கடல் கொண்ட குமரிக் கண்டம் | 75 00 |
| குமரி முதல் இமயம் வரை | 75 00 |
| ந்து வெளி | 75 00 |
| கடல் தாண்டிய சிந்து வணிகம் | 75 00 |

மொத்த வியாபாரிகளுக்கு 30% கழிவு

தொடர்பு கொள்க :

## பாண்டியன் பாசறை

17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

Regn. No. G/17/ M/4899
Licence No. TN/MS/WPP/30

ஏப்ரல்—1997

## கழகப் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| [illegible]னிதர் மண்டேலா<br>- [illegible]மார். | 75 00 |
| நினைவுத் திரைகள் (என் வரலாறு)<br>- கா. பொ. இரத்தினம் | 60 00 |
| திருவாசகம் தெளிவுரை<br>- ப. இராமநாத பிள்ளை | 75 00 |
| மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன்<br>- அம்பி | 35 00 |
| இதயமும் இதய நோய்களும்<br>- தமிழம் பன்னீர்செல்வம் | 25-00 |
| திருமுருகன் அந்தாதி<br>- ம. அரங்கநாதன் | 5 00 |
| நெல்லை மாவட்டச் சித்தர்கள்<br>- சக்தி பி. சுப்பிரமணியம் | 40 00 |
| மானிட உடல் இயக்கவியல்<br>- டாக்டர் கதிரேசன் | 35 00 |
| மருத்துவத் தமிழ்க் களஞ்சியம்<br>- டாக்டர் கதிரேசன் | 35 00 |
| ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்<br>- சு. ந. சொக்கலிங்கம் | 45-00 |
| விண்வெளிப் பயணம்<br>- டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் | 35 00 |
| நமது உடல்<br>- டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் | 30 00 |
| முல்லாவின் கதைகள் முப்பது<br>- புலவர் இரா. இளங்குமரன் | 18 00 |
| பூமியின் கதை<br>- என். கே. வேலன் | 22 00 |
| வங்காளப் பழமொழிகள்<br>- டாக்டர் சொ. முத்தையா | 26 00 |
| புதையல் வீடு<br>- டாக்டர் பூவண்ணன் | 30 00 |
| அறிவியல் ஆராய்ச்சிகள்<br>- என். குழந்தை, பி.ஏ. | [illegible] |
| விஞ்ஞான முன்னோடிகள்<br>- என். குழந்தை, பி.ஏ. | 45 00 |

அப்பர் அச்சகம், சென்னை-108.



**"செந்தமிழ்ச் செல்வி"**
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு :
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.,
ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிப்.,

## உள்ளுறை


| | |
|---|---|
| தாமரைச் செல்வர் வ.சு. ஐயாவின் குழந்தை இலக்கியப் பணி | 321 |
| மலரினும் மெல்லிது | 326 |
| 1997 சிறந்த மனிதர் முனைவர் — க. ப. அறவாணன் | 330 |
| சர்தார் வேதரத்னம் பிள்ளை | 331 |
| சைவ சித்தாந்தத் தொன்மை | 336 |
| எழுவாய்...பயனிலை...செயப்படுபொருள் ! | 341 |
| வள்ளுவம் வழங்கும் மேலாண்மைக் கோட்பாடுகள் | 342 |
| "தாய்மொழி உணர்ச்சி" | 351 |
| மும்மைச் சிறப்புடன் தமிழின் உறவு | 355 |
| அருளாளர் வாக்கில் திருமால் | 356 |
| நூல் மதிப்புரை | 359 |
| மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை | 360 |



## குறள்வழிச் சிந்தனைகள் ஒரு புதுப் பார்வை

புலவர் பா. வீரமணி எம்.ஏ.,

திருக்குறளின் கருத்துக்களை புதிய கண்ணோட்டத்துடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் விளக்குகின்றார் இவ்வாசிரியர் புலவர் பா. வீரமணி, பேரா. தெ. பொ. மீ. யின் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதுடன் தம் கருத்துக்களையும் அரிய விளக்கத்துடன் பொருள் கொடுக்கிறார். தக்கார் யார்? இலர் பலர் யார்? உலகிற்றியான் யார்? இறந்தாரா? இரந்தாரா? போன்ற ஒன்பது தலைப்புக்களில் தம் கருத்துக்களை ஆராய்ச்சிப் பார்வையோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் கூறுகிறார் இவ்வாசிரியர். ஆய்வாளர்களுக்குப் பயன்படும் அரிய நூலாகும்,

**விலை ரூ. 35/-**

**செந்தமிழ்ச் செல்வி**

தி. வ. ஆண்டு 2028 சித்திரை
மே - 1997
சிலம்பு - 71 ; பரல் - 9

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
23 மே 1997
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

# தாமரைச் செல்வர் வ. சு. ஐயாவின் குழந்தை இலக்கியப் பணி

தமிழில் குழந்தை இலக்கியம் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டு ஆற்றி வருவது குழந்தை எழுத்தாளர் சங்கம். இதனைத் தோற்றுவித்து, கட்டிக் காத்து வளர்த்தவர் அதன் முதல் தலைவரான குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஆவர். 1958 ஆம் ஆண்டு வாக்கில் அதுவரை வந்த குழந்தை இலக்கிய நூல்களைச் சீர் தூக்கிப் பார்ப்பதற்கு இந்திய நூலகத் தந்தை டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் அழைத்தது. வந்த நூல்களை ஆய்வு செய்து பார்த்த அரங்கநாதன் ஒரு சிறு நூலைக் கண்டு வியந்து போய்ப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். தமிழில் இத்தகைய நூல்கள்தான் அதிகம் வெளிவர வேண்டும் என்று பாராட்டினார்.

அவர் பாராட்டிய நூல் 'அணுவின் கதை'. அதை எழுதியவர் என். கே. வேலன். நூல் கழக வெளியீடு. உடைக்க முடியாது, பிரிக்க முடியாது என்று எண்ணிக் கொண்டிருந்த அணுவைப் பிளக்க முடியும் என்று அறிவியல் பூர்வமாகச் செய்துகாட்டி, அது பற்றி ஆங்கிலத்தில் நூல் வெளிவந்த ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே அக்கருத்தைத் தமிழில் தர வேண்டும் என்றும், அதுவும் குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நூலாகத் தர வேண்டுமென்று அதனை உருவாக்கிய கழக மேனாள் ஆட்சியாளர் வ. சு. ஐயாவை டாக்டர் அரங்கநாதன் பெரிதும் பாராட்டினார்.

இவ்வாறு குழந்தை இலக்கியம் எப்படி வளர வேண்டுமென்று திட்டமிட்டு வளர்த்த தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஆற்றிய குழந்தை இலக்கியத் தொண்டு அளவிடற்கரியது.

கழகம் தன் 1008 ஆவது நூலைச் சிறப்பு விழாவாக, நடத்தி வெளியிட்டது. அதனையொட்டி கழகம் 1008 வெளியீடுகளின் நூற்றொகை (Bibliography) ஒன்றையும் வெளியிட்டது. அதனை உருவாக்கும் பணியில் மீண்டும் டாக்டர் அரங்கநாதன் அவர்களே

ஈடுபட்டார். 1008 வெளியீடுகளில் 300க்கு மேற்பட்ட சிறுவர்க நூல்கள் வெளிவந்திருப்பதைக் கண்டு வியந்து பாராட்டினார். பழந்தமிழ் இலக்கியத்தைக் கட்டிக் காப்பது போல வளரும் இளம் துளிர்களுக்கும் தக்க நூல்களைக் கழகம் வெளியிட்டு வருவதைப் போற்றினார்.

கழகம் இத்தகைய அரிய பணியைச் செய்தமைக்காகக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு பெரும் பாராட்டு விழா நடத்தி அதில் வ. சு. ஐயாவைப் பெருமைப்படுத்தியது. குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடும் பதிப்பகத்தாரைப் பாராட்ட வேண்டுமென்று சங்கம் முடிவு செய்தபோது முதன் முதலாகக் கழகத்தையே தேர்ந்தெடுத்தது. அப்போது துணைக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் சாகிர் உசேன் அவர்களைக் கொண்டு விழாவை நடத்தி அதில் குடியரசுத் தலைவர் வழி வ. சு. ஐயாவுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கிச் சிறப்பித்தது.

வ. சு. ஐயா அவர்கள் ஆற்றிய பல்வேறு பணிகளுக்காக இந்திய அரசு அன்றைய தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிந்துரையின் பேரில் தாமரைச் செல்வர் (Padmashri) என்ற விருதை வழங்கிய போது அவர் தமிழில் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்டதைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டியிருந்தது.

வ. சு. ஐயா தாமே ஒரு குழந்தை எழுத்தாளராகத் திகழ்ந்தார். சிறு குழந்தைகள் தமிழ் மொழியைச் செம்மையாகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறியசிறிய நூல்களை எழுதினார். பிழையின்றிப் பேசுக, குழந்தைப் பேச்சு, எங்களூர்ச் சந்தை, அஞ்சல் முறை, கழக இனிய கதைகள், பழமொழிக் கதைகள், விளையாட்டுப் பந்தயம் போன்ற சுவையான நூல்களை எழுதினார். அவர் குழந்தைகட்காக நூல்கள் எழுதினாரே தவிர வேறு துறையில் நூல்கள் எழுத அவர் நாட்டம் செலுத்தியதில்லை.

தாமே எழுதியதுடன் தக்க தமிழ்ப் பேரறிஞர்களையும் குழந்தை எழுத்தாளராக உருவாக்கிய பெருமை வ. சு. ஐயாவையே சாரும். மகிழ்நன் என்ற க. ப. சந்தோஷம், கா. அப்பாத்துரையார், டாக்டர் மு. வரதராசனார், மா. இராசமாணிக்கம், மீ. பொன். இராமநாதன் செட்டியார், சு. அ. இராமசாமிப் புலவர், என். சே வேலன், மா. சண்முக சுப்பிரமணியம், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், டாக்டர் பூவண்ணன், டாக்டர் கு. பரமசிவம், மு. சதாசிவம், இரா. முத்துக்குமாரசாமி போன்றவர்களையெல்லாம் பயன்படுத்தி அரிய தமிழ்க் குழந்தை இலக்கிய நூல்களை உருவாக்கிய பெருமை வ. சு. ஐயா அவர்களையே சாரும்.





குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடுவதில் வ. சு. ஐயாவிற்குத் தனி ஆர்வம் உண்டு. சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் எல்லாச் சிறுவர் நூல்களையும் தக்க படங்களுடனேயே வெளியிட்டார். படங்கள் இல்லாமல் நூல்களை வெளியிட மாட்டார். அதைப்போலவே அவர்கள் விரும்பும் வடிவங்களில் எல்லாம் புத்தகங்களை வெளியிட்டார். கைக்குள் வைத்துப் படிப்பது போல பிறந்தநாட் பரிசு, எலிக் குடும்பம் என்ற இரண்டு நூல்களை வெளியிட்டார். புத்தகம் முழுவதும் இடப் பக்கம் படமும் வலப்பக்கம் கதைப்போக்குடன் கூடிய கவிதையும் இடம் பெற்றுள்ளது. அதைப் போலவே மேனாட்டு முறைப்படி டெம்மி, கிரவுன் 1/8 அளவு பெரிய நூல்களையும் வெளியிட்டார். அதில் எழுத்துக்கள் பெரிய அளவில் இருக்கும். குழந்தைகள் படிக்க எளிதாக இருக்கும் என்று அவ்வாறு வெளியிட்டார்.

குழந்தைகள் தமிழை நன்றாகப் படிக்க வேண்டும், எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'தானே தமிழ் கற்கும் முறை' என்ற நூலைப் பையடக்க அளவிலும் மிகப் பெரிய ஓவியம் வரையப் பயிலும் நோட்டுப் புத்தக அளவிலும் வெளியிட்டார். சிறிய நூலை வாங்குபவர்களுக்கு எழுதுகோல் ஒன்றும் அன்பளிப்பாகத் தரப்பெற்றது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் இலக்கியத்தின் மணிமுடியாகத் திகழும் திருக்குறளை எல்லாச் சிறுவர்களும் நன்றாகப் புரிந்துகொண்டு படிக்க வேண்டுமென்பதற்காக டாக்டர் மு. வரதராசனார் அவர்களைக் கொண்டு தெளிவான உரை எழுதுவித்து 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூலை ஐயா வெளியிட்டார். அதை வடிவமைப்பதிலும் பெரும் கவனம் செலுத்தினார். மூலத்தையும் உரையையும் அருகருகில் படிக்க வேண்டுமென்பதற்காக எதிர்எதிரில் மூலத்தையும் உரையையும் அச்சிட்டு வெளியிட்டார். அதன் விற்பனை யாரும் எதிர்பாராத வகையில் தமிழ்நூல் விற்பனையுலகில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிவிட்டது. இன்று ஏறத்தாழ 18 இலட்சம் படிகளுக்குமேல் தெளிவுரை விற்பனையாகியுள்ளது. மாணவர்களிடையே இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வேறு எந்தத் தமிழ் நூலும் இவ்வளவு விற்பனையானதில்லை என்று குறிப்பிடுமளவிற்குப் பெரும் சாதனை புரிந்துள்ளது.

சிறுவர்க்கான நூல்களை வெளியிட வேண்டுமென்று கழகம் எண்ணியபோது முதன்முதலில் வள்ளற் பெருமானான இராமலிங்க சுவாமிகள் எழுதிய சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் ஆகிய இரு நூல்களையும் வெளியிட்டது. மன்னுயிரையும் தன்னுயிர்போல் பேணும் பண்பு சிறுவர்களிடையே தோன்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் இவை வெளியிடப்பட்டன.

தாகூர் சட்டப் பேறறிஞராகத் திகழ்ந்த பேராசிரியர் கா. சு. பிள்ளை எனும் கா. சுப்பிரமணிய பிள்ளை சிறுவர்க்காக நூல் எழுதத் தூண்டப் பெற்றார். கழகச் சிறுகதைகள் (2புத்.) இந்திய வரலாற்றுக் கதைகள், உலகப் பெருமக்கள், சர். பி. சி. ராய் போன்றவை அவர் எழுதியவை.

மகிழ்நன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்ட க. ப. சந்தோஷம் பொன்னி மன்னன், அரசாளப் பிறந்த மகன், விலங்குகளின் அறிவுக் கதைகள் போன்ற பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் நூல்களை எழுதினார்.

கல்லூரிப் பேராசிரியராகப் பொறுப்பேற்க சென்னை வந்தடைந்த டாக்டர் மு. வரதராசனாரை வ. சு. ஐயா முதலில் குழந்தைகள் நூல்களை எழுதத் தூண்டினார். கழகச் சிறுவர் பாட்டு, கழக இளைஞர் பாட்டு ஆகிய இரு நூல்களிலும் இடம் பெற்றுள்ள குழந்தைப் பாடல்கள் மு.வ. பாடியவை, அவர் எழுதிய 'படியாதவர் படும் பாடு' கண்ணுடைய வாழ்வு எனும் நூல்கள் குழந்தைக் கல்வியையும் முதியோர் கல்வியையும் வற்புறுத்தும் எளிய நூல்கள். இந் நூல்களை இயற்றிய பின்னரே பெரியவர் கட்காக நூல்கள் எழுதத் தொடங்கினார். ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கதை போல எழுதி 'ஷேக்ஸ்பியர் கதைகள்' (புத்.1) என்ற தலைப்பில் மு. வ. எழுதினார். இவற்றை மு. வ. 1939 - 41 ஆண்டுகளில் எழுதினார்.

1945 ஆம் ஆண்டு பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரும், காவல் துறையில் பணியாற்றிய என். குழந்தை என்பவரும் குழந்தை இலக்கிய நூல்களைப் படைக்க முற்பட்டனர். என். கே. வேலன் என்ற பெயரில் திரு. குழந்தை எழுதிய சிறுவர் நூல்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவையாகும்.

அப்பாத்துரையார் கதை இன்பம், சிங்காரச் சிறுகதைகள், சிறுகதை விருந்து, நாட்டுப்புறக் கதைகள், புத்தார்வச் சிறுகதைகள், மேனாட்டு இலக்கியக் கதைகள், வியப்பூட்டும் சிறுகதைகள் போன்ற பல கதை நூல்களை எழுதினார்.

ஐன்ஸ்டீன், இரவிவர்மா, பெஞ்சமின் பிராங்க்ளின், பெர்னார்டுஷா போன்றோர் வாழ்க்கை வரலாற்றையும் அப்பாத்துரையார் நூல்களாக எழுதினார்.

என். கே. வேலன் அயல்நாட்டுச் சிறுகதைகள், இளைஞர்க் கேற்ற இனிய கதைகள், கழக இனிய கதைகள் போன்ற கதை நூல்களையும் அணுவின் கதை, சூரியனின் கதை, ஒளியின் கதை, காற்றின் கதை, கடலின் கதை, உப்பின் கதை, தாளின் கதை போன்ற அறிவியல் நூல்களையும் சிறுவர்களுக்கு எளிய முறையில் அறிமுகப்படுத்தினார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள்





சிறுவர் இலக்கியப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்த குழந்தை எழுத்தாளர்கட்கான பணி மனையில் பங்கு கொண்டு எழுத்தாளர் போன்றே பயிற்சி பெற்றார்.

அரசுத் துறையில் செயலர் பொறுப்பில் இருந்த மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் குழந்தைகட்காகப் பெரியோர் வரலாற்றை மிக எளிய தமிழில் ஆக்கித் தந்தார். செக்கிழுத்த சிதம்பரனார், அமெரிக்கக் காந்தி, நேரு மாமா போன்ற சிறுவர் நூல்களைப் படைத்துத் தமிழக அரசின் பரிசுகளையும் பாராட்டையும் பெற்றார். வ. சு. ஐயாவின் தூண்டுதல் இல்லையேல் இவர் குழந்தை எழுத்துத் துறைக்கு வந்திருக்க மாட்டார்.

திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்த டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் பல அறிவியல் நூல்களைக் கழக வழி வெளியிட்டுத் தமிழில் குழந்தைகட்கான அறிவியல் நூல்கள் வெளிவரத் துணை நின்றார்.

குழந்தைகட்கான நூல்களை நிரம்ப வெளியிட வேண்டு மென்பது வ. சு. ஐயாவின் பெருவிருப்பம்.

குழந்தை எழுத்தாளர்கட்கிடையே குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு அடுத்து குழந்தைகட்காகக் கதை, பாட்டு, நாடகம், கட்டுரை, வரலாறு போன்ற பல்துறை நூல்கள் எழுதும் ஆற்றல் பெற்றுத் திகழும் டாக்டர் பூவண்ணன் அவர்களின் தொடர்பு வ. சு. ஐயாவுக்கு நீண்ட காலமாகக் கிடைத்திருந்தது. அவருடைய கதை நூல்களைக் கழகம் வெளியிட வ. சு. ஐயா முயற்சி எடுத்துச் சில அரிய நூல்களைக் கழகவழி வெளியிட்டார்.

தமிழகத்தில் வழங்கிவரும் நாட்டுப்புற மக்கள் பயன்படுத்தும் கதைகளைத் திரட்டி வெளியிட வேண்டுமென்று வ. சு. ஐயா திட்டமிட்டார். இதற்குத் தக்கவராகத் திகழ்ந்த கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களிடம் இப்பணி ஒப்படைக்கப் பெற்றது. செவி வழியாக வந்த கதைகளையும் பழைய நூல்களிலும் இதழ்களிலும் வெளிவந்த நாட்டுப்புறக் கதைகளையும் தொகுத்து 'தென்னாட்டுப் பழங்கதைகள்' என்ற தலைப்பில் எட்டு தொகுதிகள் வெளியிட்டார். ஒவ்வொரு தொகுதியும் 320 பக்கங்கள் கொண்டது மொத்தத்தில் ஏறத்தாழ 2500 பக்கங்களில் இத் தொகுதிகள் வெளிவந்தது சிறுவர் இலக்கியத்திற்குக் கழகமும் வ. சு. ஐயாவும் செய்த பெருஞ்சாதனையாகும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் குழந்தை இலக்கிய வரலாற்றில் அத்துறைக்கு ஆற்றிய பணிக்காக வ. சு. ஐயாவின் பெயர் நீங்காது இடம் பெற்றிருக்குமென்பதில் யாதுமோர் ஐயமில்லை.

## மலரினும் மெல்லிது

**முனைவர் கடலூர் மணிமாறன்**

பண்டைக் காலத் தமிழர் தங்கள் வாழ்வை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து இனிதே வாழ்ந்தனர். களவியல், கற்பியல் என இரண்டு கூறுகளாக அகத்தை வகுத்தனர். உள்ளத்தால் ஒருவராகிவிட்ட ஒரு தலைவனும் தலைவியும் பிறர் அறியா வண்ணம் குறிப்பாகப் பெற்றோருக்கும் தெரியாமல் இரவிலோ, பகலிலோ தனித்துப் பேசி இன்புறுவதைக் களவியல் என்பர். ஒரு தலைவனும் ஒரு தலைவியும் உலகறியத் திருமணம் புரிந்து கொண்டு ஓர் உள்ளத்தவராகி ஊர்வியக்க உறவும் பிறவும் வாழ்த்த இல்லறமாம் நல்லறத்தை நடத்தி வருவதைக் கற்பியல் என்பர்.

### தாய்மை

பெண்மையை, தாய்மையை உயர்வாக மதித்துப் போற்றி வாழ்ந்தவர் தமிழர். இக்காலத்தே பெண்களுக்கு இழைக்கப்படும் இழிவுகளும் கொடுமைகளும் அக்காலத்தில் இல்லை. வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டிவைக்கின்ற வெந்துயர் அந்நாளில் இல்லை. இதனைச்

**சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை.** (குறள் 57)

என்னும் குறள் உறுதிப்படுத்துகின்றது.

வையம் போற்றும் வாழ்வியல் நெறியாளர் திருவள்ளுவர். தமிழர்களின் வாழ்க்கை இலக்கணம் வைரமாகத் திருக்குறளில் ஒளிர்கின்றது. இன்றும் என்றும் உலகமே ஒப்பும் உயரிய அறக் கோட்பாடுகளை உணர்த்தியவரும் அவரே. அவரின் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன. களவியலாக ஏழு அதிகாரங்களும், கற்பியலாக ஏனைய பதினெட்டு அதிகாரங்களும் அமைந்துள்ளன.

### அவரா இவர்?

மிக நுண்ணிய, மெல்லிய மனவுணர்வுகளை எடுத்துரைப்பதில் வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரே. உலகம் வியக்கும் உரத்த சிந்தனைகளைத் தம் குறட்பாக்களில் வழங்கிய திருவள்ளுவர் ஆண் பெண் உறவால், அனைவரும் போற்றும் இல்லற நெறியால் ஏற்படும் இன்பத்தையும் நயம்பட நவின்றுள்ளார்.





அறத்தையும் பொருளையும் படைத்த வள்ளுவர் காமத்துப் பாலைப் படைத்துப் படிப்பவர்க்கு வியப்பையும் திகைப்பையும் ஒருசேர ஊட்டுகின்றார். அறம், பொருள் பாடிய இவரா இதனையும் பாடியுள்ளார் என்ற வினா நம்முள் எழுகின்றது.

மனத்துக்கண் மாசில்லாமல் இருப்பதே அறம் என்று அறத்தின் இலக்கணத்தையும், எந்த நிலையிலும் பிறருக்குத் தீமை தராத சொற்களைச் சொல்வதே வாய்மை என்று வாய்மையின் இலக்கணத்தையும் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்று அறிவின் இலக்கணத்தையும் இன்னோரன்ன பிற இலக்கணங்களையும் திருவள்ளுவர் தெளிந்தும் தேர்ந்தும் உரைத்துள்ளார். அதைப் போலவே மலரினும் மெல்லிது காமம் என்று காமத்தின் இலக்கணத்தையும் வரையறுத்துக் கூறியுள்ளார். காம இன்பம், மலரினும் மெல்லியது ஆகும். அதையறிந்து அதன் மென்மை கெடாமல் நுட்பமாக நுகர்வோர் உலகில் சிலரே என்பது அவரின் கணிப்பு.

### இருநோக்கு

காதற்குறிப்பைத் தலைவியின் பார்வையில் இருந்தும் செயல்களில் இருந்தும் உய்த்துணர்தலைக் குறிப்பறிதல் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். தலைவியின் மை தீட்டிய கண்களில் உள்ளது இரு நோக்கு ஆகும். அவற்றுள் ஒரு நோக்கு நோய் தருவது. பிறிதொன்று மருந்தாய் அமைவது என்று இருவர் கண் இணைகளும் பார்வையால் ஒன்றிக் காதல் செய்யுமாயின் அதற்கு மேற்பட்டு வாய்ச் சொற்களுக்குத் தேவை ஏற்படாது என்றும், அனிச்சப்பூவும் அன்னப் பறவையின் இறகும் கூட காதலியின் மெல்லிய உள்ளங்கால்களுக்கு நெருஞ்சி முள் போன்றவை என்றும் கூறுகின்றார் வள்ளுவர்.

### கண்ணுள் கலந்தவர்

தம் காதலர் எப்போதும் கண்ணுள் இருப்பதால் அவர் மறைவதை அறிந்து கண்ணுக்கு மையும் தீட்டேன் என்ற ஒரு தலைவியின் கூற்றை,

**கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து.** (குறள் 1127)

என்னும் குறள் நுட்பமாக நுவல்கின்றது. தம் காதலர் எப்போதும் நெஞ்சினுள் இருப்பதால் இவர் சூடுறுதலை அறிந்து சூடாக உண்ணுவதற்கும் அஞ்சுவதாக ஒருதலைவி உரைக்கின்றாள். கண் இமைத்தால் கண்ணுள் இருக்கும் காதலர் மறைவதை அறிந்து சிறிது நேரமே இமையாமல் இருக்கும் போதும், அவ்வளவிற்கே என் காதலர் அன்பில்லாதவர் என்றும் என்னைத் தூங்காது

நோயுறுத்தினார் என்றும் இவ்வூர் பழிதூற்றுமே என்றும் அஞ்சுகின்றாள் அத்தலைவி. இவ்வாறு கண்களுக்கு மை தீட்டினும், சூடாக உண்டாலும், கண் இமைத்தாலும் காதலர்க்குத் துன்பம் நேருமே என்று கசிந்து வருந்தி உள்ளம் கலங்குவதற்குக் காதல் கொண்ட தலைவியின் இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் வள்ளுவர்.

## அலர்

கிரகணம் ஏற்படும் போது நிலவைப் பாம்பு ஒன்று கவ்விக் கொண்டதாக உலகோர் பழித்துக் கூறுவர். தன் காதலரை ஒருநாள் பார்த்த அளவிலேயே இவ்வூர் அலர் தூற்றுவதும் அப்பழிக்கு இணையானதே என்று தலைவி பொருத்திக் காட்டிப் புலம்புவதை

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்புகொண் டற்று** (குறள் 1146)

என்னும் குறள்வழி சுட்டிக் காட்டுகின்றார்.

இக்காமநோயைப் பிறர் அறியாதவாறு மறைப்பினும் மறைக்க மறைக்க அடங்காமல் இறைப்பவர் இறைக்க இறைக்க ஊறும் ஊற்று நீர்போல மிகுதியாக வெளிப்படுவதாகத் தலைவனின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள இயலாத தலைவி துன்புறுவதை வள்ளுவர் மென்மையாக உரைக்கின்றார். காமம், புணர்ச்சியால் இன்பம் நல்கும்போது அவ்வின்பம் கடல் போல் பெரியதாம். இது பரிவால் துன்பம் தரும்போது அத்துன்பம் அக்கடலைவிடப் பெரியதாம் என்றும் காதலரோடு கூடி இன்புற்ற நாட்களில் எல்லாம் குறுகியனவாய் இருந்த இரவுகள், இன்று அவரைப் பிரிந்து துன்புறுங்காலத்து மிக நீண்டு செல்கின்றன. ஆதலின் அவை அக் கொடியவர் கொடுமையை விட மிகுந்த கொடுமை உடையவை என்றும் தலைவியின் ஆற்றாமையை அறிவிக்கின்றார் வள்ளுவர்.

## உறங்காத கண்கள்

காதலர் வாராதிருக்கும் போது அவர் வரவு நோக்கி வழிமேல் விழிவைத்துத் தூங்கமாட்டா. அவர் வந்த பின்போ, மீண்டும் பிரிதல் அஞ்சித் தூங்கமாட்டா. இங்ஙனம் அவ்விரு நிலைமையிலும் தம் கண்கள் பொறுத்தற்கரிய துன்பம் அடைந்தன என்பது ஒரு தலைவியின் ஏக்கம் இழையோடும் வருத்தம். பிறிதொரு தலைவி தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறாள். என் நல்ல நெஞ்சே! காமம், நாணம் என்னும் இரண்டினுள் காமத்தை விட்டுவிடு;அல்லது நாணத்தை விட்டு விடு!





இவ்விரண்டையும் நீ வைத்துக் கொள்ள விரும்பினால் அவ்விரண்டையும் தாங்கும் ஆற்றல் தமக்கில்லை என்று தன் உள்ளத் துயரை வெளிப்படுத்துவதை நயம்படக் கூறுகின்றார் வள்ளுவர்.

தம்மைவிட்டுத் தலைவன் பிரிந்துபோன நாள்களைச் சுவரில் குறிக்கிறாள். அக் குறிகளைத் தொட்டுத் தொட்டு எண்ணுவதால் தன் விரல்கள் தேய்ந்து விட்டன. அதோடு தன் கண்களும் தலைவன் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து ஒளியிழந்து பூத்துப்போயின எனப் புலம்புகிறாள் ஒரு தலைவி. இதனை,

**வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**
**நாள்ஒற்றித் தேய்ந்த விரல்** (குறள் 1261)

என்னும் குறள் புலப்படுத்துகின்றது.

நினைத்த அளவிலேயே உள்ளங் களிதலும், பார்த்த அளவிலேயே இன்புறுதலும் காமத்திற்கு உண்டு; கள்ளுக்கு இல்லை என்றும். நேரில் காணும்போது தலைவனின் தவறுகளை ஒரு சிறிதும் காணேன்; காணாத போதோ அத்தவறுகளைத் தவிரப் பிறவற்றைக் காணேன் என்றும் இரண்டு மனங்களின் இனிய உணர்வுகளைச் சுவைபடக் குறிப்பிடுகின்றார்.

## தும்மல் தந்த துயர்

தாம் தும்மிய போது தலைவி இயல்பாக வாழ்த்தினாள். அங்ஙனம் வாழ்த்தியவளே தன் கருத்தை மாற்றிக் கொண்டு உம் காதலியருள் யார் நினைத்ததால் தும்மினீர்? என்று கேட்டு அழுதாள் என்பதை,

**வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்**
**யார்உள்ளித் தும்மினீர் என்று.** (குறள் 1317)

என்னும் குறளிலும், யாரை நினைத்ததால் தும்மினீர் என்று காதலி புலத்தலை அஞ்சித் தும்மலை அடக்க, உம் காதலியர் உம்மை நினைத்தலை எனக்கு மறைக்கின்றீரோ என்று கூறிக் காதலி அழுதாள் என்பதை,

**தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்**
**எம்மை மறைத்திரோ என்று.** (குறள் 1318)

என்னும் குறளிலும் காதலியின் மெல்லிய நெஞ்சத்தைச் சொல்லோவியமாகக் காட்டுகின்றார் வள்ளுவர்.

திருவள்ளுவர் தேர்ந்த சிந்தனையாளர். துறவு, ஊழ் போன்றவற்றைச் சிறப்பித்துப் பாடியவராய் எல்லோரும் ஏற்கும்படியாக இன்பத்துப்பாலை எப்படிப் பாட முடிந்தது

என்று பலர் வினவக் கூடும். தமிழ்ப் பண்பாட்டில் அழுந்திய நோக்கும் போக்கும் உடையவர் திருவள்ளுவர் என்பது உலகுணர்ந்த உண்மை. காமம் என்றதுமே பலருக்கும் அருவருப்பான உணர்வுகளே மனத்தில் நிழலாடும். ஊழைப் பாடிய வள்ளுவரே ஆள்வினை உடைமையையும் பாடியுள்ளார்.

நயத்தக்க நாகரிகத்தை, ஞாலம் போற்றும் மாந்த நேயத்தை அனைவரும் போற்றும் சீரிய இல்லறத்தை எங்ஙனம் திருவள்ளுவரால் சிறப்பாகப் பாட முடிந்ததோ. அதைப் போலவே, மலரினும் மெல்லிதாகிய காமத்தையும் அவரது விழுமிய உலகியல் பட்டறிவால் பாட முடிந்திருக்கின்றது என்பது தெளிவு.

**1997 சிறந்த மனிதர் முனைவர் க.ப. அறவாணன்**

அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் பயாகிரபிக்கல் நிறுவனம் (**American Biographical Institutc - ABI**) ஆண்டு தோறும் சிறந்த மனிதர்களை உலகம் முழுவதிலுமிருந்து தெரிவு செய்தறிவிக்கிறது. **1997** சிறந்த மனிதர் எனப் புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் க.ப. அறவாணன் தெரிவு செய்யப் பெற்றிருக்கிறார். ஆங்கிலம், தமிழ், பிரஞ்சில் புலமை பெற்ற பேரா. அறவாணன், ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இதுவரை எழுதிய நூல்கள் ஐம்பது ஆகும். அமெரிக்காவிற்கு மும்முறையும், ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க, ஆத்திரேலிய நாடுகளுக்குப் பன்முறையும் கல்விப் பயணம் மேற்கொண்டவர். ஆப்பிரிக்காவில் உள்ள தக்கார் பல்கலைக்கழகத்தில், **(1977-1982)** ஐந்தாண்டுகள், செனகால் அதிபர் செங்கோர் அழைப்பிற் கிணங்கச் சென்று ஆய்வு நிகழ்த்தியவர். முன்னாள் இலயோலா கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் ஆக இருந்த இவர் பெற்ற விருதுகள் பல. அவற்றுள் அனைத்திந்தியர் கிறித்தவக் கல்லூரிச் சிறந்த பேராசிரியராக, தில்லித் தலைமை அமைப்பால் (**All India Chrisitian Higher Educational Association**) தெரிவு செய்யப் பெற்ற இவர் எழுதிய நூல்களான தமிழரின் தாயகம், தமிழர்தம் மறுபக்கம், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, கவிதையின் உயிர் உள்ளம் உடல் தமிழ்ச் சமுதாய வரலாறு படைப்பாளி + சமுதாயம் = இலக்கியம் என்பன சிறந்த நூலுக்குரிய பரிசைப் பெற்றன.



## சர்தார் வேதரத்தினம் பிள்ளை

**- பேராசிரியர் பொன். முத்தையன்,**
**ஆடவர் கல்லூரி, கும்பகோணம்**

சர்தார் வல்லபாய் படேல் அவர்களை இந்தியாவின் 'இரும்பு மனிதர்' என்பர். வல்லபாய் படேல் அண்ணல் காந்தியின் தளபதிகளில் குறிப்பிடத்தக்கவர். வடநாட்டில் 'பர்தோலி' என்ற இடத்தில், மக்களைத் திரட்டி, அன்றிருந்த வெள்ளையர் அரசுக்கு எதிராக 'வரிகொடா இயக்கத்தினை' வெற்றிகரமாக நடத்தியவர் வல்லபாய் படேல். இதனால்தான், 'சர்தார்' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. இதே போன்று தென்னாட்டில், தமிழகத்தில், ராஜாஜியின் தலைமையில் வேதரத்தினம் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். காந்தியின் கட்டளைப்படி நடைபெற்ற, இப்போராட்டம், இந்திய விடுதலை வரலாற்றில் மிகச் சிறப்பான ஒரு நிகழ்வாகும். அகில இந்திய அளவில், அனைவரும் வியக்குமாறு இப்போராட்டத்தினை நடத்திக் காட்டியவர் வேதரத்தினம் பிள்ளை ஆவார். ஆங்கிலேய அரசின் அடக்கு முறைகளுக்கு அஞ்சாமல், துணிவுடன், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் வெற்றிகரமாக இப்போராட்டத்தினை நடத்திய வேதரத்தினத்தின் சாதனை கண்டு நாடே வியந்தது. நெல்லையில் நடைபெற்றவிவசாயிகள் மாநாட்டில் வேதரத்தினத்துக்கு 'சர்தார்' பட்டம், அளிக்கப் பட்டது. இந்தியாவில் 'சர்தார்' என அழைக்கப்படுவோர் இருவர். ஒருவர் சர்தார் வல்லபாய் படேல். மற்றொருவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை, வேதரத்தினம் பிள்ளையின் நூற்றாண்டு விழா இப்போது கொண்டாடப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில், வேதாரண்யம் என்ற தலத்தில் வேதரத்தினம் பிள்ளை பிறந்தார்.

வேதாரணியம் பாடல் பெற்ற தலம். அப்பரும், ஞானசம்பந்தரும், மறைக்கதவம் திறக்கவும், அடைக்கவும் பாடியதலம். இக்கோயிலின் நிருவாகப் பணிகளுக்காக, நெல்லைச் சீமையிலிருந்து சுமார் 1000 ஆண்டுகள் முன்னர், சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் முன்னோர்கள் வந்தனர். இம்மரபினர், **திருமறைக் காட்டுத் தலத்தார்"** என்று சிறப்பிக்கப்பட்டனர். தாயுமான சுவாமிகள் இம்மரபில் வந்தவரே. தாயுமான சுவாமிகளின் ஏழாம் தலைமுறையினரான அப்பாக்குட்டிப் பிள்ளைக்கும், தங்கம்மாளுக்கும் இரண்டாம் மகனாக வேதரத்தினம் (25-2-1897) தோன்றினார்.

வேதரத்தினம், மரபான சைவக்குடும்பத்தில் பிறந்தமையால், இளமை முதலே, பக்தி, ஒழுக்கம், முதலான சிறந்த பண்புகள் இயல்பாகவே அமைந்து, விளங்கினார். தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலான இலக்கியங்களில் வேதரத்தினம் மிகுந்த ஈடுபாடு கொண்டு வளர்ந்தார். சிவந்தமேனி, கட்டான உடல்வாகு, நீறணிந்த நெற்றி, மடியில் திருக்குறள், திருநீற்றுப்பை. இவ்வித மான இனிய, எளிய தோற்றத்தில் வேதரத்தினம் இருப்பார். சினம் என்பதே அறியாத சீலர் வேதரத்தினம். எளிமை, இனிமை, நேர்மை. இவையே அவர் அறிந்த மந்திரங்கள். சிறு வயது முதலே, வேதரத்தினம், மகாத்மாவின் மீது தணியாத அன்பும், பக்தியும் கொண்டிருந்தார். தம் 18 வது வயதில் மாமன் மகள் கமலாம்பாளை (13) மணந்தார். குடும்பத்தொழிலான உப்பு வணிகத்தில் இருந்து வந்தார்.

1920 இல், சர்தார் வேதரத்தினம், வடநாட்டில் நடைபெற்ற (பெல்காம் நகரில்) காங்கிரஸ் மாநாட்டுக்கு, காந்தியைக் காண்பதற்காகவே சென்றார். அண்ணல் காந்தியின் ஒளிமுகத்தினைக் கண்ட அந்தக் கணமே, வேதரத்தினம், அவர்பால் தன்னையே இழந்தார். காந்தியே அன்று முதல் அவர் வழிகாட்டியானார். காந்தியமே அவரது வழியானது. அன்றுமுதல் வேதரத்தினம், மகாத்மாவின் மெய்யான சீடரானார். அண்ணலின் கொள்கைகளைத் தாம் மெய்யாகக் கடைப்பிடித்து, அவரது நிர்மாணப் பணிகளை வேதாரணியம் பகுதிகளில் செயலாற்றத் தொடங்கினார். வாழ்நாள் இறுதிவரை, வேதரத்தினம் தான்கொண்ட காந்திய அன்பிலிருந்தும், தொண்டிலிருந்தும் எள்ளளவும் தளரவில்லை. 'காந்தி சீடர்' என்றால் வேதரத்தினம் போன்றுதான் இருப்பார். இருக்க வேண்டும்' என்று பிறர் கருதுமாறு மெய்யான தொண்டில் தலைநின்றார்.

சர்தார் வேதரத்தினத்தின் சமுதாயப் பணி மிகப் பரந்தது. நிகரற்றது. 30-4-1930 இல் வேதாரணியத்தில் உப்பு சத்தியாக்கிரகம் தொடர்பாக ராஜாஜி கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டார். 6-5-1930 இல் சர்தார் வேதரத்தினம் கைது செய்யப்பட்டு ஆறு மாதம் சிறையிலடைக்கப்பட்டார். இவ்வாறு வேதரத்னம், நான்கு தடவை, ஏகாதிபத்திய வெள்ளையர் அரசினை எதிர்த்துப் போராடிச் சிறையிலடைக்கப்பட்டார். ஆனால் சிறைவாசம், சர்தார் வேதரத்தினத்தினை மேலும் புனிதமாக்கியது. சிறை வாசத்தில் வேதரத்தினம், கட்டுப்பாடும், கண்ணியமும் காத்துப் பெருமை பெற்றார். திருக்குறள், கீதை, ராமாயணம், இந்தி, இவைகளைக் கற்றல், கேட்டல், உடற்பயிற்சி, இசைப்பயிற்சி என்று சிறை வாழ்வினையே இனிமையான வாழ்வாக்கிக்





கொண்டார் சர்தார் வேதரத்தினம். கல்கி, பக்தவத்சலம், T.S.S. ராஜன், T. பிரகாசம், N. M. R. சுப்பராமன், ம. பொ. சி., இராஜாஜி, க. சந்தானம் போன்றோர், சர்தாருடன் சிறையிலிருந்த சிலராவர். சிறையிலிருந்த காலத்தில் வேதரத்னம் நிறைய நூல்களைப் படித்தார்.

சர்தார், வேதரத்தினம், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராகப் பதினான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

வேதாரணியம், திருத்துறைப்பூண்டி பகுதிகளில், அவர் செய்துள்ள பணிகளின் வளமையினை இன்றும் காணலாம். கடமையாற்றுவதில் வேதரத்னம், சளைக்காதவர். 1930 களில், சாலைகள், போக்குவரத்து போல்வன சிறப்பாக இல்லாத காலத்திலும் இடைவிடாது பயணம் செய்வார். தொகுதியின் குறைநிறைகளை நன்கு நேரில் கண்டு, உடனுக்குடன் சட்டமன்றத்தில் பேசுவார். எழுதுவார். அதிகாரிகளை உடனுக்குடன் கண்டு, குறைதீர்க்க நடவடிக்கை எடுப்பார். யார், எங்கு அழைத்தாலும், தன் சொந்தச் செலவில் செல்வார். எந்நிலையிலும் சலிப்பதில்லை. நன்கு, இனிமையாக, எளிமையாகப் பேசுவார். சர்தார் வேதரத்தினத்தின் சட்டமன்றப் பணி, அன்றும், இன்றும், ஏன் என்றும் சிறந்த எடுத்துக்காட்டான பணியாகும்.

சமுதாயத் தொண்டில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் சர்தார் வேதரத்தினம். உப்பளத் தொழில் வளர்ச்சி முதலாக, பழங்குடி மக்கள் மேம்பாடு ஈறாக, அவர் தொண்டு புரியாத துறையே இல்லை என்று சொல்லுமளவுக்கு அவரது நாட்டுப்பணி அமைந்தது. இடையூறுகள் எத்துணை வந்தபோதும், அஞ்சாமல், துடிப்புடன், செயலாற்றிக் காரியம் சாதித்தவர் வேதரத்தினம். இதற்கு எவ்வளவோ எடுத்துக்காட்டுகள் உண்டு எனினும் ஒன்று போதும் நாம் உணர. காந்தியின் கட்டளைப்படி அப்போது வேதாரணியம் பகுதிகளில் சர்தார் வேதரத்தினம், தொண்டர்களுடன் சேர்ந்து 'கள்ளுக் கடை மறியலில்' ஈடுபட்டு வந்தார். இவர்களது முயற்சியால், மக்கள் பலர் கட்குடியை விட்டனர். இதனால் கள்ளுக்கடை ஏலம் எடுத்தவர்கள் வெறுப்படைந்தனர். ஒருநாள், 'தவசிமுத்து நாடார்' என்பாரது கள்ளுக்கடை முன்பு, தொண்டர்களுடன் சென்று சர்தார் வேதரத்தினம் மறியல் தொடங்கினார். ஏற்கனவே, இவர்களது மறியலால், கள் வியாபாரத்தில் நட்ட மடைந்து சினமடைந்திருந்தார் தவசிமுத்து நாடார். அவர் கடை முன்னே மறியலைக் கண்டதும் கடுங்கோபமடைந்தார்.

கள்ளுடன் கூடிய பானை ஒன்றினைத் தூக்கி, 'சந்தானம்' என்ற காங்கிரஸ் தொண்டர் தலைமீதே போட்டு உடைத்து விட்டார் நாடார். தொண்டர் மண்டை உடைந்தது. பிற தொண்டர்கள் கொதித்தனர். சர்தார் வேதரத்தினத்தின் அன்றைய செல்வாக்கிற்கு, அவர் நாடாரை, என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, நாடாரிடம் அமைதியாகப் பேசினார். நாடார் உடனே வேதரத்தினம் பிள்ளையின் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டார். இதனைக் கண்ட தொண்டர்கள் ஆவேச நிலைக்கே வந்து விட்டனர். ஆனாலும் சர்தார் வேதரத்னம், சற்றும் கலங்காமல், உணர்ச்சி வயப்படாமல் தம் முகத்தில் வழிந்த எச்சிலைத் துடைத்துக் கொண்டு, மிகமிக அமைதியாக, 'கள்ளுக்கடை மறியலில் தாங்களும் கலந்து கொள்ளுங்கள்' என்று தவசிமுத்து நாடாரிடம் வேண்டினார். முடிவு? சர்தார் வென்றார். நாடார் தன் தவறுணர்ந்து, தாமே மறியலில் கலந்து கொண்டார். சர்தாரின் மனப்பக்குவத்திற்கும், தொண்டு மேன்மைக்கும் இந்த ஒரு சான்றே போதுமன்றோ

சர்தார் வேதரத்தினம் தமிழ்ப்பற்று மிக்கவர். பக்தி இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடையவர். பண்ணுடன் நன்கு பாடுவார். நயமாக, எளிய சொற்களில், கேட்பார் உள்ளம் கொள்ளுமாறு பேசுவார். சர்தாரின் நாவன்மை, "தீரர் சத்தியமூர்த்தியையும் இராஜாஜியையும்கூட இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிடும்" என்று பாராட்டப்படுகிறது. 1947 இல் தமிழ் வளர்ச்சிக்கழகம் அமைந்திட சர்தார் வேதரத்தினம் காரணமாக இருந்தார். இதனால், அவ்வாண்டில் மதுரையில் 'தமிழ் விழா' அமைந்தது. இதன் தொடர்ச்சியாகப் பின்னர் 'உலகத்தமிழ் மாநாடு' நடைபெற்றது. 1949 இல் திருவாரூரில் நடைபெற்ற 'தமிழ்விழாவில்' வேதரத்தினம் வரவேற்புக்குழுவின் தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். தமிழில் 'கலைக்களஞ்சியம்' வெளிவந்தபோது, அதற்கான ஆலோசனைக் குழுவில் சர்தார் உறுப்பினராக இருந்து சிறப்பாகப்பணி புரிந்தார். தாயுமானவர், பரஞ்சோதி முனிவர், மகாகவி பாரதியார் ஆகியோருக்குச் சர்தார் தம் ஊரான வேதாரணியத்தில் சங்கம் அமைத்துப் பணியாற்றினார். கவிஞர் அழ. வள்ளியப்பாவால் வெளியிடப்பட்ட "இதுதான் சட்டசபை" என்ற சர்தாரின் கட்டுரை சாரம் மிக்கது தினமணியில் வேதரத்தினம் எழுதிய ஓர் ஆய்வுக்கட்டுரை, அவரது தமிழ்ப்பணிக்கு முடிமணி போன்று அமைந்தது எனலாம். 1937 க்கு முன்னர், ஏடுகளில் 'மஹாராஜா ராஜஸ்ரீ' என்று எழுதுவது வழக்கமாக இருந்தது. பின்னர் இது மாறி, 'ஸ்ரீ' என்றானது. 1937 இல் இதனைத் 'திரு' என வழங்குமாறு





செய்தது வேதரத்தினத்தின் தினமணி கட்டுரையே. சர்தார் வேதரத்தினத்தின் கல்விப்பணியும், தமிழ்ப்பணியும் குறிப்பிடத் தக்கவையாகும்.

காந்தியின் நிர்மாணப் பணிகளை நிறைவேற்றுவதில் சலிப்பின்றிப் பணியாற்றிய சர்தார் வேதரத்னம் 1946 இல் வேதாரண்யத்தில் கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலத்தினை ஏற்படுத்தினார் 7-2-46 இல் தொடங்கப்பட்ட இக்குருகுலம் இன்று பொன்விழாவைக் கொண்டாடுகிறது. எவ்வளவோ சோதனைப் புயல்களையெல்லாம் கடந்து வந்துள்ள குருகுலத்தின் மேன்மையினை நாம் நேரில் சென்று காணவேண்டும். பெண்கள் முன்னேற்றத்திற்குத் தனியொருவராக நின்று சர்தார் வேதரத்தினம் ஆற்றியுள்ள சிறந்த தொண்டுக்கு இந்தக் குருகுலம் தரமான சிறந்த சான்றாகும்.

சர்தார் வேதரத்தினம் எளிய, மாமனிதர். காந்தியால் கவரப்பட்ட மேன்மையாளர். அவரைப் போன்றே, சட்டையணியாமல் கதர் அணிந்தவர். காந்தியின் அறிவுரைகளை வேதமாகக் கொண்டு வாழ்ந்தவர். ஒரே மகன் அப்பாக்குட்டி பிறந்த பின்னர் (25 வயதில்) மனைவியின் இசைவுடன் இல்லறத் துறவியாக விளங்கியவர். எளிமைக்கும், இனிமைக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தவர். ஏகாதசி, அமாவாசை விரதங்களை இடைவிடாமல் கடைப்பிடித்தவர். உண்ணா நோன்பும் உண்டு. பதவிக்கு அலையாத பண்பாளர். ஏற்ற பதவிகளுக்கு ஏற்றம் தந்தவர். கொள்கைப் பிடிப்பாளர். தந்திர அரசியலை விரும்பாதவர். தான் மட்டுமல்லாமல், தன் குடும்பத்தாரும் காந்தி வழி நிற்கச் செய்தவர். தொண்டுக்கே முதன்மை தந்தவர். அதனையும் தன் சொந்தச் செலவில் செய்தவர். இப்படி ஒரு மனிதர் தமிழ்நாட்டில் பிறந்து, பணியாற்றினார்' என்று கூறினால் இன்று பலர் வியப்படைவது இயல்பே. அந்த அளவுக்குக் கொண்ட கொள்கையில் விடாப்பிடியுடன் திகழ்ந்து, நாட்டுத் தொண்டுக்கே தன்னை முழுமையாகத் தந்தவர் சர்தார் வேதரத்தினம். அவர்தம் நூற்றாண்டு விழாவும், அவர்கண்ட குருகுலத்தின் பொன்விழாவும் நடைபெறுகின்ற இந்த ஆண்டில், தமிழ்நாடு, மட்டுமன்றி, இந்திய நாடே எண்ணிப் பெருமைப்பட வேண்டிய மாமனிதராக வேதரத்தினம் விளங்குகிறார். பகீரதன் அவர்கள் எழுதிய 'மறைக்காட்டு மாணிக்கம்' என்ற நூலில் சர்தாரின் வாழ்வியல் மிக விரிவாக உள்ளது. இந்தியர்கள் அனைவரும் சர்தார் வேதரத்தினத்தின் மேன்மைகளை எண்ணி மகிழவேண்டும். வாழ்க சர்தார் வேதரத்தினம் புகழ்.

## சைவ சித்தாந்தத் தொன்மை

முனைவர் - இரா. முத்துக் குமாரசாமி,
முதுநிலை விரிவுரையாளர் (ஓய்வு), திருர்.
கோ. ச. கோமதி, எம்.ஏ.எம்.எட்.,
வரலாற்று உதவி ஆசிரியை மாத்தூர்.

1.1 அனைத்து உலகச் சமய தத்துவ நெறிகளுக்குத் தாயகம் குமரிக்கண்டம் என்னும் நாவலந்தீவு; தாய் சைவ ஆகமச் சித்தாந்தம். அது சத்தி சதாசிவநாயகியுடனும் சிவனுடனும் சம்பந்தமானது. சிவசத்தியின் இறையின் சித்தத்தின் முடிவு சைவசித்தாந்தம் சைவத்தை அடைய உதவுவது, சைவத்தால் ஆனதும் சைவத்திற்குரியதுமான கொள்கை சைவசித்தாந்தம் சைவத்தினது கொள்கை, சைவத்தில்கண் தங்கிச் சிவமாக்க உதவும் கொள்கை சைவசித்தாந்தம். சைவமே சித்தாந்தம் சித்தாந்தமே சைவம். இதன் தொன்மை எது என இங்கு சிறிது ஆராய்வோம்.

### வரலாற்று நோக்கு

1.2. தொன்மை என்பது வரலாற்றுக்கு (வரலாற்றுப் பழங்காலத்திற்கு) முற்பட்ட காலம், அதற்கு முற்பட்ட தொல்பழங்காலம் அதற்குப் பிற்பட்ட. வரலாற்றுப் பழங்காலம் என மூன்று வகைப்படும். கி.மு. 50000 கி.மு. 40000 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் ஆகும். கி.மு.150000 முதல் கி.மு. 50000 தொல் பழங்காலம் ஆகும். வரலாற்றுப் பழங்காலம் என்பது கி.மு. 4000 - கி.பி. 500 இப்பாகுபாடு உலகப் புவியியல், வரலாற்றறிஞர்களால் வரையறுக்கப் பெற்றவை.

1.2. **அறிவியல் மொழி - இலக்கிய நோக்கு :** தொன்மைக்குத் தொல்லை, முன், பண்டு, முந்தை, தொன்று, பூருவம், புராணம், புராதனம், ஊழ், பழமை என பத்துப் பெயர்கள் உண்டு எனச் சூடாமணி நிகண்டு கூறுகிறது. தொல்லை என்பது கடல் கோள் தொல்லை, முன் என்பதும் கடல்கோளுக்கு முன் என்பதைக் குறிக்கும். பண்டு என்பது பாண்டியநாடு தோன்றிய காலத்தைக் குறிக்கும். சேர, சோழ நாடு தோன்றுவதற்குமுன் பண்டிருந்த பண்டமிகுந்த நாடு பாண்டியநாடு. நிலம், நீர், தீ, தீவளி என்ற நான்கும் புவியில் ஒன்றையொன்று முந்திக் கொண்டு எய்திய காலத்தைக் குறிக்கும். இது 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது என்பர் தொல் புவியியல் அறிஞர். கடல் 400 கோடி





ஆண்டுகட்கு முன்பு தோன்றியது என்பர் கடலியல் அறிஞர். பூமி தோன்றிய காலத்தைக் குறிப்பது தோன்று > தொன்று தொட்டு வரும் காலம் தொன்று ஆகும். விண் தலைவர் அகத்தியர் பூமியில், மின்னலகத்து வழியாகத் தோன்றி மனிதனாக உருப்பெற்ற காலத்தைக் குறிக்கும் என்பர்.

உயிர் ஆராய்ச்சியாளர் இது 17.5 இலட்ச ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது. அதனால் பூமி 23.5 சாய்ந்தது என்பர். இதுவே தொன்மைக் காலம். பூருவம் என்பது பூ நெருப்பாக இருந்தது நெருப்புக்கோளமாக இருந்தது. பூமி என்னும் உருவமாக புவி உருவம் கொண்ட நாள் முதலைக் குறிக்கும். புராணம் என்பது முப்புரம், புரத்தை அரணாகக் கொண்டு வாழ்ந்த காலத்தையும் சிவன் முப்புரத்தை எரித்த காலத்தையும் குறிக்கும். புராணம் நடைபெற்ற காலம் வேறு அதை எழுதிய காலம் வேறு. புரம் வியக்கத்தக்க தனம் - செல்வம் பெற்ற காலத்தைக் குறிப்பது புராதனம். ஊழ் என்பது எழுவகைப் பிறவிகளின் வினைப்பயன் முகிழ்க்கும், காலம் முதல் ஊழிக்காலத்தில் செய்தது அடுத்த ஊழிக்காலத்திற்கு வரும் பழமையுடையது. இதனை அறுதியிட்டுக் கூற முடியாது. வானோரால் கேட்டுக் கூறமுடியும். பழமைய்-பழமை பழைய உடம்பாக பூமி ஐம்பெருங்கண்டங்களும் ஒன்று சேர்ந்து பெரிய கண்டமாக ஒரே கண்டமாக இருந்த பழம் வடிவாக இருந்த நிலை லெமூரியா, குமரிக்கண்டம், கோண்டுவானாவாக இருந்த நிலையும் பின்பு ஐம்பெரும் கண்டமாகப் பிரிந்த நிலையையும் சுட்டிக் காட்டும். கடைசி பனியுகம் முடிந்ததும் பூமி தன் பழைய உருவத்தைக் காட்டிய காலம் கி.மு. 50000 ஆகும். மேற்குறிப்பிட்ட காலத்தை நம் சைவசித்தாந்த நூல்கள் அனாதிக்காலம் என்றும் கூறும். அவனை ஆதியாகக் கொண்ட காலம் ஆதி வியப்புறும் தீயாக இருந்த காலம் அவன் என்பது அகத்தியனையும் மூலவனையும் குமரனையும் குறிக்கும். நந்திக்காலமும் அனாதிக் காலமும் ஒன்றேயாகும். மூலநந்திக்காலம் இன்னும் பழமை யானது. சைவ சித்தாந்தத்தைத் தோற்றுவித்தவர் அவரேயாவர். நம்பிரான் ஆன அவர் எத்துணைப் பழமையானவரோ அவ்வளவு பழமை நம் சைவசித்தாந்தத்திற்கு உண்டு. தொன்மை தோன்றிய இடத்தின் தொன்மையைச் சார்ந்தது. பூமி தோன்றிய இடமான சூரியனின், ஆதவனின் தொன்மை 1500 கோடி ஆண்டுகளுக்கு

முந்தியது என்பர் அறிவியலறிஞர். அதுவே நாம் வாழும் அண்டத்தின் தொன்மையாகும். இத்தொன்மையில் தோய்ந்த நம் சைவ சித்தாந்தத்தின் தொன்மையே தன்னேரிலாத சமயத் தொன்மையாகும். கடவுள் தொன்மை தெய்வீகத் தொன்மை முப்பெருங்கடவுள் போன்று முப்பெரும் தொன்மை. சைவ ஆகமம் சித்தாந்தம் தோன்றிய இடம் குமரிக்கண்டத்தில் குமரிக்கோட்டில் உற்பத்தியாகிக் குமரி ஆற்றில் பாய்ந்த ஒன்பது ஆறுகள் ஏழுமலைச் சிகரங்கள் நவதீர்த்தம், சரவணப் பொய்கையிருந்த இடமாகும். அந்த இடம் இன்றும் இலங்கைக்குத் தெற்கே கடலுக்கடியில் கடல் மலையாக - 5082 - 10918 அடி ஆழத்தில் உள்ளது. அபநாசிநிகிடின் என்ற பெயரில் இருக்கிறது அப < அப்பு = நீர்; நாசி > நசி நீரினுள் நசிந்து போன நாசமாக அழிந்த பகுதி, பூநடுவிலுள்ள சிகரம் என்பது அதன் இரு பொருள், கடல் கோளால் கொள்ளப்பட்டது. அது முழுதும் அழியவில்லை. கடலில் அமிழ்ந்துள்ளது. கடலுக்கடியில் அழகன் போன்று இன்றும் அழகாகக் காட்சித் தருகிறது. இதனைத் தேசியப்புவியியல்இதழ் (யு.எஸ்.எ.) வெளியிட்டுள்ள இந்துமாக் கடல் தரைப்படம் விளக்குகிறது. தமிழ்நாட்டின் ஆசிரியர் யுனெசுகோ கழகத் தகவல் நூலக ஆராய்ச்சிப் பிரிவு குறிஞ்சி மலரில் வெளியிட்டுள்ள ஐம்பெருங்கண்டங்களின் பண்டைய நிலை என்ற நிலப்படம் குமரியாறு, பஃறுளி ஆறு பன்மலை அடுக்கம், குமரிக்கோடு பற்றி விளக்குகிறது. அக்காலம் கி.மு. 17000 ஆகும். ஒரு பெரிய கடல் கோள் கி.மு. 13600 ல் ஏற்பட்டு 130 அடி உயரம் கடல் மட்டம் உயர்ந்தது என்று வரலாற்றுக்கால ஆய்வாளர்கள் வரையறுத்துள்ளனர். எனவே நம் நாட்டுத்தமிழ்த் தேசிய இலக்கியமான கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரம் பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள என்று கூறிய தொன்மக்காலம் கி.மு. 13600. மாணிக்கவாசகர் கூறும் மாகேந்திரம் மலையில் ஆகமம் தோன்றியதாகக் கூறுவது உயர் ஆன்மாவிற்குக் கேந்திரமாக நடுவிடமாக விளங்குவது குமரிக்கோடு என்ற பொருளும் உண்டு. குமரிக்கோட்டையே குறிக்கும் மகவு + ஏந்து + இரு + அகம் > அம் குமரமகவை ஏந்திய பெரியமலையகம் இடம் என்பது அதன் பொருளாகும். குமரன் அசுரர் மீது படையெடுத்துச் சென்றதற்கு அடையாளமாகக்





குமரத் தீவு மடகாசுகர்க்கு வடக்கே உள்ளது. கி.மு. 3100 -ல் வாழ்ந்த திருமூலரால் இயற்றப்பெற்ற திருமந்திரமாலை முதலான சைவ சித்தாந்த ஆகம நூல்களில் காணப்படும் பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் எல்லாம் மொழியியல் விதிப்படி பல நூற்றுக் கணக்கான சொற்கள் இணைச் சொற்களாக ஆக உலகத் தொன்மை மொழிகளான எகுபதியம், சுமேரியம், கிதைதி, அசிரியம், அங்கேரியம், எபிரேயம், இலத்தீன், சமசுகிருதம், பாலி, சீனம் போன்ற மொழிகளில் கி.மு. 4500, 3500, 3000 முதல் வழங்கி வருகின்றன. எனவே நம் சைவ சித்தாந்தத்தின் தொன்மை வரலாற்றுப் பழங்காலம் ஆகும். வரலாற்றுக்கு முற்பட்டகாலமும் ஆகும். கடைசி பனியுகம் - காலம் அதற்கு முற்பட்ட தொல் பழங்காலமும் ஆகும். பழமை, தொன்மை, தொல்பழமை என்ற மூன்று உடையது. மேன்மொழிந்த புவியியல், கடலியல், உயர் உயிரியல் (ஆவி ஆராய்ச்சி இயல்) வரலாற்றுக் காலவியல், மொழியியல், சமயவியல், இலக்கியவியல் என்ற எழுவகைத் துறைகளின் ஒப்பீட்டாய்வால் சைவசித்தாந்தம் முன்னைப்பழம் பொருளுக்கு முன்னைப் பழம்பொருளாக விளங்கும் சதாசிவன் போன்று மூவகைத் தொன்மையில் சிறந்துவிளங்குகிறது என்ற பேருண்மையை இவ்வாய்வுக் கட்டுரை வெளிப்படுத்துகிறது. மேலும் விரிவாக ஆராய்ந்து உலகெலாம் வானுயர் சைவசித்தாந்தப் பழமைகளையும் சைவசித்தாந்தப் புதுமைகளையும் ஆராய்வோம் கண்டுபிடிப்போம். உலகெலாம் பரப்புவோம். திருவருளை இறைஞ்சுவோம்.

தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்து நின்றானே - திருமந்திரம் - 3014

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன் - 18 திருமந்திரம்

பதிபல வாயது பண்டிவ் வுலகம் - 33 திருமந்திரம்

மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்
உய்கண்டஞ் செய்த ஒருவனைச் சேருமின் - 1013 திருமந்திரம்

தேசம்ஒன் ... ங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச ம... ருந்நின் றானே - 2970 திருமந்திரம்

சிவபூமி - 2747 மேரு - 1419

## துணைபுரி நூல்கள் + கட்டுரைகள் - படங்கள்


1) முனைவர் இரா.முத்துக்குமாரசாமி - சைவ சிந்தனை செய்வோம் கட்டுரை - சைவசிந்தனை இதழ் மே 94

2) " - உலக மொழிகளில் தமிழ்ச் சொற்கள்-ஆய்வுக் கட்டுரை

3) " - அங்கேரி மொழியில் தமிழ்ச் சொற்கள்-ஆய்வுக் கட்டுரை

4) " - எருபதிய மொழியில் தமிழ்ச் சொற்கள் 'குறிஞ்சிமலர்' சொற்பட்டியல்

5) " - அசிரிய மொழியில் தமிழ்ச் சொற்கள் குறிஞ்சிமலர்

6) " - திருவள்ளுவர் வகுத்த புது நெறி ஒப்பீட்டாய்வு முனைவர் பட்ட ஆய்வேடு

7) முனைவர் சிவப்பிரியா - சைவ சித்தாந்தத்தின் பழமை சைவ சித்தாந்தம் மலர் 68, இதழ் 7

8) **J. M. Roberts** - The Earliest Men and Woman

9) **H. G. Wells** - A Short History of the World

10) **Lruing L. Gorden** - World History

11) **James Trager Holt** - The peoples Chronology - A year by year . Human events from pre - history.

12) **Books on Egyptian Chaldea** - Vol. III Egyptian Language

13) " - Vol. V Assyrcan Language.

14) " - Vol. X X I Hieroglyptic Vocabulary

15) **Science and Technology** - The World Around us Vol. 7,8

16) **National Geographic Society** - Indian Ocean Floor Map

17) அரசி அகத்தியன் - ஐம்பெருங் கண்டங்களின் பண்டைய நிலைநிலப் படமும் - விளக்கக் கட்டுரையும் குறிஞ்சிமலர்

18) " - உயர் உயிர் ஆராய்ச்சிக் குறிப்புகள் 1008

19) திருமூலர் - திருமந்திரம் - காசிமட வெளியீடு

20) மாணிக்கவாசகர் - திருவாசகம்

21) சூடாமணி நிகண்டு

22) இளங்கோ அடிகள் - சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை

23) இறையனார் அகப்பொருள் உரை

24) நா. ப. தணிகையரசு - தமிழில் சைவம் - கட்டுரை - குறிஞ்சிமலர்




## எழுவாய்!... பயனிலை!... செயப்படுபொருள்!

கவிஞர். எஸ். சங்கர நாராயணன்

எழுவாய் தமிழா, விழித்தெழுவாய்!
எதுவும் பயனிலை என்றுணர்வாய்!
பழுதுபட்டதுவுன் செயப்படுபொருள்!
பாதிப் பானது தமிழ்நாடே!

தமிழன் புத்தி சாலியெனத்
தானே எண்ணி மகிழ்கின்றான்.
அமிழ்தம் வாயில் தானாக
வந்து விழுமென நினைக்கின்றான்!

தமிழ்மொழி வளர எண்ணாமல்
தமிழை முழுங்கச் செய்யாமல்,
தமிழர் தாழ்வு கொளலாமோ?
தலைக்குனி வேற்பட விடலாமோ?

ஆட்சி மொழியாய்த் தமிழ்விளங்க,
ஆன முயற்சிகள் செய்யாமல்
காட்டிலும் மேட்டிலும் முழங்குவதால்
காரிய சாதனை ஏற்படுமோ?

ஆட்சி மன்றம். உயர்கல்வி,
அரசுப் பணி,பிற மன்றங்களில்
மாட்சி யுறுதமிழ் முழங்காமல்
மங்கிட விட்டது சரிதானோ?

அரசியல் கட்சிகள் பலப்பலவாய்
ஆனதனாலே யாதுபயன்?
திறமை கொண்ட அறிஞர்களும்
தேச நலனை எண்ணவில்லை!

வெட்டிப் பேச்சு, வீண்கூச்சல்,
வீதி மறித்துப் பேரணிகள்.
இட்டுச் செல்வதால் யாதுபயன்?
ஏழை வயிறும் நிறைந்திடுமோ?

எனவே தமிழா, விழித்தெழுவாய்!
இதயத் துணிவுடன் முன்வருவாய்!
கனவை நனவாய் ஆக்கிடவே,
காரிய உறுதி கொண்டெழுவாய்!

# வள்ளுவம் வழங்கும் மேலாண்மைக் கோட்பாடுகள்

க.சி. அகமுடைநம்பி, பி.இ., எம்.ஏ., திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

ஒரு நாட்டின் பண்பாடு, மரபு வழிப்பட்ட பழக்க வழக்கங்கள் நடைமுறைகள் போன்றவற்றுக்கு இசைந்ததாகவே அந்த நாட்டின் நிருவாக முறை அமைய வேண்டும் என்பதைப் புகழ்வாய்ந்த நிருவாகிகள் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஜப்பான் நாட்டிலுள்ள நிருவாக அமைப்பு முறை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள அமைப்பினின்றும் வேறுபட்டது. அங்குள்ள நிருவாக முறையில் சமநிலை அலுவலர்களுக்கு இடையில் மட்டுமின்றி, பல்வேறு மட்டங்களிலுள்ள பணியாளர்களுக்கு இடையிலும் தோழமை உணர்வுடன் கூடிய கலந்துரையாடல், ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், முடிவுகள் காணுதல் போன்ற நிருவாகப் பணிகள் யாவும் இயல்பான முறையில் நடந்தேறுகின்றன. இந்த நடைமுறைகளில் அதிகார ஏற்றத்தாழ்வுகள் குறுக்கிடுவதில்லை.

தனிமனிதனின் உணர்வு நிலைகளுக்கு அந்த நாட்டின் நிருவாக முறை மதிப்பளிக்கிறது. உணர்வு வழிப்பட்ட அவர்தம் பண்பாடு குறித்து அவர்கள் பெருமைப்படுகிறார்கள். தனிமனிதக் குணநலன்கள், மதிப்பீட்டுணர்வுகள், நேர்மை பாராட்டுதல், அழகியல் உணர்வுகள், எப்போதும் எளிமை பாராட்டும் இயல்புகள் போன்றவற்றுக்கு ஜப்பானியர்கள் பெரிதும் மதிப்பளிக்கிறார்கள்.

ஜப்பானியர் ஒவ்வொருவர் முகத்திலும் உரிமையுணர்வும், உறுதிப்பாடும் பளிச்சிடக் காணலாம். நிருவாக அமைப்பில் ஒருவர் எந்தப் படிநிலையில் இருந்தாலும், எந்தப் பணியை மேற்கொள்பவராக இருந்தாலும், தன்னுடைய பணிகளில் அவர் முழு ஈடுபாடு கொண்டவராக இருப்பதைக் காணலாம். அதனால்தான், ஜப்பானியர்கள் அதிவேகமாக முன்னேறிச் செல்கிறார்கள்.

ஜப்பானைப் போல் இந்தியாவிலும், இங்குள்ள பல்வேறு இன மக்களின் கூட்டுப் பண்பாடு, நாகரிகம், சீரிய மரபுநிலைகள், மக்களின் வாழ்வு நிலைகள் போன்ற பல கூறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள நிருவாக முறையில் மாற்றம் காண வேண்டியுள்ளது.





இன்றைய நிலையில், இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் அறுபத்தைந்து சதவிகிதத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் இங்கு நிலவுகின்ற கூட்டுக் குடும்ப முறை, சாதியமைப்புகள், பழங்குடி மக்கள் பிரிவுகள், வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருகின்ற மக்களின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் யாவும் நமது நிருவாக முறையில் மாற்றத்தை வலியுறுத்தும் கூறுபாடுகளாம்.

நல்ல நடத்தை, நேரம் தவறாமை, கால அட்டவணைப்படி செயல்படுதல், பணிந்து ஒழுகுதல் (Subordination), ஆதிக்கம் செலுத்துதல் (Superordination) போன்ற அனைத்து நிருவாக நடைமுறைகளும் மக்களின் பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்பவே அமையக் காணவேண்டும்.

* * *

ஆகவே, மேலை நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்டுள்ள ஒருமுக மைய ஆட்சி (bureaucracy) முறையில் இந்தியாவைப் பொருத்தமட்டில் மாற்றங்கள் சேர்த்தல் தவிர்க்க முடியாத் தேவையாகும். ஆனால் எத்தகு மாற்றங்கள் தேவை என்று முடிவெடுப்பது இன்னும் ஆய்வு நிலையிலேயே இருந்து வருகிறது.

இந்த ஆய்வுக்கு ஒரு முன்னோடியாக சிந்தனை ஊக்கியாகத் திருவள்ளுவரின் முப்பால் நூல் விளங்குகிறது. மனிதன் வாழ்வாங்கு வாழ வழிவகை கூறுகின்ற திருக்குறள், மனித வாழ்வின் வெவ்வேறு பகுதிகளையும் செவ்விய முறையில் கருதிப் பார்க்கிறது.

திருவள்ளுவர் ஒரு முனிவராக - தவசியாக - மெய்ப்பொருள் அறிஞராக இருந்திருக்கலாம். ஆனால், அவர் வழங்கியுள்ள "வள்ளுவம்" மனித வாழ்வின் எந்த ஒரு குறிப்பிட்ட வாழ்வுப் புலத்திற்கு மட்டும் உரியதன்று. ஒருவன் - ஒருத்தி இணைந்து வாழும் காதல் வாழ்வை அது கிளத்திக் கூறுகிறது; துறவு வாழ்வையும் சிறப்பித்து உரைக்கிறது. பொருளியல் வாழ்வு பற்றிப் பேசுகிறது; நாடுபற்றியும் நாட்டை ஆளும் மன்னனைப் பற்றியும் விண்டுரைக்கிறது.

வள்ளுவர் வாழ்ந்த காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்து சென்ற வள்ளுவரின் கருத்துரைகள், இன்று அமைந்துள்ள மக்களாட்சி நிருவாக முறைக்கு எப்படிப் பொருந்தும் என்ற வினா எழத்தான் செய்யும். அன்றைய முடியாட்சி முறைக் கருத்துகள் இன்றையக் குடியாட்சி முறைக்கு ஏற்றதாகுமா என்றும் கேட்கலாம்.

அன்றைய முடியாட்சியின் ஆட்சித்தலைவர் ஒரு குறுநில மன்னராகவோ அல்லது பெருநிலத்தின் மாமன்னராகவோ இருந்திருப்பார். அவருக்கு இணையான இன்றைய ஆட்சித் தலைவர், "குடியரசுத் தலைவர்" அல்லது "பிரதமர்" எனப்படுகிறார். அன்றைய மன்னருக்கிருந்த அதிகார எல்லைகள், இன்றைய குடியரசுத் தலைவர் அல்லது பிரதமரை விட அதிகமாக இருந்திருக்கலாம். ஆனாலும், பொது நிர்வாகத்தின் தன்மைகள், பொறுப்புகள், கடமைகள் போன்றவை கால ஓட்டத்தால் மாறுவதில்லை. காலத்திற்கேற்ப ஆட்சி முறை மாறலாம்; ஆளுமைக் கோட்பாடுகள் மாறுவதில்லை.

* * *

பொது நிருவாகத்தின் கூறுபாடுகளையும் மேலாண்மையின் கோட்பாடுகளையும் திருக்குறள் - பொருட்பாலில், அரசியல் அமைச்சியல் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வள்ளுவர் சொல்லிச் செல்கிறார்.

பொது நிருவாகத்தில் ஒரு நிருவாகத் தலைவர் எத்தகையவராக இருக்க வேண்டும். நம் சார்புப் பணியாளர்களை எவ்வாறு நடத்தவேண்டும், சார்புப் பணியாளர்கள் மேலலுவலர் களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பன போன்ற நிருவாக நடைமுறைகளையெல்லாம் பல குறள்கள் அழகாக எடுத்துரைக்கின்றன. மேலும், திட்ட வினைஞர் (Executive) பற்றியும், அவருக்கு இருக்கவேண்டிய வினைத் திட்பம், வினையாண்மை போன்ற திறப்பாடுகள் பற்றியும், பணிப் பொறுப்பை ஒப்படைத்தலில் (Delegation) கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் பல குறள்கள் எடுத்துக் கூறுகின்றன.

மனித உளவியல் பற்றி மிக ஆழமாக அறிந்தவர் வள்ளுவர். ஆகவே உளவியல் அடிப்படையில் அவர் கூறுகின்ற ஆளுமை மற்றும் மேலாண்மைக் கோட்பாடுகள் பலவும் இன்றைய ஆட்சியியலுக்கும் மேலாண்மைச் செயல்பாடுகளுக்கும் பொருத்தமானவை மட்டுமின்றி, பெரிதும் பயன்விளைக்கக் கூடியவைகளாகவும் உள்ளன.

* * *

## பொது நிருவாக நடைமுறை

பொது நிருவாகத்தில் மேலலுவலரிடம் சார்நிலை அலுவலர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது ஒரு முக்கியக்கூறுபாடாகும். மேலலுவலரை ஒரு சார்நிலை அலுவலர்





(Subordinate Officer) எவ்வாறு அணுகவேண்டும்? வள்ளுவர் கூறுகின்ற நுணுக்கமான அணுகுமுறை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்** (குறள்: 691)

(இங்கே வேந்தர் என்பதைத் தலைமை அலுவலர் என்று கொள்ளலாம்)

குளிர்கால மாலைப் பொழுதுகளில், வயல்களில் வேலை செய்யும் விவசாயப் பெருமக்கள், நடுக்கும் குளிரிலிருந்து விடுபட, அங்குள்ள மரக்கட்டைகள், இலைகள் சருகுகளைக் குவித்து வைத்து, அதற்குத் தீமூட்டி நெருப்பை உண்டாக்குவார்கள். கொழுந்துவிட்டு எரியும் தழலுக்கு அருகில் அமர்ந்துகொண்டு தீக்காய்வார்கள். அப்போது அவர்கள் வெந்தழலுக்கு மிகவும் நெருக்கமாக இல்லாமலும் அதற்கு மிக அப்பால் சென்று விடாமலும் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அமர்ந்திருப்பார்கள். குளிருக்கு அடக்கமாக, தேவையான வெம்மையைப் பெறுவதே அவர்களின் தேவை.

தழலுக்கு மிக அருகில் அவர்கள் சென்றுவிட்டால் தீ நாக்குகள் அவர்களைப் பதம் பார்த்துவிடும்; அப்பாலே அகன்று சென்று அமர்ந்தால் குளிரைப் போக்கவல்ல வெம்மை அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும்.

மேல் அலுவலர், இங்கு, வெந்தழலாக உருவகப்படுத்தப் படுகிறார். சார்நிலை அலுவலர்கள் மேல் அலுவலரை மிகவும் நெருங்கிவிடக்கூடாது. நெருங்கினால், அவர் தமக்குரிய மரியாதையைக் கொடுக்கத் தவறுவதாக மேலலுவலர் எண்ணி விடுவார். தம்மை மதிக்காத ஒரு சார்நிலை அலுவலரை மேல் அலுவலர் என்ன செய்வார் என்பதை விளக்க வேண்டியதில்லை. நெருப்பு சுட்டுவிடும் என்பதே இங்கு நினைவு கூறத்தக்கது.

இதற்கு மாறாக, மேலலுவலரைக் கண்டு கொள்ளாமல், அவரது நெருக்கத்தைத் தவிர்த்துத் தொலைவிலேயே இருந்துகொள்ளும் ஒரு சார்நிலை அலுவலர் நிருவாகப் பணிகளில் பின்தங்கிவிடுவார். மேல் அலுவலரின் ஒப்புதல் பெறமுடியாமல் அவருடைய பணிகள் தேங்கிவிடக் கூடும்; நிருவாக இரத்த ஓட்டம், அவரைப் பொருத்த மட்டில், தேவையான வெம்மை (Temperature) இல்லாமல் சுணங்கிவிடும்.

இவ்வாறு மன்னரை முன் நிறுத்திக் கூறப்பட்டுள்ள வள்ளுவரின் இதுபோன்ற அறிவுரைகள் தற்கால நிர்வாக வல்லுநர்களும் வியந்து போற்றத்தக்கவை.

* மேல் அலுவலர் தனியொரு ஆர்வத்துடன் விரும்புகின்ற பொருள்களைத் தாமும் விரும்பாமல் அமைவது, சார்நிலை அலுவலர்கட்கு ஆக்கம் விளைவிக்கும் (692).
* மேல் அலுவலர் பார்க்கும் நிலையில் ஒரு சார்நிலை அலுவலர் மற்றொருவரின் காதைக் கடித்துக்கொண்டு இரகசியம் பேசுவதும், நகையாடுவதும் கூடாது. இது போன்ற பழக்கங்களைத் தவிர்த்து ஒழுகுவது நல்லது (694).
* மேல் அலுவலரைப் பொருத்த மறைபொருள் எதையும் உற்றுக் கேட்காமல், அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று முயற்சி செய்யாமல், அப்பொருளை அவரே சொல்ல நேரும்போது தெரிந்துகொள்ளலாம் என்று அமைவது சாலச் சிறந்தது (695).

இவை போன்று இன்னும் பல உள்ளன. மன்னரைச் சேர்ந்தொழுகல் என்ற அதிகாரத்தின் பத்துக் குறள்களும் தற்கால அமைச்சர்கள், அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள், அலுவலகத் தலைவர்கள், அமைச்சுப் பணியாளர்கள் என்று பல்வேறு படி நிலையில் உள்ள, நிருவாக எந்திரத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும், பெரும்பயன் விளைவிக்கின்ற அறிவுக் கருவூலம் என்றே சொல்லிவிடலாம்.

* * *

## திட்ட வினைஞர்கள் (Executive)

இனி, திட்ட வினைஞர்கள் எத்தன்மையராக இருத்தல் வேண்டும் என்பது குறித்து வள்ளுவர் பலபடக் கூறுகிறார் :

* செயல் உறுதி என்பது அச்செயலைச் செய்கின்றவனின் மன உறுதியே; மற்றைய உறுதிகள் எல்லாம் வேறானவை (Resoluteness in Action) (661).
* ஒரு செயலுக்குக் குறுக்காக, வருகின்ற இடையூறுகளை அவ்வப்போது அகற்றிவிடுவது; அப்படியும் இடையூறு வந்து அந்தச் செயலைத் தடுத்துவிடும் நிலையில், தளர்ந்துவிடாமல் இருத்தல் ஆகிய இந்த இரண்டின் வழிப்பட்டது வினைத்திட்பம் (662).
* உருளும் பெரிய தேர்க்கு அச்சாணி போன்ற சிறிய ஆணி போன்றவர்கள் உலகில் உள்ளனர். ஆகவே, சிறுத்த உருவத்தை வைத்து எவரையும் குறைத்து மதித்து இகழக் கூடாது (667).
* **தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
  **தூங்காது செய்யும் வினை.** (672)





எந்த ஒரு திட்டச் செயல்பாடுகளிலும், விரைந்து முடிக்க வேண்டிய செயல்கள், காலம் தாழ்த்திச் செய்திட வேண்டிய செயல்கள் என்று (Priority X Posteriority) அமையும் செயல்பாடு களை வகைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். பிந்திச் செய்ய வேண்டுவனவற்றை முந்திச் செய்து முடிப்பது பயன் சிறக்காமல் போய்விடும். அதற்காக முதலீடு செய்த பணம் வீணாக முடக்கப்படுவதுபோல் ஆகிவிடும்.

இந்த இருவேறு செயல்பாடுகளையும், ஒருசேரச் செய்திட வேண்டிய செயல்பாடுகளையும், "PERT" என்று சொல்லக்கூடிய 'திட்ட மதிப்பீடு மற்றும் ஆராய்வுத் தொழில் நுணுக்கம்' என்ற வழிமுறைப்படி தனித்தனியாகப் பட்டியலிட்டு, வகைப்படுத்திக் கொண்டு நிறைவேற்றப் படுகின்றன.

* **வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
  **யானையால் யானையாத் தற்று.** (678)

இதன் பொருள்: எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஒரு செயலால் இன்னொரு செயலையும் முடித்துக் கொள்ளுதல், (பழகிய) யானையைக் கொண்டு (பழகாத) மதங்கொண்ட யானையைப் பற்றிக் கொள்வது போன்றது.

ஒரு திட்ட வினைஞரின் செயல் ஆற்றலை நெம்புகோல் ஆற்றல் போலும் (Leverage) அதிகரித்துக் கொள்கின்ற வழிமுறை இது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது பழமொழி.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு: வயல்களுக்கிடையே பாசன நீரைக் கொண்டு செல்வதற்கு வாய்க்கால் அமைக்கிறார் ஒரு திட்ட வினைஞர் என்று வைத்துக் கொள்வோம். வடிகாலாகவும் அதே வாய்க்கால் பயன்படுவதற்கேற்ற நிலச்சரிவு ஆங்கு அமைந்திருந்தால் , வடிகாலுக்கெனத் தனியாக, ஒரு வாய்க்கால் அமைக்க வேண்டியதில்லை. அமைக்கப்பட்ட பாசன வாய்க்காலையே வடிகாலாகவும் பயன்படுமாறு திட்ட வினைஞர் செய்துவிடுவார்.

* * *

## நல்ல நிருவாகி (Good Administrator)

ஒரு நல்ல நிருவாகி என்ற தலைமைக்கு உரியவர் தம்முடைய சார்நிலை அலுவலர்களிடம் கனிவுடன் கூடிய கண்ணோட்டம் (Gracious Demeanour) காண்பித்து இயங்க வேண்டும்.

* **கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
  **உரிமை உடைத்திவ் வுலகு.** (578)

நம் பொறுப்பிலுள்ள பணிகள் கெடாமல் (அனைவர்பாலும்) கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமையுடையது.

தம்முடைய சார் பணியாளர் ஒருவர் தவறு செய்துவிட்ட நிலையிலும்கூட, பலர் முன்னிலையில் அதனைச் சுட்டிக் காண்பித்துக் கண்டிப்பதைத் தவிர்த்து, தனியாக அவரை அழைத்து, கண்ணோட்டத்துடன் கண்டித்தால், அந்தச் சார்நிலை அலுவலர் தம் தவறுக்கு வருந்தி, மேலும் அத்தவறைச் செய்யாமல் பணியாற்றிட உறுதி கொள்வார். சிறுமைப்பட்டது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படாது. இதுவே ஒரு நல்ல நிருவாகியின் அணுகுமுறையாக அமைய வேண்டும். அத்தகு நிருவாகி, தம் நிருவாகப் பரப்புக்கு மட்டுமின்றி, பரந்துபட்ட இந்த உலகுக்கும் கூட உரிமை படைத்தவராவார் என்பார் வள்ளுவர்.

* தவறுகள் செய்துவிடுதல் என்பது மனித இயல்பு. சார்நிலைப் பணியாளர் ஒருவர் செய்யத் தகாத செயல் எதையும் செய்துவிட்டால் அவர் தண்டிக்கப்பட வேண்டியவரே. என்றாலும் தண்டிக்கும் வழிமுறையிலும் ஒரு நுணுக்கம் உள்ளது. வள்ளுவர் கூறுவார் -

**கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்** (562)

தவறான செயல்முறையைக் கண்டுகொள்ளாதவராக எந்த ஒரு மேலலுவலரும் இருத்தல் இயலாது. செய்யப்பட்ட தவறின் அளவுக்கு ஏற்ப, தவறு செய்தவரைக் கடுமையாக நோக்க வேண்டும்; எதிர் செயல்-தண்டனை- கடுமையாக இருந்தே தீரும் எனுமாப்போல் ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்கவும் வேண்டும். ஆயின், தண்டனை வழங்கும் தருணம் வந்துறும்போது, குற்றவாளியான பணியாளர் அதிகமாகப் பாதிப்புறாதவாறு எளிய தண்டனையை வழங்கி முடித்துக்கொள்ள வேண்டும். அந்த நிலையில், குறிப்பிட்ட அந்தப் பணியாளர் மேலும் அத்தவறைச் செய்துவிடாமல் கண்ணும் கருத்துமாகப் பணிபுரிய உறுதி கொள்வார். இதனைக் கண்ணுறும் மற்ற பணியாளர்களும் அந்த மேலலுவலரை மதிப்புடன் கருதுவார்கள். இதனால் மேலலுவலரின் நிருவாக மேலாண்மையும் தகைமையும் மென்மேலும் நிலை பெற்றதாக ஆகும்.

மாறாக, கடுமையான தண்டனை வழங்கிவிட்டால், அது பணியாளரின் பணியாக்கத்தைப் பாதிப்பதுடன், மற்றப் பணியாளர்களின் உள்ளார்ந்த கண்டனத்தையும் பெற்றதாக ஆகிவிடும். ஆகவே, தன்னுடைய ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர் (மேலலுவலர்) தவறு





செய்தவர்பால் அளவுகடந்து மோதுவது போல் காண்பித்து, அளவு மீறாமல் முடிக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

* * *

## பணிப்பொறுப்புகளை ஒப்படைத்தல் (Delegation)

* பலரும் அறிந்த குறள், பணிப் பொறுப்பை இன்னொருவரிடம் ஒப்படைக்கும்போது, கருதிப் பார்க்க வேண்டுவது,

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்** (517)

* பணிப்பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைக்குமுன் அவருடைய தகுதி, செயல்திறன் போன்ற அனைத்தையும் தெள்ளத் தெளிவுற ஆராய்ந்து கொள்ள வேண்டும். அந்தக் குறிப்பிட்ட பணிக்கு உரியவரைத் தேர்ந்து கொண்ட பின்னர், அவரை அப்பணிக்கு உரியவராக ஆக்கிவிட வேண்டும். (518) உரிமை இல்லாத, அதிகாரம் இல்லாத நிலையில், பொறுப்பை மட்டும் ஒருவரிடம் ஒப்படைத்தால் அவர் எப்படி அதனை நிறைவேற்றமுடியும்?

* **தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
  **தீரா இடும்பை தரும்.** (510)

பொருள் •: ஒருவரை நன்கு ஆராய்ந்து பார்க்காமல் ஒரு பொறுப்பை ஒப்படைப்பதற்கு அவரைத் தேர்வு செய்வதும், ஒருவரை ஒரு பணிக்குத் தேர்வு செய்த பின்னர் அவரை ஐயுறுவதும் நீங்காத துன்பத்தைத் தந்துவிடும்.

* ஆகவே, ஒருவரை நன்கு ஆராய்ந்தே தேர்வு செய்திட வேண்டும். தேர்வு செய்துவிட்ட நிலையில், அவரிடம் எந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்பதைக் கண்டுணர்ந்து அதனை அவர் மேற்கொள்ளுமாறு செய்து அவரை நம்பிக்கையுடன் கையாள வேண்டும். (509)

* அரிய நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தவரிடத்தும், ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அவரிடம் அறியாமை இல்லாமலிருப்பது அரியதாகும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட பணிப் பொறுப்பை ஏற்கும் தகுதி அவரிடம் உள்ளனவா என்பதைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். (503)

* ஏனெனில்,

**எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறாகும் மாந்தர் பலர்** (514)

* * *

## முடிப்புரை

இவ்வாறு நிருவாக, மேலாண்மைக்குரிய வள்ளுவரின் வழிமுறைகளை எழுதிக்கொண்டே போகலாம். நிருவாகத் திறன் மேம்படுவதற்கும், மேலாண்மை சீராண்மையாய்ச் சிறந்து விளங்குவதற்கும் தேவையான அறிவுரைகளைக் கொண்டுள்ள குறள்கள் நூற்றுக்கு மேல் உள்ளன.

ஒரு நாட்டின் ஆட்சியியல் ஏன் சீர்குலைகிறது. பொய்மையும் போலிமையும், ஊழல் நடைமுறைகளும் நாட்டு மக்களிடையே ஏன் ஊடுருவுகிறது என்றெல்லாம் கூட வள்ளுவர் கருதிப் பார்த்திருக்கிறார்.

உழைப்புக்கு உரிய மதிப்பீட்டை ஒரு நாட்டுத் தலைமை அளிக்கத் தவறினால், அந்த நாடு பொய்ம்மையுள் வீழ்ந்துவிடும் என்பார் வள்ளுவர். மனித உழைப்புக்கு மிக உயர்ந்த இடத்தைத் தருவது வள்ளுவம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று ஆணித்தரமாக அறிவுறுத்துகிறது அது. சுவாமி விவேகாநந்தரும் உழைப்பின் உயர்வை வள்ளுவர்போல் உரத்து ஒலிப்பார். உழைப்பை விட உயர்ந்தது எது என்ற வினாவை அவர் எழுப்புவார். அதற்கு அவரே விடையளிப்பார். உழைப்பை விட உயர்ந்தது அதிக உழைப்பே என்றவாறு அவருடைய பதில் உரை அமையும்.

ஒரு நாட்டில் ஊழல் நடைமுறைகள். ஏன், எப்படி ஏற்படுகிறது? அரசியலாளர்களே காரணம் என்பர் சிலர். இல்லை, இல்லை அரசு அலுவலர்களே காரணம் என்பர் இன்னும் சிலர். வள்ளுவர் கூற்று எதுவாக இருக்கும்?

தொழில் செய்கின்ற தொழிலாளர்கள், வினைஞர்கள் எனப்படுவோர் மனக் கோட்டம் இல்லாமல், "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை" யோடு இருக்கும்வரை உலகம் கோடாது என்கிறார் வள்ளுவர். வினைஞர்கள் கோணல் உற்றால், உலகமே கோணிவிடும்: கெட்டுவிடும். ஆகவே, ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பில் உள்ளவன், உழைப்பாளிகளைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பது வள்ளுவர் விடுக்கும் கட்டளையாகும்.

**நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடா துலகு** (520)

இதுபோன்று, வள்ளுவர் காண்பிக்கும் நெறிமுறைகளை, நம்முடைய நிருவாக முறையில் மாற்றங்கள் செய்திட முனையும் போது கருத்தில் கொண்டு ஆய்வு செய்வது பயன் விளைக்கும். வள்ளுவரின் மேலாண்மையியலைப் பள்ளி, கல்லூரிகளில் கற்பிக்க ஏற்பாடு செய்வது இன்றைய நிருவாகத் தேவையாகும்.



## "தாய்மொழி உணர்ச்சி"

தெ. முருகசாமி, காரைக்குடி

'பெயர்ப்பலகைகளில் தமிழ்' - பற்றித் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டு அமைச்சர் மாண்புறு மு. தமிழ்க்குடிமகனார் எழுதிய கட்டுரைக்குப் பின்னர் பலர் பல்வேறு நிலைகளில் கருத்தை வெளியிடுகின்றனர். 'மொழி என்பது பொருளாதார வாழ்நிலையோடு தொடர்புடையது என்பதால் பொருளாதார வளர்ச்சியிருந்தால் மொழிதானே வளர்ந்துவிடும்' என்பது ஒருசாரார் கருத்து, 'எந்த மொழியில் எழுதினால் என்ன? மொழியா சோறுபோடப் போகிறது?' என்பது மற்றொரு சாரார் கருத்து. 'தாய்மொழியில் எழுதினால்தான் மொழி உணர்வா?' என்பது இன்னொரு சாரார் கருத்து. இன்னும் சிலர் தூய தமிழில் எழுதச் சொல்பவர்கள் முதலில் தங்களைத் திருத்திக் கொண்டு பின்னர் பிறரைத் திருத்தட்டும்' என்கின்றனர். மேலும் சிலர் தாம் மேற்கொண்டுள்ள வணிகத் தொடர்பிற்கு ஒத்து வாராதே என்றும் கூறுகின்றனர். இப்படிப் பலர் பலவிதமாகக் கூறி மொழி நலம் பேணுவதில் காலக்கழிவு செய்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சியிருந்தால் மொழி தானே வளரும் என்ற கருத்து ஒரு கண்ணோட்டமேயன்றி அஃது முழுமையன்று. ஏனெனில் மொழிக்குப் பொருளாதார வளர்ச்சி அடிப்படையன்று. எந்த நாடு தாய்மொழியைப் புறக்கணித்துப் பொருளாதார வளர்ச்சியைக் கண்டது? சப்பான், சீனம் போன்ற நாடுகளில் அங்குள்ள இயல்பான தாய்மொழியாலன்றி வேற்றுமொழியால் பொருளாதாரம் வளரவில்லை. எனவே மொழிதான் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகலாமேயன்றி மொழிவளர்ச்சிக்குப் பொருளாதாரம் காரணமோ அடிப்படையோ அன்று என்பதை உணரலாம்.

பொருளாதாரம் வளர்ந்தால்தான் மொழி வாழும் என்ற கருத்து அலை ஓய்ந்ததும் குளிக்கலாம் என்பது போன்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வு என்ற சிக்கல் என்றைக்கும் இருப்பது, ஓயாதது. இஃது ஆசை அடிப்படையில் மனித மனத்தைப் பொருத்தது என்பதால் பொருளாதார சிக்கல் ஓயாது என்பதே உண்மை. மூக்குள்ள வரைக்கும் சளியிருக்கும். சளியிருக்கிறதே என்பதற்காக மூக்கை அறுத்தெறிவதில்லை. சளி வரும்போது

அதற்கு மருத்துவம் பார்த்துக் கொள்ள வேண்டுமே தவிர சளி வாராமல் தடுக்க முடியாது. திருடனாய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதன்றோ உண்மை! திருடனாய்ப் பார்த்துத் திருந்தினால்தான் திருட்டுத்தனம் ஒழிக்கப்படும் என்றால் அது அத்தைக்கு மீசை முளைப்பது போன்றது. எனவே சட்டத்தால் ஓரளவுதான் செய்யமுடியும். நாமாகத்தான் சிலவற்றைச் செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிகிறது. ஆக ஒருநாடு என்ற அமைப்பில் பொருளாதார ஏற்றத்தாழ்வென்ற சளிக்கிடையில் மொழி என்ற மூச்சுக் காற்றையும் இழுத்துவிட வேண்டும் என்பதே உண்மை. உடம்பிலுள்ள வேறுசில ஓட்டைகளிலும் காற்று போய் வந்தாலும் மூக்கிடமாகச் சென்றுவரும் காற்றே உயிர்ப்பானது. அவ்வாறே பிறமொழிகளின் தேவை நமக்கிருந்தாலும் மூச்சுக் காற்றின் உயிர்ப்புப் போன்றது ஒவ்வொருவர்க்கும் அவரவர்தம் தாய்மொழி உணர்ச்சி, மூச்சுக் காற்றின் உயிர்ப்பு இயல்பாக இல்லாதபோல கடுமையான மருத்துவம் செய்வது போலத்தான் மொழிப்பற்றையும் மொழி உணர்வையும் காலத்திற்கேற்பத் தூண்ட வேண்டியுள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் வடமொழிக் கலப்பைத் தாய்மொழியளவில் எப்படிக் கொள்வது எனச் சிந்தித்து வழி காட்டியதால்தான் கம்பர் காலத்தில் வடமொழிச் சொற்களும் இராமாயணக் கதைக் கூறுகளும் தமிழியலாய் மாறின. கம்பர் காலத்தின் அதேமொழி உணர்வு காலத்திற்கேற்ப மொழிக்கு வேற்று வளம் சேர்க்கும் வகையில் பாரதியின் காலத்திலும் தூண்டப்பட்டது. பாரதியைத் தொடர்ந்து பாரதிதாசன், மறைமலையடிகள் போன்றோர் கால ஓட்டத்திற்கேற்ப மொழி உணர்வைத் தூண்டினார்கள். அவ்வாறே நம் காலத்திற்கேற்ப மொழி உணர்வு ஊட்டப்பட வேண்டும் என்பதுதான் உண்மையே தவிர அதனை விடுத்து அதைக் கிண்டல் செய்வதும், 'இது முடியுமா? அவர் செய்தாரா? இவர் செய்தாரா? முதலில் தங்களைத் திருத்திக் கொண்டு பிறகு பிறரைத் திருத்தலாம்? என்றெல்லாம் சிலர் தம் இயலாமையை மறைமுகமாகச் சுட்டி நழுவுவது எந்த வகையில் பொருந்தும்?

ஒவ்வொருவரும் இயல்பாகவே தாய்மொழிக்கு முதலிடம் கொடுத்து விட்டால் சிக்கலுக்கு இடம் இல்லை. தாய்மொழியில்





எழுதினால்தான் மொழி உணர்வா? என்று அடாவடித் தனமாகக் கூறும் போதுதான் 'ஏன் எழுதக்கூடாது? அப்படி எழுதுவது நம் கடமையல்லவா? அந்த நாட்டில் இந்த நாட்டில்,எல்லாம் எழுத வில்லையா' என்றெல்லாம் கூறவேண்டிய கட்டாயம் வருகிறது.

குடியுரிமையுள்ள சனநாயக நாட்டில் எப்படி எழுதினால் என்ன என்று வாதிப்பது சரியானதுதான் என்றாலும் அது மனித நாகரிகத்திற்குப் பொருந்துவதன்று. ஏனென்றால் ஏனைய உயிர்களைப் போலத்தான் மனித உயிர் என்பதற்காக ஆடையின்றித் திரியலாமா? அப்படித் திரிவதுதான் இயற்கை என வாதிக்க ஒல்லுமோ? எனவே எப்படியும் எழுதலாம், பேசலாம் என்றல் அது ஆடையில்லாமல் மனிதன் திரியலாம் என்பதற்குச் சமம். ஆடைக்குள் அனைவரும் சமம் ( We are equal in our shirt) என்ற உண்மையில்தான் மானுட நாகரிகத்தை ஆடையைப் போர்த்திக் கொள்ளும் மானத்தால் வெளிப்படுத்துகிறோம். எனவே இப்படித்தான் செய்யவேண்டும் என்ற பகுத்தறிவுமிக்க மானுட உணர்ச்சி மொழி உணர்ச்சிக்கும் பொருந்துமன்றோ!

வளர்ந்துவரும் வாழ்க்கைச் சூழலில் நம்மால் முடிந்த அளவிற்குப் பிறர் சொல்லாமலேயே தாய்மொழியைக் கூடுமானவரை நடைமுறைப்படுத்துவதில் நமக்கு ஏன் வெட்கம்? இது நம்மைப் பெற்றெடுத்த தாயை இவள்தான் என் தாய் என்று கூற வெட்கப்படும் மானுடத் தன்மையற்ற மிருகத்தன்மைக்குச் சமம். குறிப்பாகச் சொன்னால் தன் தாயைத் தாய் எனக் காட்ட விரும்பாமல் கலைந்து போகும் அரிதாரம் பூசிய ஒருத்தியைத் தன்தாய் எனக் கூறவிழைகிறதே உலகம் என்றுதான் வேதனைப்பட வேண்டியுள்ளது. இது நாடக வாழ்க்கைக்கு வேண்டுமானால் பொருந்தலாம். நடப்பு வாழ்க்கைக்குப் பொருந்தாது. இதுதான் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சரின் ஒட்டு மொத்தமான குறிப்பு. அஃதாவது கட்டுரையின் நோக்கம் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற குறிக்கோளை எட்டும் முதல் படியாகப் பெயர்ப் பலகைகளில் முயன்ற அளவில் நல்ல தமிழை எழுதுவோம் எனச் சூளுரைப்பதேயாகும். கூட்டிக் கழித்து இந்த உண்மையைத் தேர்வு செய்யாதவர்கள் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனப்பலப் பல மொழிவது தமிழராய் உள்ள சிலர்க்கு அழகன்று.

இதுநாள்வரை தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்காத அவலத்தைப் போக்க இனியாவது அனைவருமாகக் கூட்டு

முயற்சியுடன் சிந்தித்துச் செயல்படுவோமாக. அங்ஙனம் செய்யும்போது கால ஓட்டத்தின் சில இன்றியமையாமையையும் கருத்தில் கொண்டு செயல்பட்டால் நல்ல தமிழை எங்கும் காணலாம். இத்தகு செயலை விடுத்து அவரவர்க்கும் உள்ள விருப்பு வெறுப்புகளால் குறையையே பேசிப் பேசி ஒன்றையும் சாதிக்காமல் பிறரையும் சாதிக்கவிடாமல் இருப்பது மானுடமாகாது.

மொழி சோறு போடுமா? என்றும் சிலர் கிண்டல் செய்கின்றனர். போடாது என உண்மைபோலப் பேசுகின்றனர். உலகத் தோற்றம் முதல் இன்றுவரையான நிலையை எண்ணிப் பார்த்தால் நாம் இன்றுகாணும் முன்னேற்றங்களுக்கெல்லாம் மொழிதான் மூல காரணம் என்பதே உணராமல் இருக்க முடியாது. இதனை வள்ளுவர் நுட்பமாகக் கூறுகிறார்.

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. (641)

மொழி என்ற ஓர் அமைப்பு உருவாகாதபோது மனிதனுக்குச் சிந்தனையிருந்திருந்தாலும் அதுவரை மொழி கருவியாயிற்று. ஒருவரின் சிந்தனை அடுத்தவர்க்கு மொழிவழியாகப் பாய்ந்தபோது தான் மேலும் சிந்தனை வளர்ந்தது. இச்சிந்தனையின் விளைவே இன்று நாம் காணும் உலகம். எனவே மொழிதான் சோறுபோட்டது என்பதை உணர்ந்தால் போடுவதும் இனிப் போடப் போவதும் அதுவே என்ற உண்மையை உணர்தல் அரிதன்று.

பகுத்தறிவோடு சிந்தித்தால் எதுதான் எதைச் சாதிக்கப் போகிறது. வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம் தானே? இவ்வுண்மையால் உலகம் வாளா இருக்கிறதா? 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்று கற்பித்துக் கொண்டுதானே மானுடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். (333)

என்பதன்றோ வள்ளுவம்! எனவே வாழ்ந்து மடியப்போகிற ஒவ்வொருவரும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சரியான முறையில் தேடிக்கொள்வதைப்போலவே வாழ்வை வளப்படுத்தும் நம் தாய் மொழிக்குப் பெருமை சேர்ப்பதில் நமக்கும் பங்குண்டு என்பதை நாம் உணர்ந்து பிறரையும் உணரச் செய்விப்பது தமிழராய்ப் பிறந்தோர் தலையாய கடன்.



# மும்மைச் சிறப்புடன் தமிழின் உறவு

முனைவர் மலையமான்

சிந்தையைச் சிறைசெய் முக்கனிச் சுவைவளம்
விந்தை எழுத்தாம் ஆய்த உரு நலம்
இத்தரை காணா முத்தமிழ் மொழித்தளம்
பத்தியின் குழந்தையாம் முத்தெய்வம் உறை நிலம்
எப்பா வலரும்தொழும் முப்பால் தரும்பலம்
தப்பா பதி,பசு பாச உளநிலை
முந்தை அரசரின் மும்முரசு புகழ்மணம்
செந்தமிழ் இசையின் மும்மணிச்† சுடர்புலம்
பூமணத் தமிழின்‡ மூவின ஒலிநயம்
மூவர் பாடிய தேவாரத் தேன்மயம்
பெண்,பொன் மண்எனும் ஆசையின் வேர்கள்
தென்குமரி விழுங்கிய முந்நீரின் சீர்கள்
மண் இதை ஆண்ட மன்னவர் ஆண்மை
முன்னைப் பாவலர் முச்சங்க மேன்மை
படைத்தல் காத்தல் அழித்தலின் ஆளுமை
தொடர்நலி போக்கும் திரிகடுகத் தோழமை
சுட்டெழுத்து மூன்றும் நட்டநல் உயர்வு
விட்டு விடாத மும்மல மயக்கம்
என்ற.
மும்மைச் சிறப்புடன் தமிழின் உறவு
செம்மை யாகவே பொருந்தி நிற்றலை
எந்த நாட்டிலும் இருந்திடில் கூறுவீர்!

---

† தமிழிசை மும்மணிகள் – 1. முத்துத் தாண்டவர் 2. மாரி முத்தாப்பிள்ளை 3. அருணாசலக் கவிராயர்

‡ த – வல்லினம், மி – மெல்லினம், ழ் – இடையினம்

## அருளாளர் வாக்கில் திருமால்

பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்

மாணிக்கவாசகராகிய அருளாளர் திருமாலைப்பற்றித் திருமால் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு சிவபிரான் திருவடியில் அருச்சிக்கும்போது ஒருபூக் குறைய, அதற்குப் பதிலாகத் தன் ஒரு கண்ணைப் பறித்து அருச்சித்ததாகவும், அதற்கு உவந்த சிவபிரான் மாலுக்குச் சக்கரம் அருளியதாகவும் திருத்தோணோக்கத்தில் கூறுகிறார்.

**பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்**
**தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே**
**சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற்கு அருளியவாறு**
**எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.**

(திருத்தோணோக்கம் 10)

என்பது அவர் பாடல்.

இப்படித் திருமாலைப் பற்றிக் கூறிய மாணிக்கவாசகர், திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியது பற்றியும்

**பிரமன் அரிஎன் றிருவரும்தம் பேதைமையால்**
**பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க**
**அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து**
**பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ** (மேற்படி 12)

என்னும் பாடலில் குறிப்பிடுகின்றார். அன்றியும் "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி" எனத் திருத்தெள்ளேணம், முதற்பாடலிலும் கூறியதோடன்றிப் பலபாடல்களில் சிவபிரான் திருமாலால் காணப்படாதவன் என்றும் கூறுகிறார்.

சிவபிரானின் திருவடியைத் தேடிக்காணாத நிகழ்ச்சி சக்கரம் பெற்ற நிகழ்ச்சிக்கு முற்பட்டதா பிற்பட்டதா? அடிதேடியது அகங்காரத்தால் நிகழ்ந்ததாதலின் முற்பட்டு நிகழப் பின் அதுநீங்கிச் சிவபூசை செய்து சக்கரம் பெற்றது நிகழ்ந்திருக்குமா?

"சிவபிரான் கடகரியும் பரியும் தேரும் உவந்து ஏறாமல் இடபம் உகந்து ஏறியது ஏன்?" என்னும் வினாவுக்குச் "சிவபிரான்முப்புரம் எரித்தபோது திருமால் இடபமதாக வந்து தாங்கினான்; அதனால் அதனை உகந்து ஏறினான்" என்னும் விடையைக் கூறுகின்றார் (திருச்சாழல் 15) இந்நிகழ்ச்சியும் எப்போது நிகழ்ந்தது? இடபமதாய்த் தாங்கிய போதே வீடுபேறடைந்ததாகக் கருதப்படாதா? அன்றித் திருவடியைக் கண்டதாகவேறும் கருதப்படாதா?

இம்முரண்பாட்டுக்குக் காரணம் யாது? அடுத்து அப்பரடிகள் கூறுவது காணலாம்.

நான்காம் திருமுறை அங்கமாலை என்னும் பகுதியில்,

**"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடியும் காணொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்"**

(அங்க மாலை - 12)





எனத் திருமால் சிவபிரான் திருவடியைத் தேடிக் காணாமையைக் கூறுகிறவர்,

**"மாலொரு பாகமாக மகிழ்ந்தநெய்த் தானத் தாரே"**

(திருநெய்த்தானம் - திருநேரிசை 7) என்றும்,

**"மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்"**

(திருவிடை மருதூர்த் திருத்தாண்டகம் 1) என்றும்,

**"அரியலால் தேவி யில்லை ஐயன் ஐயாற னார்க்கே"**

(திருவையாறு - திருநேரிசை 3 : 5) என்றும்

**"மாலை யிடப்பா கத்தே மருவக் கொண்டார்"** (பொதுதனித்திருத் தாண்டகம் 2:3) என்றும் சிவபிரான் திருமாலையே உமையம்மை யாக இடப்பாகத்தில் கொண்டார் என்றும் கூறுகின்றார்.

அடிதேடிய நிகழ்ச்சிக்குப் பின்னர் உமையம்மையாகச் சிவபிரானின் இடப்பாகம் அமர்ந்த நிகழ்ச்சி நடைபெற்றதா?

அப்பரடிகள் போலவே சம்பந்தரும் கூறுகிறார்.

**"ஓசையுள் ஒன்றினார் மால் கூறினார்"**

(திருத்தென்குடித்திட்டைப் பதிகம் 6) என்றும்,

**"மாதொரு பாலும் மாலொரு பாலும் மகிழ்கின்ற நாதன்"**

(திருப்பிரமபுரம் எய்யா வென்றிப் பதிகம் 2) என்றும் கூறுகிறார். இப்படிக் கூறிய சம்பந்தரே,

**"கோள்நாக அணையானும் குளிர்தா மரையானும்**
**காணார் கழல் ஏத்தக் கனலாய் ஓங்கினான்"**

(கோயில் முதற்பதிகம் பாடல் 9) எனத் திருமால் அடிதேடிக் காணாச் செய்தியையும் கூறுகிறார்.

"மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்" என அப்பரடிகள் கூற, "மாதொருபாலும் மாலொரு பாலும் மகிழ்கின்ற நாதன்" எனச் சம்பந்தர் கூறுவது சற்று முரண்படுகின்றது. சம்பந்தர் கூற்றில்மாலுக்கு வலப்பாகம் இடமாகிறது. முரண் ஏன்?

மாணிக்கவாசகரும் அப்பரடிகளும் பிரமர்பலர், மாலா வார்பலர், இந்திரர் பலர் தோன்றி மாண்டார்கள் என்னும் கருத்தினர்.

**"எண்ணிலி யிந்திரர் எத்தனையோ பிரமர்களும்**
**மண்மிசை மால்பலர் மாண்டனர் காண்"**

(திருத்தோணோக்கம் - 9)

என்கின்றார் மாணிக்கவாசகர்

**"நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்**
**ஆறுகோடி நாராயணர் அங்ஙனே"**

(ஆதிபுராணத்திருக்குறுந்தொகை 3) என்கிறார் அப்பரடிகள். இவர்கள் கூற்றிலிருந்து அடிதேடியமால் ஒருவர், இடபமாதாய்த் தாங்கினார் ஒருவர், சக்கரம் பெற்றார் ஒருவர், சிவபிரான் இடப் பாகமோ வலப்பாகமோ பெற்றார் ஒருவர் எனக் கொள்ளலாமா?

திருமால் சிவபிரானின் திருவடியைத் தேடிய வரலாற்றில் ஒரு புதிய கருத்தொன்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

"சிவபிரானின் திருவடியைத் திருமால் பன்றியாய்மண் இடந்து சென்று தேடிக் காணாமல் திரும்பிய பின், இறைவனை நோக்கி, `எந்தாய்! எனக் கிரங்கி நின் திருவடியைக் காட்டுக" எனவேண்ட, இறைவன் இரங்கித் தன் ஒரு திருவடியை மட்டில் காட்ட, மற்றொன்றையும் காட்டுவாயாக என நடராசப் பெருமானின் திருமுன்றிலேயே தவம் கிடந்தான்" - என்று கூறுகிறார் தம் திருக்கோவையார் என்னும் நூலில்.

> புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா து
> இரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன் ஈரடிக்கு என்இரண்டு
> கரங்கள்தந் தான்ஒன் று காட்டமற் றாங்கதுங் காட்டிடென் று
> வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றில்அம் மாயவனே
>
> (திருக்கோவையார் 86)

என்பது அப்பாடல்.

அப் பாடல் திருமால், நடராசப் பெருமான் முன்னிலையில் படுத்துக் கிடப்பதாக அமைந்த கோலத்தை, மாணிக்கவாசகர், தற்குறிப்பேற்றமாகப் பாடினார் என்று கொள்ளலாமே தவிர, அடிதேடிய வரலாற்றில் ஒரு கதையாகக் கொள்ளல் கூடாது என்னலாம். என்னலாமாயினும் ஒரு திருவடியைக் காட்டியதாகவும் மற்றொன்றும் காட்ட வேண்டித் தவம் கிடப்பதாகவும் திருமால் வரலாற்றில் இல்லாத ஒன்றை ஏற்றுதல் தவறேயாகும். அதனால் மாணிக்கவாசகர் காலத்தில் அடிதேடிய வரலாற்றின்மேல் வரலாறு ஒன்றிருந்து வழங்கியிருத்தல் வேண்டும். அதுபுலப்படவில்லை.

தில்லையில் தென்திசை நோக்கியாடும் நடராசப் பெருமானின் திருமுன்னர்த் தற்போதுள்ள திருமாலின் அமைப்பு, நடராசப் பெருமான் பக்கமாகத் தன் திருக்கால்கள் இருக்கத் தலை தென்பக்கமாக அமைந்து படுத்துக்கிடக்கும் அமைப்பாகும். இவ்வமைப்புத் தவம் கிடக்கும் அமைப்பாகாது. அதனால் மாணிக்கவாசகர் காலத்தில் நடராசப் பெருமானின் திருமுன்னர் நேரே திருமால் தவம் கிடந்த நிலையில் திருவுருவம் அமைந்திருத்தல் வேண்டும். அவர்க்குப் பிற்காலத்தில், கி.பி. 710 முதல் 775 வரை யாண்ட பல்லவ நந்திவர்மன் தான் பரம வைணவனாக மாறிய காலத்தில் தவம் கிடந்த திருமால் வடிவத்தைத் துயில் கொள்ளும் வடிவில் மாற்றி நேரே இல்லாமல் பக்கமாக அமைத்திருத்தல் வேண்டும் என்று நாம் கொள்ளலாம்.

மால்பலர் எனக் கொள்ளின் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனித்தனி மால்களைக் கொள்ளலாம். ஒருவர் தான்எனின் முதலில் அகங்காரத்தால் அடிதேடியதும், பின்ஒரு திருவடி கண்டு மற்றதும் காட்டுக எனவரங்கிடந்ததும், அதன்பயனாக இடபமதாகத் தாங்கியதும், அதன் பயனாக மோகினியாய் வந்து இடப் பாகம் பெற்றதும் ஆகிய நிகழ்ச்சிகள் முறையே நடந்திருத்தல் வேண்டும். அறிஞர் உலகம் கருதுவது என்னோ? சிவபிரான் மாலுக்கு அளித்தது இடப்பாகத்தையா வலப்பாகத்தையா என்பது கருதவேண்டுவதாம்.



# நூல் மதிப்புரை

நூல் : வைகரை அரும்புகள் (கவிதைகள்)
தொகுப்பு ஆசிரியர் : பாலச்சந்திரன் ஜேகப்
வெளியீடு : வைகை நிலாப் பதிப்பகம்
432, பகுதி I, 17- வது குறுக்குத் தெரு,
பாரதி நகர், சத்துவாச்சாரி, வேலூர் – 9
பக் : 80 விலை : ரூ. 20/-

இன்தமிழ்க் கவிஞர்கள் ஐவரின் கூட்டு முயற்சியால் உருவான குழந்தைக் கவிதைகளின் தொகுப்பு இந்நூல். கவிதைகள் ஒவ்வொன்றும் தேன் துளிகள்!

கவிஞர்கள் பாலச்சந்திரன் ஜேகப், வே. இரா. சிவஞான வள்ளல், பால முரளி, உடுமலை இளங்கண்ணன், குழலவன் ஆகியோர் தம் உயரிய கவிதைகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

வாரியார் பற்றிப் பாடவரும் பாலமுரளி,

> 'பள்ளிக் கூடம் பலவும் கட்டி
> பாங்காய்க் கல்வித் தொண்டு புரிந்து
> வள்ளல் முருகன் புகழைப் பாடி
> வளமே சேர்த்துப் புகழைக் கொண்டார். (பக்.29)

என்பது அருமை.

> பயந்து போனால் உலகம் - உன்னைப்
> பரிகசிக் கும் தம்பி!
> வியக்கும் வண்ணம் துணிவு - நீ
> வீறு கொண்டே எழுக! (பக்.79)

எனும் சிவஞான வள்ளல் பாடல் மிக அருமை.

நூல் : இதய உதயம் (கட்டுரைகள்)
ஆசிரியர் : பேராசிரியர் சி. பழநி
வெளியீடு : கபிலன் பதிப்பகம்
2/9D N3, பாரதிதாசன் தெரு
பாகாயம். வேலூர் – 632002
பக் : 106 விலை : ரூ. 20/-

இந்நூலின் ஆசிரியர் வேலூர் ஊரீசுக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர். தமது வாழ்வில் கண்ட – கேட்ட – உற்ற – உணர்ந்த அனுபவங்களை ஒரு பக்கக் கட்டுரைகளாக்கி எழிலுறத் தந்துள்ளார். எளிய தமிழ், இனிய நடை, உயர்ந்த நோக்கம் இவற்றின் தொகுப்பே இந்நூல்.

அழகு, அமைதி, ஆன்ம நேயம், தன்னம்பிக்கை, சுயநலம், நகைச்சுவை, அகிம்சை, தத்துவம் என 66 தலைப்புகளில் இவர் கூறும் கருத்துகள் இளைய தலைமுறையினர்க்கு உயர்ந்த வழிகாட்டுதல்களாகும்.

ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் ஒரு நன்மொழியைப் பொன்மொழியாகத் தந்துள்ளமை நன்று.

வேலூர் ம. நாராயணன் எம்.ஏ.

### மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79. | 5 00 |
| திரு வேம்பையன், மறைமலைநகர் | 10 00 |
| தவத்திரு. ஈசுவர அடிகள் அவர்கள் | 5 00 |
| திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையரங்கம், சென்னை – 2. | 25 00 |
| புலவர் வீ. பழனிவேல் | 10 00 |
| தாமரைச் செல்வி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| முத்துமணி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம், சென்னை – 18. | 10 00 |
| டாக்டர் பூவண்ணன், கோவை – 11 | 10 00 |
| திரு பி. வி. கிரி, சென்னை. | 15 00 |

### மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| தவத்திரு. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு | 25 00 |

மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

செயலாளர், மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம்
154, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிட்.

## இசைத்தமிழ்

**திங்கள் தோறும் வீசும்
தேனிதழ்த் தென்றல்**

தமிழிசை மரபுகளுக்குரிய மறைக்கப்பட்ட செய்திகளை இலக்கண, இலக்கியச் சான்றுகளோடு மாறுபட்ட இசைப்பண்கள் மறைபட்ட சுரங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தி எடுத்துக் கூறவல்ல மாத இதழ்

ஆசிரியர்
முத்தமிழ்ச் செம்மல் டாக்டர்
புரட்சிதாசன், எம்.ஏ.

பழந்தமிழிசை பற்றிய அரும் பெரும் செய்திகள் தாங்கி வரும் அரிய கட்டுரைகள்

□

தமிழிசைக்குப் பாடுபட்ட பெருமக்கள் வரலாறுகள்

□

தமிழிசைவாணர்களின் படங்கள் வரலாறுகள்

□

தமிழிசை இயக்க வரலாறு

□

இசைத்தமிழ்க் கருவூலமாக மலரும் மாத இதழ்

சிறப்பாசிரியர்,
சைவசித்தாந்தக் கழக
ஆட்சியாளர்
இரா. முத்துக்குமாரசுவாமி எம்.ஏ.

வள்ளுவர் பண்ணை
ந. பழநியப்பன்
உமா பதிப்பகம்
இராம. லட்சுமணன்

மாத இதழ் ரூ. 5/-
ஆண்டுக் கட்டணம் ரூ. 60/-
புரவலர் கட்டணம். ரூ. 5000/-

அலுவலகம்,
17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
தொடர்புத் தொலைபேசி:
8283328

மொத்த வியாபாரிகளுக்கு 30% கழிவு
தொடர்பு கொள்க:

**பாண்டியன் பாசறை**
17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

Regn. No. G/17/ M/4899
Licence No. TN/MS/WPP/30

மே — 1997

## கழகப் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| மாமனிதர் மண்டேலா - இராம்குமார் | 75 00 |
| நினைவுத் திரைகள் (என் வரலாறு) - கா. பொ. இரத்தினம் | 60 00 |
| திருவாசகம் தெளிவுரை - ப. இராமநாத பிள்ளை | 75 00 |
| மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன் - அம்பி | 35 00 |
| இதயமும் இதய நோய்களும் - தமிழம் பன்னீர்செல்வம் | 25-00 |
| திருமுருகன் அந்தாதி - ம. அரங்கநாதன் | 5 00 |
| நெல்லை மாவட்டச் சித்தர்கள் - சக்தி பி. சுப்பிரமணியம் | 40 00 |
| மானிட உடல் இயக்கவியல் - டாக்டர் கதிரேசன் | 35 00 |
| மருத்துவத் தமிழ்க் களஞ்சியம் - டாக்டர் கதிரேசன் | 35 00 |
| ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் - சு. ந. சொக்கலிங்கம் | 45-00 |
| விண்வெளிப் பயணம் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் | 35 00 |
| The Power of Vaastu - T. Subramaniam | Print |
| வாஸ்து | ,, |
| பாவேந்தர் நினைவுகள் - மு துரைசாமி | 25 00 |
| கலித்தொகை- நச்சினார்க்கினியர் உரை | 150 00 |
| செந்தமிழ்ச் செந்நெறி - மா. சண்முக சுப்பிரமணியம் | 60 00 |
| இறைமையில் இசைந்த வாழ்வு - மா. சண்முக சுப்பிரமணியம் | 25 00 |
| தமிழ் வாழ வேண்டும் - டாக்டர் ச. முத்துக்குமரன் | 35 00 |
| குறள்வழிச் சிந்தனைகள்-ஒரு புதுப்பார்வை - புலவர் பா வீரமணி | 35 00 |
| மரகதவீணை - இலக்கிய நாடகம் - டாக்டர் சொ. சிங்காரவேலன் | 40 00 |
| இலக்கியமும் மனித வாழ்க்கையும் - பொன்னம்பலநாதன் | 30 00 |

அப்பர் அச்சகம், சென்னை-108.




சிலம்பு 71 பரல்-10
ஜுன் 1997
வள்ளுவர் ஆண்டு 2028
வைகாசி

''செந்தமிழ்ச் செல்வி''
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு :
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப அறவாணன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.,
ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிப்.,

## உள்ளுறை


| | |
|---|---|
| தாமரைச் செல்வர் வ.சு. ஐயாவின் வாழ்க்கை வரலாற்றுப் பணி | 362 |
| புதிய தமிழ் இயக்கம் நூல் வெளியீடு | 366 |
| ''பாவாணர் — ஒரு கலங்கரை விளக்கம'' | 367 |
| சைவ சித்தாந்தப் புதுநெறி | 374 |
| மழலைக் கவிஞர் பி. வி. கிரிக்கு இந்தியன் வங்கி விருது | 380 |
| குன்றக்குடியும் கோலத்தமிழும் | 381 |
| எழிற்றமிழ் வாழச் செய்திடுவீர் | 385 |
| இறந்தார இரந்தாரா | 386 |
| மேலாண்மை மொழி | 391 |
| 'ழ' கரத்தை 'ழ' கரமாகவே ஒலிக்கவும் | 397 |
| வாழ்க பல்லாண்டு | 398 |
| நூல் மதிப்புரை | 399 |
| மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை | 400 |


## குறள்வழிச் சிந்தனைகள் ஒரு புதுப் பார்வை

புலவர் பா. வீரமணி எம்.ஏ.,

திருக்குறளின் கருத்துக்களை புதிய கண்ணோட்டத்துடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும் விளக்குகின்றார் இவ்வாசிரியர் புலவர் பா. வீரமணி, பேரா. தெ. பொ. மீ. யின் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதுடன் தம் கருத்துக்களையும் அரிய விளக்கத்துடன் பொருள் கொடுக்கிறார். தக்கார் யார்? இலர் பலர் யார்? உலகிற்றியான் யார்? இறந்தாரா? இரந்தாரா? போன்ற ஒன்பது தலைப்புக்களில் தம் கருத்துக்களை ஆராய்ச்சிப் பார்வையோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் கூறுகிறார் இவ்வாசிரியர். ஆய்வாளர்களுக்குப் பயன்படும் அரிய நூலாகும்,

**விலை ரூ. 35**

# செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு 2028 - வைகாசி
ஜுன் - 1997
சிலம்பு - 71; பரல் - 10

## தாமரைச் செல்வர் வ. சு. ஐயாவின் வாழ்க்கை வரலாற்றுப் பணி

வாழ்க்கை வரலாறு என்பது இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பகுதி. நாட்டு வரலாறு அந்த நாட்டு மக்களின் வரலாறு பண்பாடு முதலியவற்றை எடுத்துக் கூறுவது போல வாழ்க்கை வரலாறு ஒரு தனி மனிதனின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் அவரை எந்த அளவு பாதித்துள்ளது என்பதுடன் வரலாறு எழுதுமளவிற்கு அவர் வாழ்க்கை எவ்வளவு சுவையான செய்திகளைத் தன்னகத்தே அடக்கியுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டும். பெரும்பாலும் ஏதாவது ஒரு துறையில் புகழ் பெற்றவர்கள் வரலாறுகளே எழுதப்படுகின்றன. அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவதற்கு எவ்வளவு அரும்பாடு பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் வரலாற்றைப் படித்துத்தான் மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஒருவர் உயர்வதற்கும் முன்னவர்கள் வாழ்க்கை வரலாறுகள் பெரிதும் துணை நிற்கின்றன.

ஒருவர் தம்முடைய வரலாற்றைத் தாமே எழுதுவதென்பது தன் வரலாறு (Autobiography) எனப்படுகிறது. இத்தகைய வரலாறுகளில் உண்மைகள் நிறைந்திருக்கும். தவறான தகவல்கள் வர வாய்ப்பே இருக்காது. ஊகங்களுக்கு இவற்றில் இடமேயில்லை. இவற்றுக்கு மாறாக மற்றவர்களைப் பற்றிப் பிறர் வரலாறு எழுதும்போது சரியான தகவல்கள் கிடைக்காவிடின் எல்லாமே ஊகங்களின் அடிப்படையிலேயே எழுதப் பெறும். இதில் நம்பகத்தன்மை எதிர்பார்த்த அளவில் இருக்காது. மாறுபட்ட செய்திகளும் தகவல்களும் வர வாய்ப்புண்டு.

தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்பது மிகமிகக் குறைவு. இந்திய அளவில்கூட அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் சத்திய சோதனை ஒன்றுதான் நாடு முழுவதும் பரவியிருக்கிறது. இந்திய மொழிகள் எல்லா மொழிகளிலும்

மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது சிறந்த தன் வரலாறாகும். தமிழில் இப்படிக் குறிப்பிட வேண்டுமாயின் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் 'வாழ்க்கைக் குறிப்புகள்' நூல் ஒன்றை மட்டுமே குறிப்பிடலாம். இது சிறந்த தன் வரலாறாகும்.

தமிழகத்தில் சங்க காலம் முதல் நடப்புக் காலம் வரை எத்தனையோ புலவர்கள் வாழ்ந்து மறைந்துள்ளனர். இவர்களைப் பற்றிய சரியான வரலாற்றுக் குறிப்புகளே கிடைக்கவில்லை. இவர்கள் வரலாற்றையெல்லாம் தொகுத்து வெளியிட வேண்டுமென்று வ.சு. ஐயா அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். இப்பணியில் இருபெரும் புலமையாளர்களை ஈடுபடுத்தினர். இதில் பெரு வெற்றியும் கண்டனர்.

ஒரு பல்கலைக் கழகம் ஒரு மாபெரும் அறிஞர் குழுவை அமைத்து, பல்லாண்டுகள் உழைத்து செய்ய வேண்டிய பணியை இருபெரும் புலவர்களை வைத்துக் கொண்டே பத்துப்பதினைந்து ஆண்டுகளில் செய்து முடித்தார். இது மாபெரும் சாதனையாகும். ஏறத்தாழ 4000 புலவர்களைப் பற்றிய குறிப்புகளை 7000 பக்கங்களில் 60 நூல்களில் அச்சிட்டு வெளியிட்டனர். இந்த அரிய பணியை இந்தக் காலகட்டத்தில் மீண்டும் இதுபோல் உருவாக்குவதென்பதே மிகக் கடினம். ஏனெனில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாடு முழுவதும் சிதறியிருந்த சிறுசிறு தனியார் நூலகங்கள் பேணுவாரின்மையால் அணியிழந்து அழிந்து விட்டன. எனவே சரியான நேரத்தில் சரியான பணியைச் சரியான திறமையாளர்களைக் கொண்டு சரியாகச் செய்து முடித்த பெருமை ஐயா. வ. சு. அவர்களையே சாரும்.

சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் நூற்றுக்கணக்கான புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். அதைப் பாடிய பெருமக்கள் வரலாற்றுக் குறிப்புகள் எளிதில் கிடைப்பதில்லை. அவற்றில் சில புலவர்களின் பெயர்களே தெரியாமல் போய்விட்டன. அப்பாடல்களைத் தொகுத்தோர் அவர்கள் பாடலிலிருந்து சில சுவையான தொடர்களையே புலவர்களின் பெயர்களாக்கிவிட்டனர். ஓரிற்பிச்சையார், அணிலாடுமுன்றிலார், செம்புலப்பெயனீரார், விட்ட குதிரையார் இன்னும் பல. இவையெல்லாம் இன்றைய எழுத்தாளர்கள் தங்கள் உண்மைப் பெயர்களை மறைத்துக் கொண்டு புனைபெயர்கள் அமைத்துக் கொள்வது போல் உள்ளன.





இந்நிலையில் சங்கப்புலவர் பாடல்களையெல்லாம் நுணுகி யாய்ந்து, பாடிய புலவர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளைப் பல்வேறு நூல்களைக் கொண்டு திரட்டி 'சங்கப் புலவர் வரிசை' என்ற தொடர் நூல்களை எழுதிய பெருமை புலவர். கா. கோவிந்தன் அவர்களையே சாரும். புலவர் அவர்கள் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்களின் மாணவராவர். முறையாகத் தமிழ் இலக்கியத்தைப் படித்துப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். அவருடைய தொடர்பு வ.சு. ஐயாவுக்குக் கிடைத்தபோது இப்பெரும்பணியை அவரிடம் ஒப்படைத்தார். தாம் சார்ந்திருந்த இயக்கத்திலும் அரசியலிலும் முழு நேரம் பணியாற்றுவதற்காக ஆசிரியப் பணியை விட்டுவிட்ட காலகட்டம் அது. எனவே புலவருக்குப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் நிரம்ப நேரமிருந்தது. அவருடைய இயக்கத்தார் அனைவரும் அவரைப் புலவர் என்றே அழைப்பர். அவர்கள் இயக்கத்தின் தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட எப்போதும் அவரைப் புலவர் என்றே குறிப்பிடுவர். அவருடைய அறிவாற்றலைக் கண்டே பேரறிஞர் அவர்கள் அவருக்குச் சட்டப் பேரவைத் தலைவர் பொறுப்பையளித்தார்.

இத்தகு ஆற்றல் படைத்த புலவர் அவர்கள் சங்க நூல்கள் அனைத்தையும் ஆய்ந்து 16 நூல்களில் - ஏறத்தாழ 1600 பக்கங்களில் 450 க்கு மேற்பட்ட சங்கப் புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகளைத் தந்தனர். இதையொட்டி 'சங்க கால அரசர் வரிசை' என்ற வரலாற்றுக் குறிப்பு நூல்களையும் புலவர் படைத்தார். 6 நூல்கள். ஏறத்தாழ 600 பக்கங்கள் - 200 க்கு மேற்பட்ட அரசர்கள் வரலாற்றுக் குறிப்புகளை இவ்வரிசை நூல்களில் காணலாம். சங்ககாலப் புலவர், அரசர் வரிசையுடன் புலவர் கா. கோவிந்தன் அவர்களின் தொகுப்புப் பணி நிறைவுற்றது. திருமாவளவன், தமிழர் வரலாறு, தமிழர் தோற்றமும் பரவலும் போன்ற வேறு சில அரிய வரலாற்று நூல்களையும் புலவர் படைத்துள்ளார்.

சங்க காலத்திற்குப் பின் வாழ்ந்த ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுக்கும் பணி கருப்பக்கிளர். சு.அ. இராமசாமிப் புலவர் அவர்களிடம் ஒப்படைக்கப் பெற்றது. மரபு வழிப்பட்ட புலவர் இவர். தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியை அடுத்த கருப்பக்கிளர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். முறையான தமிழ்க் கல்வியில் நாட்டமில்லாதவர். எழுத்துப் பணியில் மீதிருந்த ஆர்வத்தால் சென்னை வந்தடைந்தவர். ஆனந்த போதினி அலுவலகத்தில்

எழுத்தர் பணியேற்கச் சென்னை வந்தவர் கழகம் தொடங்கப் பெற்ற காலத்திலேயே ஐயா வ.சு.வுடன் தொடர்பு கொண்டிருந்தவர். சென்னையில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்ட மலேரியாக் காய்ச்சலுக்காக அளவு தெரியாமல் உண்ட கொய்னா மாத்திரையினால் கேட்கும் ஆற்றலை இழந்தவர். செவிப்புலன் மட்டுப்பட்ட காரணத்தினாலே தம் நேரம் முழுவதையும் படிப்பதிலும் எழுதுவதிலும் செலவிட்டார். பிற்காலத்தில் தமிழ்ப்புலவர் வரலாற்றை எழுத முற்பட்டபோது இக் குறைபாடு அவருக்குப் பேருதவியாக இருந்தது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு ஊர்களுக்கும் சிறுசிறு நூலகங்களுக்கும் சென்றபோது யாரிடமும் அதிகம் பேசமாட்டார். அவரிடம் பேச வேண்டுமானால் மிக மிக உரத்துப் பேச வேண்டும். யாராலும் நீண்ட நேரம் பேச முடியாது. எனவே ஒரு சில சொற்கள் பேசிவிட்டுத் தம் எழுத்துப் பணியில் மூழ்கி விடுவார். இச்சூழலில் தமிழ்ப்புலவர்கள் வரலாற்றைத் தொகுக்கும் பணியை வ.சு. ஐயா அவர்கள் இவரிடம் ஒப்புவித்தார்.

இப்பணி எப்படி நடந்தது என இராமசாமிப் புலவரே எழுதுகிறார்.

"தமிழறிஞர்களுடைய வரலாற்றைத் தமிழ் உலகில் நிலைபெறச் செய்ய வேண்டுமென்று விரும்பிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் தமிழ்ப் புலவர்களுடைய வரலாறுகளை எழுதுமாறு கூறியதோடு எழுதுவதற்குரிய வழிவகைகளையும் தெரிவித்தனர். யானும் அவ்வாறே அவ்வரலாறுகளைக் கூடியவரையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதினேன்.

இவ்வரலாறுகளை எழுதுவதற்கு யான் பல நூல்களையும் நூலகங்களையும் தேடினேன். பல புலவர்களுடைய பெயர்கள் நூன்முகப்பில் காணப்படுவதைத் தவிர வேறெவ்விதமான குறிப்புக்களும் அற்றவைகளாக இருந்தன. சில அறிஞர்களுடைய செய்திகளைச் சிறப்புப்பாயிரங்கள் புலப்படுத்தின. சிலருடைய செய்திகள் செவிவழிச் செய்திகளாகவுங் கிடைத்தன."

புலவர் இவ்வாறு தொகுத்த வரலாறுகள் தமிழ்ப்புலவர் வரிசை 33 புத்தகங்கள். ஒவ்வொன்றும் 100 முதல் 144 பக்கங்கள். ஏறத்தாழ 4000 பக்கங்கள். ஏறத்தாழ 1000 புலவர்களுடைய விரிவான வரலாறுகள் இவற்றில் அடங்கியுள்ளன.





விரிவாகக் கிடைக்காத வரலாற்றுக் குறிப்புகளைத் திரட்டித் 'தமிழ்ப் புலவர் அகர வரிசை' என்ற ஆறு பகுதிகளைப் புலவர் தொகுத்தார். முதல் தொகுதி - 3 பகுதிகள். மொத்தம் 1016 பக்கங்கள். இவற்றில் 1594 புலவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இரண்டாவது தொகுதி 3 பகுதிகள். 995 பக்கங்கள். 1039 புலவர்களைப் பற்றிய குறிப்புகள் இப்பகுதிகளில் உள்ளன. இதில் கடைசிப் பகுதியாக வெளிவந்துள்ள நூல் ஒருவகையில் தனிச்சிறப்பு உடையது. தமிழ்ப்புலவர் வரிசை தமிழ்ப்புலவர் அகரவரிசை ஆகிய நூல்களில் குறிக்கப் பெற்றுள்ள நூல்களின் பெயர்களையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயர்களையும் அகரவரிசை முறையில் கொடுத்துள்ளது. ஏறத்தாழ 8000 நூல்களைப்பற்றிய குறிப்புகள் இப்பகுதியில் உள்ளது.

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை, தமிழ்ப் புலவர் வரிசை, தமிழ்ப்புலவர் அகர வரிசை ஆகிய மூன்று வரிசை நூல்களிலும் மொத்தம் (ஏ) 8000 பக்கங்கள் - (ஏ) 4000 புலவர்களைப் பற்றிய குறிப்புகள் வெளிவந்துள்ளன. இரண்டு பெரும்புலவர்களின் கடுமையான உழைப்பு. வ.சு. ஐயா அவர்களின் திட்டமிட்ட பணி - நூல்களை உடனுக்குடன் செம்மையாக அச்சிட்டு வெளியிட்ட பாங்கு இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது வ.சு. ஐயாவின் பணி பல்கலைக்கழகப் பணியைவிடப் பன்மடங்கு உயர்ந்த பணி என்பதில் யாதோர் ஐயமுமில்லை. இதே பணியில் இதற்குப் பின்னர் ஈடுபட்ட ஒரு பல்கலைக்கழகம் முதல் பகுதியை மட்டுமே வெளியிட்டது. அதுவும் புலவர்களைப் பற்றிய மிகச் சுருக்கமாக 3 அல்லது 4 வரிகளில் வாழ்க்கைக் குறிப்புகளுடன் வெளிவந்தது. 2 ஆம் தொகுதி அச்சாகவில்லை. ஒரு பேராசிரியரும் 2-3 விரிவுரையாளர்களும் இப்பணியில் ஈடுபட்டு இப்பணி ஈராண்டுகளிலேயே முடங்கிவிட்டது.

இவ்வரிசை நூல்கள் தவிர சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, பண்டிதமணி, அரசஞ் சண்முகனார், நாவலர் பாரதியார், மறைமலையடிகள் போன்றோர் தனிவரலாறுகள் வெளிவந்துள்ளன. சென்னைத் தமிழ்ப்புலவர்கள், நெல்லைத் தமிழ்ப்புலவர்கள் போன்ற மாவட்டப் புலவர்கள் வரலாற்று நூல்கள், திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் போன்றவையும் ஐயா. வ.சு. அவர்களால் வெளியிடப்பெற்றன.

அண்ணல் காந்தி, நேரு, பேரறிஞர் அண்ணா போன்ற மூவரின் மறைவின்போதும் வ.சு. ஐயா அவர்கள் அவர்களின் நினைவாக அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து வெளியிட்ட நினைவு வெளியீடுகள் - உரிமையின் பரிசு (காந்தியடிகள்), உலகப்பேரொளி (நேரு), தமிழ்ப் பேரொளி (அண்ணா) ஆகிய மூன்று நூல்கள் - தமிழ் வாழ்க்கை வரலாற்று நூல்களில் தனிச் சிறப்புடையன.

இம்மூன்று நூல்களிலும் அவ்வத்தலைவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் - முக்கியமான நிகழ்ச்சிகள் - வரலாற்றுச் சிறப்புடைய படங்கள் - பிறநாட்டு, நம் நாட்டுத் தலைவர்களின் இரங்கலுரைகள், தமிழ்ப்புலவர்களின் இரங்கற்பாக்கள் போன்ற பல பகுதிகளுடன் இம்மூன்று நூல்களுமே மிகச் சிறப்பாகக் கொண்டு வரப்பெற்றன.

இவ்வளவு அரிய நூல்களைத் தாமே தனியொருவராகத் திட்டமிட்டு, தக்க அறிஞர்களின் துணைகொண்டு திறம்படச் செய்து முடித்துப் பல்லோருடைய பாராட்டினையும் பெற்ற வ.சு. ஐயாவின் பணி தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

**'புதிய தமிழ் இயக்கம்' நூல் வெளியீடு**

**27-04-97** அன்று சென்னையில் தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சி மாநாட்டில் **புலவர் திரு. ப. சாத்தன்** அவர்கள் இயற்றிய **"புதிய தமிழ் இயக்கம்"** எனும் நூல் வெளியிடப் பெற்றது. நூலை முனைவர் திருமிகு தமிழண்ணல் அவர்கள் வெளியிட மதுரை வணிகர் திருமிகு இராம. விசுவநாதம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். திருமிகு தமிழண்ணல் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். தமிழ்ப் பெரு மக்கள் பலர் மேடையில் நூலைப் பெற்று நூலாசிரியரைப் பெருமைப் படுத்தினார்கள். இறுதியில் நூலாசிரியர் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே முடிந்தது.



## "பாவாணர் – ஒரு கலங்கரை விளக்கம்"

**கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.,**
**இந்திய அரசு வைப்பகம், வேலூர்.**

தமிழ் மொழியாராய்ச்சித் துறையின் ஈடிணையற்ற பேரறிஞர். தனித்தமிழ் அரிமா. புலமைக்கடல். ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார். தம் வாழ்நாள் முழுவதையும், தமிழ் மொழி - இன - நாட்டின் மேம்பாட்டிற்காகவே உழைத்த ஆற்றல் மறவர் பாவாணர் எஞ்ஞான்றும் செந்தமிழில் பேசியவர்; எந்தச் சூழ்நிலையிலும் செந்தமிழ் நடையைத் தவிர வேறு நடையில் பேசியறியாத பாவாணருடன் உரையாடும் பொழுது நம் வாயெல்லாம் இனிக்கும்; நெஞ்சமெல்லாம் குளிரும்.

இருபதிற்கும் மேற்பட்ட தமது நூல்களில் பாவாணர் பல அரிய ஆராய்ச்சி உண்மைகளை வெளியிட்டுள்ளார். அவ்வுண்மைகளனைத்தும் தற்போதைய தமிழகத்தில் தமிழின நலஞ் சிதைந்து மடமை இருளில் அறியாமைக் கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நமக்கெல்லாம் ஒளி காட்டி நெறி காட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

தம்முடைய 'தமிழர் மதம்' எனும் - பனுவலில், பாவாணர், தாம் ஒரு கிருத்தவர் என்பதையும் கருத்தில் வையாமல், தமிழரின் உண்மையான மதங்கள் சிவனியமும் - மாலியமுமே என்பதைச் சான்றுகளுடன் நிறுவுகின்றார். குமரி நாட்டுத் தமிழர் மதநிலை பற்றி விளக்க விழையும் பாவாணர்.

"மக்களின் அறிவு நிலைக் கேற்ப மதம் (1) சிறு தெய்வ வணக்கம், (2) பெருந்தேவ மதம் (3) கடவுள் சமயம் என மூவகைப் படும். இவ்மூவகை மத நிலையும், கி.மு.10,000 ஆண்டுகட்கு முன்பே குமரி நாட்டுத் தமிழ் மக்கள் கொண்டிருந்தனர். ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலம் தோரா. கி.மு. 1500. அவர் மதம் கொலை வேள்விச் சிறு தெய்வ வணக்கம். தமிழரொடு தொடர்பு கொண்ட பின்னரே, சிவ மதத்தையும், திருமால் மதத்தையும் தழுவினர். ஆதலால், அவரின் வேதாகம இதிகாச புராணக் கதைகளையும் புரட்டுகளையும் நம்பி, அவையே சிவ நெறிக்கும் திருமால் நெறிக்கும் அவற்றின் கொண் முடிபுகட்கும், (சித்தாந்தங்கட்கும்) மூலமெனக் கூறுவது, இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு எட்டுணையும் ஏற்காது. (பக். 11.)

ஆரியர்களின் தெய்வ வணக்க நிலை எத்தகைய அருவருப்பானது; இடக்கர் மிக்கது என்பதைத் தெளிவாக்குகிறார் பாவாணர்.

"வேத ஆரியர் தெய்வ வழிபாடெல்லாம். கொலை வேள்விப் பல் - சிறு தெய்வ வணக்கமே. அசுவமேதம் என்னும் குதிரை வேள்வி மிக அருவருப்பானது. தசரதன் குதிரை வேள்வியில், அவன் தலைமைத் தேவியான கோசலை, ஓர் இரா முழுதும் வேள்வியாண் குதிரையைக் கட்டி தழுவிக் கிடந்தாள் என்று `மார்க்க சகாய ஆச்சாரியார்' வெளியிட்ட 'சித்தூர் அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு' என்னும் சுவடியிற் கூறப்பட்டிருத்தல் காண்க. "பௌண்டாயாகம்" என்னும் வேள்வியோ, சொல்லவும் எழுதவும் ஒண்ணா இடக்கர் மிக்கதென்று சொல்லப்படுகின்றது." (பக்: 678)

பிராமணர் நம் முன்னோர்களை எத்தனை மடமைச் சேற்றில் தள்ளி எள்ளி நகையாடி, ஏமாற்றியுள்ளனர் என்பதைப் பாவாணர் விளக்குவது அதிர்ச்சி தருகின்றது.

வெப்ப நாட்டு வாழ்க்கையால் தமிழரும் பெரும்பாலார் கருத்திருந்ததையும், மூவேந்தர் முந்தியல் பேதைமை, மதப்பித்தம், கொடை மடம் ஆகிய முக்குணங்களைக் கொண்டிருந்ததையும், கண்ட ஆரியர் தம் வெண்ணிறத்தையும் வேத மொழியின் வெடிப் பொலிவையும் பயன்படுத்தி, தாம் நிலத் தேவர் (பூசுரர்) என்றும், தம் வேத மொழி தேவமொழி என்றும் கூறி ஏமாற்றிவிட்டனர். அதனால், அவர் என்ன சொன்னாலும் நம்பவும், எது கேட்டாலும் கொடுக்கவும், அவரைத் தெய்வமாக வழிபடவும், வேண்டியதாயிற்று.

"தெய்வா தீனஞ் ஜத்ஸர்வம்
மந்த்ரா தீனந்து தைவதம்
தன் மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம்
ப்ராமணா மமதை வதம்."

**இதன் பொருள் :** "உலகம் தெய்வத்துள் அடக்கம்; தெய்வம் மந்திரத்துள் அடக்கம்; மந்திரம் பிராமணருள் அடக்கம்; ஆதலால் பிராமணரே நம் தெய்வம்." (பக். 71.)

வெளியூர்கட்கு வாணிகம் செய்யப் புறப்படு முன்னர், தமிழ் வாணிகர்கள் எல்லைப்புறத்திலுள்ள சாத்தன் என்னும் தங்கள் கடவுளரை வழிபட்டுச் செல்வது மரபு. 'சாத்தன்' கடவுளர்க்கு ஐயனார் என்ற பெயரும் உண்டு. 'ஐயனார்' என்ற இத்தமிழ் தெய்வம் எங்ஙனம் 'ஐயப்பன்' எனும் ஆரிய தெய்வமாகிவிட்டது என்பதையும் பாவாணர் தெளிவுபடுத்துகின்றார்.





"சாத்தன் என்னும் ஐயனாரையும், சிவ மாலன் (சங்கர நாராயணன்) என்னும் புணர்ப்பில் தோன்றிய மகனாகக் கூறி, அவனை அரியரன் புதல்வன் (ஹரிஹர புத்ர) என்றனர். (பக். 77.)

தமிழ் வள்ளல் அண்ணாமலை யரசரால் தோற்றுவிக்கப் பட்ட "அண்ணாமலைப் பல்கலைக் கழக அறிவியற் கட்டிட அடிப்படைக்கல் நாட்டிய போது, தில்லையிலிருந்து ஒரு பிராமணர் வந்து எரி வளர்த்து வேத மந்திரம் ஓதினார். இது ஆரிய வழிபாடேயன்றித் தமிழ வழிபாடாகாது" (பக்: 101) என்றுரைத்து, தமிழர்ப் புற்றுகளில், ஆரிய நாகங்கள் குடியேறிக் கொட்டமடிப்பதைத் தெளிவாக விளக்குகிறார், பாவாணர்.

ஆரியர்கள் போற்றி பாதுகாக்கத் துடிக்கும் புளுகு மூட்டைகளுள் ஒன்று பகவத் கீதை! அது எத்துணை புரட்டானது என்பதை ஆய்ந்துரைக்கின்றார் பாவாணர்.

"பகவத் கீதையைக் கண்ணனார் சொல்லியிருப்பின். அவரேனும் அதைச் செவியுற்ற அருச்சுனனேனும் அவ்விருவருள் ஒருவர் சொல்லக் கேட்ட வேறொருவரேனும், அக்கீதையை எழுதியிருத்தல் வேண்டும். அங்ஙனம் ஒருவரும் எழுதிலர். அக் கீதைக்கு ஆசிரியன் பெயரும் குறிக்கப்படவில்லை; திருதராட்டிரன் சஞ்சய முனிவனிடம் போர் நடவடிக்கைகளைப் பற்றி வினவியதாகவும், அம்முனிவன் தான் வியாசனிடம் கேட்டதை அவனுக்குச் சொன்னதாகவுமே. கீதைச் செய்தி அமைந்துள்ளது.

போர்க் காலத்தில் இருபடைகளும் போர்த் தொடக்கக் குறியாகப் போரிசைக் கருவிகளை முழக்கியபின், ஒரு மாநாட்டுச் சொற்பொழிவினும் மிகவிரிவான உரையாட்டும் செவியறிவுறூவும் நிகழ்ந்தனவென்பது. நம்பத் தக்க செய்தியன்று. (பக். 111.)

பிராமணர்கள், பிராமணர்களால், பிராமணர்களுக்காகச் செய்து கொண்ட ஒரு தன்னலச் சாத்திரத்திற்கு மனுதரும சாத்திரம் என்று பெயர். எத்துணை கொடிய குற்றங்களைச் செய்தாலும் பிராமணர்கட்குத் தண்டனை கிடையாது; ஏனைய வருணத்தாருக்கெனில் பன்மடங்கு தண்டனை என்பதுவே இதன் பிழிவு. சான்றுக்கு ஒன்றாகப் பாவாணர் கூறுகிறார் :

"பிராமணனுக்குக் கொலைத் தண்டனையாவது. அவன் தலையை மொட்டையடித்து அவன் பொருள்களுடன் அவனை வேற்றூர்க்கு அனுப்பி விடுவதே; என்று "மனுதரும சாத்திரம்" கூறுகின்றது.

அரசனுட்பட, யாரேனும் ஒருவன் ஒரு பிராமணனைக் கொன்றுவிடின், அப்பிராமணனது ஆவி கொன்றவனைத் தொடர்ந்து பழிவாங்கிவிடும்' என்று, பிராமணர் ஒரு கருத்தைப் பரப்பி விட்டனர். அதனால் கேரள நாடுகளில், பிராமணக் குற்றவாளிக்குக் கொலைத் தண்டனை விளக்கப்பட்டிருந்தது. (பக்: 119..)

ஒத்த ஆற்றல் உடையவர்கள் தமிழர்களிடையே இருப்பினும், பிராமண ஆற்றலாளர்களை மட்டுமே வெளியுலகம் அறிந்து கொள்வதற்கான கரணியத்தைப் பாவாணர் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையே:

"குடந்தை இராமானுசம் போன்றே, செங்கோட்டைப் பர் (Dr) சிவசங்கர நாராயணப்பிள்ளையும், மேனாட்டார் போற்றுமளவு கணிதத் திறவோர். ஆயினும், பிராமணர்க்குள்ள இனவுணர்ச்சி தமிழருக்கின்மையால், அவருக்கு விளம்பரம் இல்லாமலே போயிற்று. (பக்.1, 11, 11..)

ஈரோட்டுப் பெரியார், மறைமலையடிகள், அண்ணா, பா.வே. மாணிக்கர் போன்ற எத்துணையோ தலைவர்களும், அறிஞர்களும் அரும்பாடுபட்டுத் தூக்கி நிறுத்தி இறும்பூதெய்திய இனவுணர்வுத் தூண். அண்மைக் காலமாக வெகு வேகமாகத் தரை நோக்கிச் சாய்ந்து கொண்டிருக்கின்றது. மனுதரும சாத்திரத்தைத் தீக்கிரையாக்கிய தமிழத் தலைவர் கி. வீரமணி, பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றோர் வெஞ்சிறையில் அடைக்கப் பட்டனர். ஆளுந் தமிழர் ஆரியர்க்கடிமையாகி வருகின்றனர் என்பதே இக்கொடுமைக்குக் கரணியம்! இந்த நிலை மூவேந்தர் காலத்திலும் ஓங்கியிருந்தது. இதற்கு அடிப்படைக் கரணியமாக,

"மூவேந்தரும் பிராமணர்க்கு முழு அடிமையராய்ப் போனதற்கு, பிராமணப் பெண் நுகர்ச்சியும் கரணிமாயிருந் திருக்கலாம்!" (-பக்: 192) என்ற உண்மையை ஆராய்ச்சிக்குன்றின் மேலிருந்து அறிவிக்கின்றார் பாவாணர்.

பிராமணன் 'நிலத்தேவன்' என்ற மூடத்தனத்திற்கு முடிவு கட்டிவிட்டனர் இற்றைத் தமிழருள் பெரும்பாலோர் என்பதை நம்பிக்கையோடு தெரிவிக்கிறார் பாவாணர் :





" பிராமணன் நிலத்தேவனல்லன் என்பதும்; உலகியலினும் மதவியலினும், இல்லறத்தினும் துறவறத்திலும், தமிழனுக்கில்லாத ஏற்றம் அவனுக்கு இம்மியும் இல்லையென்பதும், இதை உணராதவன், எத்துணைக் கற்றவனேனும் உருவத்தால் மாந்தனும், உள்ளத்தால் அஃறிணையுமாவனென்பதும், தெரிதரு தேற்றமாம். ஆரியர் வெண்ணிறம் இன்று பொன்னிறமும், செந்நிறமும் புகர் நிறமும் கருநிறமுமாக மாறியுள்ளது. தமிழர் மொழியாராய்ச்சியும் வரலாற்றாராய்ச்சியும் செய்து உண்மையறிந்து கண் விழித்துக் கொண்டனர். (பக் - 163.)

இந்தி மொழி கட்டாய பாடமாகத் தமிழ்ப்புலத்தில் நுழைந்த பொழுது, அதை வன்மையாகக் கண்டித்து, நடுவண் அரசினை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியவர்களுள் முதன்மை யானவர் பாவாணர் எனலாம். இந்தியின் குறை களையும், தமிழின் நிறைகளையும், ஆணித்தரமாக எடுத்துரைத்து, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்! என்றொரு நூலையே படைத்தளித்தார் பாவாணர். அந்நூலில் தமிழின் சிறப்பினை எடுத்துரைப்பது எத்துணை உயர்ந்த அறிவியன் முறையின் பாற்பட்டதாகத் திகழ்கின்றது என்பதைப் பார்ப்போம்:

உலக மொழிகள் மூவாயிரத்துள் (2796) தொன்மை, முன்மை, எண்மை, (ஒலியெளிமை) ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு சிறப்புக்களை ஒருங்கேயுடையது தமிழ் ஒன்றே. ஆதலால், இந்தியாவில் மட்டுமின்றி உலக முழுமையிலும் தமிழ் நாடு தனிப்பட்டதாகும்.

(இ.த.எ. கெடும் - பக். 74).

தமது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் அருந்தமிழ்ப் புதையலில் பல அரிய உண்மைகளை உணர்த்துகின்ற பாவாணர். 2-ஆம் இராசராசனின் அரசவைப் புலவராயிருந்த 'ஒட்டக்கூத்தர்' பாடிய தக்கயாகப் பரணி பெரும்பான்மை மக்களால் பயிலப் பெறாமைக்கான கரணியத்தைக் கூறுகின்றார்:

"இது (தக்கயாகப் பரணி) செந்தமிழ்க்கும் ஒட்டக்கூத்தர் பெயருக்கும் பேரிழுக்குத் தருமாறு, செயற்கையான தொடையும், நடையும், சீர்கெட்ட வட சொற் பெருக்குங் கொண்டு பொருட் சிறப்பற்றிருப்பது, பலராற் பயிலப்படாமைக்குக் கரணியங் காட்டுவதோடு 'பரணிக்கோர் செயங் கொண்டான்' என்னுங்

கூற்றைப் பறையறைந்து சாற்றுவதாகவும் உள்ளது. எ-டு: த்ரிசூலம், ந்ருபதீபன், பிரத்தம், சக்ரபாணி, பத்ரகாளி (பக் 32... )

இவ்வண்ணமே, கம்ப இராமாயணப்பாடல்களில் 'இடைச்செருகல்' பற்றிக் கூறுகையில்,

"கம்ப இராமாயணத்தில் ஒரு சில இடைச் செருகல்கள் இருக்கையும், ஆயின், அவற்றை ஆயிரக்கணக்கென மிகுத்துக் காட்டுவது சற்றும் பொருந்தாது. நாடுவிட்ட படலத்திலுள்ள அடிமுதல் முடி வண்ணனையில் மரும உறுப்புக்கள் பற்றிய செய்தி, இடைச் செருகலாகவே இருத்தல் வேண்டும். அல்லாக்கால், கம்பருக்கு அது இழுக்காகும்." (பக்: 71..)

பழங்காலத்தில் ஔவையார் 'பலர்' வாழ்ந்தனர் என்பது தமிழறிஞர்கள் ஒப்புக் கொண்ட உண்மை: ஆனால், "கடைக்கழகக் காலத்திலிருந்து 16-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் தோன்றிய ஔவையார் எழுவர்." என்பது பாவாணர் ஆய்ந்து கண்ட முடிபு. மேலும், இவர். (-பக் 176... )

"வான்கோழி துருக்கி நாட்டினின்று இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. 16-ஆம் நூற்றாண்டாதலால், அதைப் பாடிய ஔவையார் அறநூல் அதன் வரவிற்குப் பிற்பட்டது என்பது கால்டுவெல் ஐயர் கருத்து" என்ற நல்லதொரு செய்தியையும் நமக்கு வழங்குகிறார். (பக்: 176)

பிழைப்பிற்காகத் தென்னாடு நுழைந்த ஆரியப் பூசாரியர்கள் தமிழ் நூல்களை எவ்வாறு கெடுத்துச் சிதைத்தனர் என்பதைப் பாவாணர்,

"விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிலரான ஆரியப் பூசாரியரே, தென்னாடு வந்து தமிழரொடு தொடர்பு கொண்டு அவர் மொழியையும், இலக்கியத்தையுங் கற்று, தமிழெழுத்தினின்று கிரந்த எழுத்தையமைத்து, ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை வேத மொழியொடு கலந்து 'சமஸ்கிருதம்' என்னும் அரைச் செயற்கையான இலக்கிய மொழியைத் தோற்றுவித்து. தமிழ் நூல்களையெல்லாம் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தலின் மூல நூல்களையழித்து விட்டு மொழி பெயர்ப்பு நூல்களையே முதனூல்களாகக் காட்டி, இந்திய நாகரிகம் ஆரியர் கண்டதென மேலையரும் நம்புமாறு நாட்டிவிட்டனர்" (பக்: 65... )





"இனி, இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும். பிறவும், நாரதன் செய்த பஞ்ச பாரதீயமும் முதலாகவுள்ள தொன்னூல்க ளிறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாகவுள்ள தொன்னூல்களுமிறந்தன." என்று அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரைப்பாயிரத்திற் கூறியிருத்தல் காண்க. இதனால், "பரத சாஸ்திரம்" என்னும் சமஸ்கிருத நூலுக்கும் "தமிழ்ப்பரதமே" மூலம் என்பது விளங்கும். (பக் 22)

என்ற வோர் பேருண்மையை நிலைநாட்டுகின்றார் பாவாணர்; எனினும், இவ்வுண்மையைக் கருத்தில் கொள்ளாது தமிழின நலங் காக்கவே தோன்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "காசுமீரத்திலிருந்தே பரதக்கலை தமிழுக்கு இறக்குமதி செய்யப்பட்டது" என்றவொரு பொய்யான இடுநூலுக்கு 'பண்டாரகர்' பட்டம் வழங்கியுள்ளது.

**'உழுதுண்டு வாழ்வாரே: வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்' என்பது தமிழ் மறை:**

'மேழிச் செல்வம் கோழைபடாது, என்பது தமிழர் கொள்கை. ஆனால் ஆரியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை மனுதரும சாத்திரம் வாயிலாக அறிவது அதிர்ச்சிக் கடலின் ஆழத்திற்கே நம்மை இழுத்துச் செல்கின்றது: இதனைப் பாவாணர் தம் வடமொழி வரலாற்றில் வெட்ட வெளிச்ச மாக்குகின்றார்:

"கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மனுதரும சாத்திரத்தில்,"

"சிலர் பயிரிடுதல் நல்ல தொழிலென்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்புப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் மண்வெட்டியும் பூமியையும் பூமியினுண்டான பலப்பல ஜெந்துக்களையும் வெட்டுகிறதல்லவா?" (இராமானுஜா சாரியார் மொழி பெயர்ப்பு)" என்று கூறப்பட்டுள்ளது. (பக். 22)

இது போன்ற பல உண்மைகளைப் பாவாணர் தம்முடைய ஒவ்வொரு பனுவற் புதையலிலும் புதைத்து வைத்துச் சென்றுள்ளார்: பைந்தமிழ் ஆர்வலர்கள் இனியேனும், அந்தப் புதையல்களைத் தேடிக்கண்டு, பொருளுண்மைகளைத் தமிழின உயர்வுக்குப் பயன்படுத்திக் கொள்வோமாக.

# சைவ சித்தாந்தப் புதுநெறி

டாக்டர் இரா.முத்துக்குமாரசாமி, கோமதி முத்துக்குமரன்

மாத்தூர்.

அகர இறைவன் முன்னைப்பழம் பொருளுக்கும் பழம் பொருளாகவும் பின்னைப்புதுமைக்குப் புதுமைப் பொருளாக விளங்குவது போல சைவ சித்தாந்தமும் விளங்குகிறது. பழமையை விண்ணக அறிவைக் கொண்டும் மண்ணக அறிவைக் கொண்டும் அளந்தறியலாம். புதுமையையும் அவ்வாறே அறியலாம்; உணரலாம். நெறியையும் அவ்வாறே அறியலாம்.

## சிறப்புப் புதுமை

சைவ சித்தாந்தம் என்ற சொல்லில் அமைந்துள்ள பன்னிரு சிறப்புகளும் (முன் கட்டுரையைப் பார்க்கவும்) ஒருவகைப் புதுமையாகும். அச்சொல்லில் புதைந்திருக்கும் புதுப்பொருள்களைச் சைவசித்தாந்தம் என்ற கட்டுரையில் ஆராய்ந்தோம். அக் கட்டுரையில் எழுத்துக்களைச் சொற்களைப் புணர்த்தி அதனால் ஏற்படும் சிந்தைக்கு விருந்தாக கருத்துகளை அறிவின் புதுத் தெளிவிற்கு ஆராய்ந்தோம். அங்கு விடுபட்ட நூதனமான நவப்புதுமைகளை நந்தியருளால் நம் உள்ளம் கொள்ளும் வகையில் நம்பிரான் அருளால் புது விளக்கங்களை வம்பு-புதுமைப் பொருளை இவண் 'புது நெறி' என ஆராயமுற்படுவோம்.

## புதுமை விளக்கம் – எண்வகைப் புதுமை

புதுமை என்றால் புதிய மெய் வடிவு என்பது பொருள். அது சொற்புதுமை, யாப்புப்புதுமை, எழுத்துப் புதுமை, கருத்துப் பொருள் புதுமை, அணிப்புதுமை, மெய்ப்பாட்டுப்புதுமை என ஆறு வகைப்படும். மதிமைசாலா மருட்கை மெய்ப்பாட்டில் வரும் நான்கினுள் முதலில் உள்ளது புதுமையாகும். சமயப்புதுமை, தத்துவப்புதுமை, மொழிப்புதுமை, அறிவியல் புதுமை, சமூக அறிவியல் புதுமை, இலக்கியப்புதுமை, வரலாற்றுப்புதுமை, கலைப்புதுமை என அப்புதுமைகள் மேலும் எண் வகைப்படும். இப்புதுமைகள் எல்லாம் ஒருசேர நம் சைவ சித்தாந்தத்தில் உள்ளன, என்பதே புதுமை அது புமையிலும் புதுமை. அப் புதுமைகளைக் கொண்டது நம் சைவ சித்தாந்தப் புதுநெறி.





## 1. பழமை நெறிப்புதுமை

நெறி என்பது நீண்ட காலம் எழுவகைப் பிறவிக்காலம் செல்லுவதற்குரிய பாதுகாப்பான குறிப்பிட்ட இலக்குக்குக் குறிப்பிட்ட இடத்திலிருந்து அழைத்துக் கொண்டு செல்லும் வழிகாட்டும் நீள் வழியாகும். கல்லும் முள்ளும் மேடும் பள்ளமும் போன்ற இடையூறுகளைக் களைந்து ஒழுங்கு படுத்தப்பெற்ற, நெறிப்படுத்தப் பெற்ற நீள்வழி நெறியாகும். நெறி என்பதற்குள், அறவழி (நெறி) முத்திநெறி, பத்திநெறி, சத்தி நெறி, சத்திய நெறி போன்றவை எல்லாம் அடங்கும். மூடப் பழக்க வழக்கங்கள் தன் சாதி, இன, மொழி, நாடு, ஊர் என்ற தன்னல உணர்வால் எழும் எண்ணம், சொல், செயல் என்னும் முட்கள், போன்றவற்றைப் பொது நல உணர்வால் அறவுணர்வால் நீக்கி நெறிப்படுத்தப் பெற்றதும் தெய்வீகப்புலவர் நந்தி அருள் பெற்ற நால்வகை நந்திகளாலும் சிவயோக மாமுனி முதல் எண்மராலும், மந்திரம் பெற்ற எழுவராலும் வகுக்கப்பெற்ற ஒன்பது வகை ஆகமங்களின் பிழிவே சைவ சித்தாந்த நெறி என்பது திருமூலர் கருத்தாகும். திருமூலனாக 3001 ஆண்டுகளும் அதற்கு முன்பு 3000 ஆண்டுகளும், ஆக 6000 ஆண்டுகள் திருமூலர் வாழ்ந்தார் என்பர். (வினையின் நீங்கிய) விளங்கிய அறிவின் முனைவனால் வகுக்கப் பெற்ற நெறி என்பது ஒரு புதுமை.

முதன் நெறி, முதல் நூல் நெறி என்ற முதன்மைப் புதுமையைப் பெற்றது நம் சைவ சித்தாந்தம். சாத்திரம் தோத்திர நூல் எழுதியவர் எல்லாம் முனைவரா என்று கேட்கலாம். அவர்கள் எல்லாம் முந்தைய பிறவிகளின் நந்தியெம்பிரானோடு, திருமூலரோடு உடனுறைந்து பாடங்கேட்டவர்கள் தம்முற் பிறப்பின் தவ வலிமையால் இப்பிறப்பில் அவதாரம் எடுத்து நமக்கு முதநூல் வழி நூல் போன்றே வழங்கியவர்கள். அதற்கு உரை எழுதியோரும் அவ்வாறே கொள்க. இக்கருத்து உயர் உயிர் ஆராய்ச்சியால் பெற்ற கருத்து எனவே சைவ சித்தாந்தப் புதுமை கி.மு. 3001 ல் வாழ்ந்த திருமூலர்க்கு நந்தி யெம்பெருமானால் அருளப்பட்டது என்பதாகும். இதுபோன்ற பழைமைப்புதுமை உலகில் வேறு எச் சித்தாந்தத்திற்கும் இல்லையாம் என்பதை ஒப்பிட்டு ஆராய்ந்தால் புலனாகும்.

## முற்கட்டுரையின் பிழிவு

எழுத்துப் புதுமையையும், சொற் புதுமையையும், சொற்பொருள் புதுமையையும் சைவ சித்தாந்தம் என்ற

சொற்றொடரில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை மந்திரச் சிறப்பு, எழுத்து சொல் இலக்கணச் சிறப்பு வானியல் சிறப்பு மொழி அகராதிச் சிறப்பு, பல்வகைப் பொருட் சிறப்பு சொல்லமைப்புச் சிறப்பு, சமயச் சிறப்பு என்ற தலைப்பில் முன் கட்டுரையில் ஆராய்ந்தமையால் அவற்றை விடுத்து மீதியுள்ள புதுமைகளைக் காண்போம். யாப்பணிப் புதுமைகளைப் பிறிதொரு கட்டுரையில் காண்போம் 7000 மந்திரங்களை யுடையதாக இருந்தது சைவ சித்தாந்தம் என்பது ஒரு புதுமையாகும்.

## 2. சமயப் புதுமை

இன்று உலகிலுள்ள சமயங்களில் காணப்படும் இறையின் தன்மைகளை முற்கால அறிஞர்கள் கி.மு. 4000 முதல் என்ன கூறினார்களோ இக்கால அறிஞர்கள் இன்று என்ன கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் ஒரு சேர சைவ சித்தாந்தம் கூறுவது சமயப் புதுமையாகும். (இணைப்பு - 1 பட்டியல் விளக்கும்) வடமொழியில் இருக்குவேதத்தில் 33 கடவுள்கள் 3339 கடவுள்களாக பெருகி வரும் பொழுது ஒன்றே குலம் ஒருவனே தேவன்* என்ற சமய தத்துவக் கருத்தைச் சைவ சித்தாந்தம் பசுபதி உண்மையைக் கூறியது ஒரு புதுமையேயாகும். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதும் இப்புதுமையைக் குறிக்கும்.

## 3. † தத்துவப் புதுமை

ஒவ்வொரு சமயத்தாரும் தனி சமயம், தன்னூர், தன்சுற்றம், தனி வழிபாடு என்று தனித்து நிற்கும்பொழுது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற தத்துவத்தையும் ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்கு (1558 திரு ஆறு) உள என்ற (சமரச சன்மார்க்கம் என்றது போல இருசமயமும்) சமயப் பொதுமையை, பொறையைக் காட்டியது, காட்டி வருவது சைவசித்தாந்தமே யாகும். இது ஒரு ஒப்பற்ற இன்றைய உலகிற்குத்

* சிவன் – 2641 திருமந்திரம்
<u>சி</u>ந்தையில் <u>வ</u>ந்திருப்பவ<u>ன்</u>
<u>சி</u>கரத்திலிருந்து <u>வந்திருப்பவன்</u>
சக்தி + இறைவன்
உமை யொருபாகன் – பகவன் – ஆக வருபவன்
† தத்துவஞானம் திருமந்திரம் – 2330





தேவையான புதுமைக் கருத்து. பொதுமைக்கருத்துமாகும். சைவசித்தாந்தத்தின் முன்னைய பெயர் விரிவான வேதாந்த சித்தாந்தம்-6 என்பது இது ஒரு புதுமையாகும். (1449 திருமூலர்) ஆறு வழி; ஆறு எண். என்ற இரு பொருளுடையது. இது தத்துவச் சிறப்புப் புதுமை.

சிவ சத்துவமே தத்துவம் ஆயிற்று என்பது உயர் உயிர் ஆய்வாளர் நந்தி யெம்பிரான் கருத்து. சமய தத்துவம், வேறு. கலைதத்துவம் வேறு மந்திரகலை தத்துவம் வேறு. தனித்துவம் நம் சைவ சித்தாந்தத்திற்கு உண்டு. அதற்கும் உலக தத்துவ ஒப்பீட்டாய்வு தேவை.

முத்திநெறி, உத்திநெறி, சத்தி நெறி, சத்திய நெறி,* சித்தி நெறி (அறநெறி), பத்தி நெறி, சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால் நெறி, ஆலவாயான் அருளால் கல்லால் நிழலில் உணர்த்திய நெறி, குரு நெறி, குரு-கடவுள் உருவில் குறுகிய உருவில், அருவில் கூறிய நெறி, முதிய நெறி, முது நெறி மூத்தநெறி மூதறிஞர் நெறி சைவசித்தாந்த நெறி என்பதை எல்லாம் சைவ சித்தாந்த நூல்கள் அனைத்தும் நமக்குக் காட்டுகின்றன. அதுபோல உலகிலுள்ள சமயங்கள், தத்துவங்கள் காட்டுவதில்லை என்ற உண்மையை ஒப்பீட்டாய்வு காட்டுகிறது. அக்காட்டில் ஒரு சில எடுத்துக் காட்டைக் கீழே காட்டுகிறேன். அவ்வாறு காட்டுவதும் ஒரு புதுமையாகும். (மரம் கல்லாகும் 2 ½ இலட்சம் ஆண்டுகளாகும் என்பது தொல் பொருள் உண்மை). திருமூலர் காலத்தில் 100 சமயம் இருந்ததாகவும் அவற்றை ஆறு சமயங்களாக அமைத்தனர் என்று திருமூலர் கூறுவதும் ஒரு புதுமையாகும்.

## 4. மொழிப் புதுமை

கி.மு. 4000, கி.மு. 100ல் வழங்கிய எகுபதிய மொழியில் காணப்பட்ட ஆதன், ஆவு, உண், தா, தெறு, ஏதம் ஆண் போன்ற சொற்கள் சைவ சித்தாந்தத் திருமுறை நூலான திருமந்திரத்தில் காணப்படுகின்றன. கி.மு. 4500 - கி.மு. 100 ல் வழங்கிய அசிரிய மொழியில் காணப்பட்ட அமா, அப்பா, (எழுதல்) எழில், இட(ம்) தாக்கு, ஈடேறு, செறு (வயல்) - எல் போன்ற சொற்களும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. கி.மு. 3500 ல் வழங்கிய கிதைதி மொழியில், காணப்படும் அல்லல், கோ, கான், கள்ளர், தாக்கு, தே, பால் (பிரி) மன் (னன்) போன்ற சொற்களும் அவ்வாறே காணப்

* செம்பொற் சிவமாதல் சித்தாந்த சித்திய – திருமந்திரம் – 2545

படுகின்றன. சுமேரிய மொழியில் காணப்பட்ட கல் (ஓங்கல்), குலம், குண் (வால்-குண்டி) சூடு (அணி) துக் (தூக்கு) ஊர் போன்ற சொற்களும் காணப்படுகின்றன. சீன மொழியில் உள்ள வேய்; மு(கம்) - கண் மா - (குதிரை) போன்ற சொற்களும் காணப் படுகின்றன. இவை சைவ சித்தாந்தத்தின் உலகத் தொன் மொழிப்புதுமை. சொற்புதுமை. இணைச் சொற் புதுமை இவற்றால் சைவ சித்தாந்தப் பழமை கி.மு. 4000க்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இது ஒரு பழமைப் புதுமை.

## 5. வானறிவியல் புதுமை*

சைவ சித்தாந்தம் தன் கருத்துகளை விளக்க வானறிவியலைப் பயன்படுத்துகிறது. சோதி, விசாகம், தேன் (விருச்சிகம்) நண்டு (கடகம்) அனுடம்-மூலம், பூசம் நாளில் பரம குருவை நினைத்து உணர்க என்று திருமூலர் குறிப்பிடுகிறார். அத்துடன் அண்ட லிங்கத்தை விளக்கும் பொழுது வான் அண்டம் முழுவதையும் இலிங்க வடிவாகக் காட்டுகிறார். "தாரகைச் சந்திரன் பிற்பகலோன் வர" வழிபடுக. ஆகாச அக்கரம் (எழுத்து) அ, ஓம், (1,30) இராசி 360 நாள் என்றெல்லாம் எடுத்தாள்கிறார். என்றுமுள இறைவனை வழிபட என்றும் உள வானவியலைப் பயன்படுத்தும் புதுமை வேறு எச்சமயத்திற்கும் இல்லாத புதுமை. நம் சைவ சித்தாந்தத்திற்கே உரிய புதுமையாகும். இது ஒரு சைவ சித்தாந்த அறிவியல் புதுமையாகும். சைவம் இன்னும் கோயில், வழிபாடு, சைவச் சின்னங்கள் மந்திரச் சொற்கள் அனைத்தும் மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம், கன்னி போன்ற இராசிகளிலும் பிற வான்பகுதியிலும் காணப்படுகின்றன. என்னே புதுமை இதுவும் வானறிவியல்† புதுமை சமூக அறிவியலில், அரசாட்சி கடமை கூறப்படுகிறது.

## 6. சமூக அறிவியல் புதுமை

முத்தியும் செல்வமும் வேண்டின் அறநெறியே ஆற்றல் வேண்டும் அறம் அறியார் அண்ணல்வாதம் நினையும் திறம் அறியார் மால் கொண்டு தேறலை (கள்) உண்ணும் மருளரைத்

* மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதி செய்பவரவர் தொல்வானவர்கள் – 710 திருமந்திரம்

† மதியொன்றினுக் கிருபத் தேழு வேறு
பதியங்கள் நாள் விதித்தானே – 746 திருமந்திரம்





தண்டம் செய்வது வேந்தன் கடனே' என இக்காலத்திற்குப் பொருந்தும் கருத்துகளைச் சைவ சித்தாந்தம் கூறுவது சமூக அறிவியல் புதுமையாகும். யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்பது ஒரு சமூக அறிவியல் புதுமையாகும்.

## 7, 8 இலக்கிய வரலாற்றுப் புதுமை

சைவத் திருமுறைகளில் சிவ புராணங்களில் சைவ சித்தாந்த இலக்கியப் புதுமையையும், வரலாற்றுப் புதுமையைத் திருமந்திரத்தில் பாயிரத்தில் 4 - குருபாரம்பரியத்தில் 2-ம் தந்திரம் தக்கன் வேள்வியிலும் காணலாம். கந்த புராணத்தில் சிறப்பாகக் காணலாம்.

புதை பொருள் ஆராய்ச்சி மூலம் வரலாறாக இதனை மாற்றலாம்.

## 9. கலைப் புதுமை*

வேதத்தை ஒரு கலையாகக் கொண்டுள்ளது. நம் சைவ சித்தாந்தம் ஓதிய வண்ணம் கலையின் உயர்கலை ஆதியில் வேதமேயாம் திருமந்திரம் 1121 எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும் என்று திருமூலர் கூறுவதிலிருந்து எழுத்துக்களை பாடல்களை.... 64 கலைகளை நம் சைவ சித்தாந்தம் வளர்த்து வந்துள்ளது என்ற உண்மை புலனாகிறது. ஆயகலைகள் 64 யும் ஏய உணர்விற்கும் அன்னை கலைமகளிடமிருந்து பெற்ற கலைகளை வளர்க்கும் சைவ சித்தாந்தம் கலைப்புதுமையுடையது என்று சொல்லவும் வேண்டுமோ. கலைகள் - 96 - மெய்கள் (தத்துவம்) ஞாயிறு - 12, திங்கள் - 16, தீ- 64, நாள் - 4 என்ற கருத்துகளை உலகில் வேறெங்கும் காணமுடியாது. இது ஒரு கலகலப்பான (கல்+ஐ) வியப்பான கலைப்புதுமையாகும்.

இதுவரை கூறப்பட்ட நவப் புதுமை நெறிகளையுடையது நம் சைவ சித்தாந்தம். மேலும் நுண்மாண்புலம் கொண்டு ஆராய்ந்து புதுமைகளைக் கண்டறிந்தும், கண்டறிந்தவற்றைப் பின்பற்றியும் பலமுனைவர் பட்ட ஆய்வேடுகள் உருவாக்கியும் அதற்கு ஒப்பீட்டு ஆய்வு நிறுவனம் அமைத்தும், புதுமைக் கருத்துகளை விளக்கும் நடமாடும் கண்காட்சியை நடத்தியும், சிறுவர் பள்ளி முதல் கல்லூரி வரை கல்வி நிலையங்கள் நிறுவியும் ஆயகலைகள் 64 ஐ வளர்த்தும் ஒரு பல்கலைக்கழகம் அமைத்தும், ஒளிப்படம் எடுத்தும் கணிப்பொறியறிவைப் பயன்படுத்தியும் நம் சைவ சித்தாந்தப் பெருமையை உலகறியச் செய்வோம்.

* ஏழிசை நாடகத்தே இசைந்தாய் – திருமந்திரம் – 2783

பல்கலைக்கழக மானிய உதவி பெற்று வானியல் உயர் சைவம், உயர் உயிர் சைவம் என்ற புதிய ஆராய்ச்சிப் பிரிவுத் துறைகளை ஏற்படுத்தியும் சைவ ஒப்பீட்டுக் கருத்துக் களஞ்சியும் உருவாக்கியும் உலகச் சமயத்தத்துவ அமைதியை ஏற்படுத்துவோம். அதற்கு அருமறை ஆகமம் அங்கம் அருங்கலை நூல் தெரிந்த அகத்திய குமரகுருபரன் கந்தன் கழலிணையையும் ஆதி நாயகியான கலைமகள் கழலிணையையும் நம் கருத்தில் வைப்போம். நந்தியருளால் நந்தமிழ்ச் சைவ சித்தாந்தத்தை நந்தச் செய்வோம் சிகரத்தில் வைப்போம்.

## துணைபுரி நூல்கள் – கட்டுரைகள்

1. சைவ சித்தாந்தத் தொன்மை, 2. சைவசித்தாந்தச் சிறப்பு 3. திருவள்ளுவர் வகுத்த புதுநெறி, ஓர் ஒப்பீட்டாய்வு - முனைவர் பட்ட ஆய்வேடு, 4. திருமூலர் திருமந்திரம், 5. உலகமொழிகளில் தமிழ்ச்சொற்கள் ஆய்வுக்கட்டுரை 6. சிவஞான சித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்.

*குறிப்பு :-* இம்மூன்று கட்டுரைகளில் எழும் ஐயங்களுக்கு வினா விடைப் பகுதியில் விடையிருக்கின்றன.

**மழலைக் கவிஞர் பி.வி. கிரிக்கு**

**இந்தியன் வங்கி விருது**

குழந்தை எழுத்தாளர் சங்கமும், இந்தியன் வங்கியும் இணைந்து நடத்திய போட்டியில், **1994** ஆம் ஆண்டுக்கான சிறந்த குழந்தை எழுத்தாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள திரு.பி.வி. கிரி அவர்களுக்கு, இந்தியன் வங்கி அளிக்கும் குழந்தைக் கவிஞர் விருதும், ரூபாய் ஐயாயிரத்துக்கான காசோலையும் வழங்கும் விழா, **21-5-97** அன்று மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடந்தது.

மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன் அவர்கள் விருதினை வழங்கினார். பாரதிதாசன் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ச. முத்துக்குமரன், முன்னாள் மேயர் திரு. சா. கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



## "குன்றக்குடியும் கோலத்தமிழும்"

தெ. முருகசாமி, முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கச் செய்யும் சைவத் திருமடங்களுள் குன்றக்குடி தனித்தன்மையானது. பொதுவாக மடாலயங்களுள் தமிழ் என்றாலே அது சமயத்தமிழ் என்பதாகவே கருதப்படும். ஆனால் குன்றக்குடியைப் பொறுத்த மட்டில் சமயத்தமிழ் என்ற பொதுமையோடு சங்கத்தமிழும் காலத்திற் கேற்ப அறிவியல் தமிழும் வளர்க்குறும் பண்ணையாகக் குன்றக்குடி உள்ளதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியான ஒன்றாம்.

குன்றக்குடி மடாலயத்தின் 45 ஆவது மகாசந்நிதானமாக வீற்றிருந்து அருளாட்சி செய்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மடாலயத் தொடர்பான குருபூசை நிகழ்ச்சிகளிலும் திருக்கோயில் விழாக்களிலும் தமிழைப் பல்வேறு வகையில் வழிவழியாத வளர்க்கச் செய்த பாங்கை நினையுந்தொறும் நெஞ்சம் நெகிழ்கின்றது.

ஐந்து திருக்கோயில்கள் குன்றக்குடியின் பொறுப்பில் உள்ளதால் இதனை ஐந்து கோயில் தேவத்தானம் என்று கூறுவதுண்டு. இவ்வைந்து கோயிலுள் திருக்கொடுங்குன்றம் எனப்படும் பிரான் மலையில் உள்ள மங்கைபங்கர் கோயிலில் நடைபெறும் சித்திரைப் பெருவிழாவில் ஒருநாள் பாரி வள்ளலை நினைவு கூருமுகமாகப் . பாரி விழா நடைபெறும். சங்க இலக்கியத்தில் இடம் பெற்ற பாரியின் நினைவாகவே சங்க நூற்கருத்துக்கள் சொற்பொழிவாக மினிரும். பறம்பு மலையைச் சுற்றியுள்ள தமிழறிஞர்கள் பலரும் கூடிச் சங்கத்தமிழை ஆய்வர். அடிகளார் அவர்கள் அகத்தியரைப் போல் வீற்றிருந்து சங்கத் தமிழை வாரி இறைப்பார்கள். இவ்வாறு சங்க கால அரசன் ஒருவனின் நினைவாகச் சங்கத் தமிழைச் சமூகச் சந்தையில் அறிமுகம் செய்யும் சிறப்பு குன்றக்குடிக்கே உரிய தனித்தன்மையாகும். .

அடுத்து வைகாசித் திங்களில் திருப்புத்தூரில் நடைபெறும் வைகாசிப் பெருவிழாவில் ஒருநாள் திருமுறைவிழா கொண்டாடப் பெறும். தருமிக்குப் பொற்கிழி கொடுத்ததற்கான அகச்சான்று தேவாரப் பாடலாக உள்ள திருத்தலம் இத்திருப்புத்தூர் என்பதால் திருமுறைவிழா கொண்டாடப் பெறும். அந்நாளில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தை நினைவு கூருதல் முகமாகத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் என்ற தமிழ் அமைப்பு கூடித் திருமுறைத் தமிழ் ஆயப் பெறும். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்போல் அடிகளார் வீற்றிருந்து அருந்தமிழை அள்ளித் தருவார்கள்.

இவ்வாறே வைகாசி விசாகத்தன்றும் குன்றக்குடியில் நடைபெறும் விசாகப் பெருவிழா நாளில் திருக்குறள், புராணங்கள் போன்றவற்றில் உள்ள அறிவியல் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்படும் நிகழ்ச்சியாக அறிவியல் தமிழைக் குன்றமெறிந்த குமரவேளாக அடிகளார் வீற்றிருந்து விருந்து படைப்பார்கள்.

மேலும் மடாலயத்தில் நடைபெறும் குருபூசை நாட்களில் மனிதவள மேம்பாட்டு அடிப்படையில் சமயத் தமிழின் பங்களிப்பைச் சமூகத்திற்குப் பரிமாறுவார்கள்.

இவையெல்லாம் மடாலயத்தின் பழம் புகழ் பேணும் வகையாக அமைந்தாலும் புதுப்புகழ் புதுக்கும் வகையில் கடந்த ஐந்தாண்டுகளாகத் திங்கள் தோறும் 3 ஆவது சனிக்கிழமையின் மாலையில் "சிந்தனை நந்தவனம்" என்ற தமிழ் அமைப்பு மலர்ந்து தமிழ் மணம் பரப்பி வருகின்றது என்ற செய்தி தமிழகம் அறிந்து கொள்ள வேண்டிய அரிய செய்தியாகும்.

சிந்தனை நந்தவனத்தில் திருக்குறள், சங்க இலக்கியம் போன்ற நூல்களின் தொடர்கள் தலைப்பாகத் தரப்பெறும். தலைப்பை ஒருவர் முன்மொழிந்து பேசுவார். அது தொடர்பான கருத்துக்கள் பலராலும் எடுத்து மொழியப் பெறும். இந்த வகையாக 50 கூட்டங்கள் நடந்தேறியுள்ளன.

22.4.97 ல் 51 ஆம் சிந்தனை நந்தவனக்கூட்டம் நடந்தது. அன்று தவத்திரு அடிகளாரின் இரண்டாம் ஆண்டுக் குருபூசை





நாள் என்பதால் அடிகளார் நினைவாக "சான்றோர் சான்றோர் பாலர் ஆப" என்ற புறநானூற்றுத் தொடர் ஆய்வுக்குரிய தொடராக எடுத்துக் கொள்ளப் பெற்றது. இவ்வாய்வு என்னால் நிகழ்த்தப் பெற்றது.

புறநானூற்றில் இத்தொடர் உள்ள சூழல் விளக்கப்பட்டது. உண்மை நட்பால் ஒன்று கூடும் மனித மனங்கள் பற்றிய உணர்வுகள் பேசப்பட்டன. விலை மதிப்புடைய அணிகலன் செய்யுங்கால் உயர்ந்த பொருள்கள் ஒன்று சேர்தல்போல் சான்றோர்கள் ஒன்று கூடுவர் எனப் பொதுவகையால் இத்தொடர் விளக்கப்பட்டாலும் சிறப்பு வகையால் திருக்குறளின் சான்றாண்மை அதிகாரக் குறளோடு பொருத்திக் கூறப்பட்ட போது அவ்விளக்கம் அடிகளாருக்கு முற்றிலும் பொருந்தியதான உணர்வை அனைவரும் பெற்றனர் என்பதே அன்றைய சிந்தனை நந்தவனத்தின் பயனாகும்.

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை .** (985)

சான்றோர்க்குரிய ஆற்றல்களிலேயே பெரிய ஆற்றல் பணிவு. அப்பணிவுதான் பகைவரை நண்பராக மாற்றும் கருவி என்ற குறட்கருத்து இன்றைய சமூக அமைப்பிற்குத் தேவையான மாமருந்தானதொரு கருத்தாகும்.

ஈண்டுப் பகை என்றது மாறுபட்ட சிந்தனையாளர் உள்ளிட்டோரைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். மாறுபட்டோரையும் நட்பாக்கிக் கொள்ளும் மனநிலை யாவர்க்கும் ஏற்படுதல் அரிது. அவ்வாறே மாறுபட்டாரோடு சிந்தனை ஒன்றி உறவாடுதலும் அரிது. வேண்டிய அளவில் கொண்டும் கொடுத்தும் வாழும் ஒத்ததறிந்த நிலையே சமூகத்தின் வளர்ச்சியில் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும். குன்றக்குடி அடிகளாரிடம் இத்தகு ஒத்துப்போகும் மனநிலை மிகுதியும் இருந்ததால் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பகுத்தறிவாதிகளுடன் உறவாடி பல சமூக மாற்றங்களை உருவாக்கினார்கள். இசுலாம், கிறித்துவம் போன்றவற்றையும் நல்லிணக்கத்தோடு பாவித்ததால்தான் 1982 ல் மண்டைக்காட்டு மதக் கலவரம் ஒடுங்க, மனித நேயம் மலர்ந்தது.

இந்த வகையாகச் 'சான்றோர் சான்றோர் பாலராப' என்பதற்கான விளக்கம் திருக்குறள் கண்கொண்டு அடிகளாரை நீள நினைக்கச் செய்ததோடு அன்றைய சிந்தனை நந்தவனத்தின் பயனாகவும் இருந்தது எனலாம்.

அடுத்து இத்தொடர் பற்றிய கலந்துரையாடலில் குன்றக்குடி ஆதினப்புலவர் திரு கதிரேசன் அவர்கள் தங்கத்தில் பவளம், முத்து, மணி முதலியவற்றைப் பதித்தல்போல் கோப்பெருஞ்சோழனாம் தங்கத்தில் பிசிராந்தையாராகிய மணியும், பொத்தியார் போன்றோராகிய பவளமும் முத்தும் பதிக்கப்பட்டுள்ளன என்று பாடலில் உள்ள உவமை நயத்தைச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

மேலும் அப்பாடற்கு மெரு கூட்டுமாறு பாவலர்மணி திரு பழநி அவர்கள் சான்றோர்கள் இன்னின்னார் எனக் குறிப்பாகக் கூறிய பாடல் 'சாலார் சாலார்' என யாரைச் சுட்டியதெனில் கோப்பெருஞ்சோழனின் மக்களை நினைவூட்டியது எனக் கூறி விளக்கியது வெகுசிறப்பாக இருந்தது. கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார், பொத்தியார், கண்ணகனார் எனச் சான்றோர் வரிசையைக் கூறும் இப்புறப்பாடல் பெயர் தெரியாத மக்களைப் பொதுப்படச் சுட்டுவதால் சாலார் என்பார் நாட்டு மக்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி ஆகி விடுவார்கள் என்பதாம்.

இப்படியாகச் சூழ்ந்து சூழ்ந்து இத் தொடர்ப் பொருள் ஆயப் பெற்றதும் இறுதியாகத் தற்போது அருளாட்சி புரியும் குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் வாழ்த்துரையோடு கருத்துப் பரிமாற்றமாகிய சிந்தனை நந்தவனம் மணந்து தமிழ் மணம் பரப்பியது.

ஆக, தொண்டலால் துணையுமில்லை என்ற வகையில் நடமாடும் நாவரசராக, துவராடைத் தொண்டராக வீற்றிருந்த தவத்திரு அடிகளாரின் குன்றக்குடித் திருமடமானது காலத்திற்கேற்பத் தமிழைப் பல்லாற்றானும் வழிவழி வளர்க்குறும் களமாக உள்ளதால் சைவத் திருமடங்களில் குன்றக்குடி, தனித்தன்மை பெற்றதென்பது உள்ளங்கை நெல்லியான உண்மைச் செய்தியாகும்.



## எழிற்றமிழ் வாழச் செய்திடுவீர்!

(மழலைக் கவிமாமணி மயிலை முத்தெழிலன்)

மரபுப் பாட்டை மறவாதீர்;
மணித்தமிழ் தன்னைத் துறவாதீர்!
அரசுகள் வரலாம்; மாறிடலாம்;
அல்லல், இன்பம் ஏற்படலாம்!
இரவும் பகலும் மாறிவரும்;
இலக்கிய அமைப்பு மாறிடுமோ?
தரமுள பாக்கள் தருவீரே;
தமிழ்தான் வளரச் செய்வீரே!

புதுக்கவி என்றே எழுதுகிறார்;
புகல்வீர் கவிதை அதிலுண்டா?
புதுக்கவி தன்னை எழுதிடவும்
புலமை மிகவும் தான்தேவை!
எதுகை, மோனை இல்லாமல்
என்றுங் கவிதை இனிக்காது!
மதுதமிழ் தன்னில் பாடிடவே
மகிழ்வுற இலக்கணம் கற்றிடுவோம்!

ஒலியெலாம் மொழியாய் யாகாது;
ஒலிப்பது பொருளைத் தரவேண்டும்!
ஒலியை எழுத்தில் தரும்பொழுது
உரைநடையில்நாம் எழுதிடலாம்!
ஒலியை இசைக்க முயன்றிட்டால்
ஒழுங்காய் அமைந்தால் தான்முடியும்!
ஒலிக்கக் கவிதை எழுதிடவே
உண்மையில் இலக்கணம் உதவிடுமே!

இலக்கண மில்லாக் கவிதையினைக்
கரையிலா வெள்ளம் என்றிடலாம்!
இலக்கணந் தழுவிய இலக்கியமே
இசையுற உலகில் நிலைத்திடுமே!
நலமுடை பாட்டை சுவைநல்கும்;
நாட்டினர் புகழைப் பெறலாகும்!
இலங்கிடப் பாக்கள் எழுதிடுவோம்;
எழிற்றமிழ் வாழச் செய்திடுவோம்!

## இறந்தாரா இரந்தாரா

(பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்)

> **துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
> **இல்வாழ்வான் என்பான் துணை**

என்னும் குறளில் உள்ள 'இறந்தார்' என்பது, 'இரந்தார்' என்ற பாடமாகத்தான் இருத்தல் வேண்டும் என்று புலவர், பா. வீரமணி அவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் (சிலம்பு 69 பரல், 7, 8) சிறந்த ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்கள். தக்க சான்றுகளுடன் அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தாகவும் மேலும் சிந்திக்க வைப்பதாகவும் அமைந்துளது அக்கட்டுரை. அதுபற்றி யான் மேலும் சிந்தித்ததின் விளைவே இக்கட்டுரை.

### துணை

> **துறந்தார் துவ்வாதார் இறந்தார் என்னும் மூவர்க்கும் இல்வாழ்வான் துணையாவான்**

என்று கூறியது போலவே,

> **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
> **நல்லாற்றின் நின்ற துணை** (குறள் 41)

என இயல்புடைய மூவர்க்கும் துணையாவான் என்றும் முன்னர்க் கூறினார் திருவள்ளுவர். இயல்புடைய மூவராவார் பெற்றோர், மனைவி, மக்கள் ஆவர்.

துணை என்னும் சொல்லுக்குப் பலபொருள்கள் உண்டு. அவற்றுள் இங்கே உதவி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. இல்வாழ்வான் இயல்புடைய மூவர்க்கும் மற்றவர்க்கும் துணையாவான் என்பதால், அவர்கள் யாவரும் வாழ்பவர்கள் என்பதும், அவர்கள் தத்தமக்கேற்ற குறிக்கோள்களுடன் வாழ்பவர் என்பதும், அவர்கள் வாழ்க்கைக் குறிக்கோளுக்கு இல்வாழ்வான் துணையாவான் என்பதும் பெறப்படும்.

பெற்றோராகிய தாய் தந்தையர் தாங்கள் இல்லறம் நடத்தித் தம் இறுதிக் காலத்தைச் 'சிறந்தது பயிற்றல்' காரணமாகத் தெய்வநெறியில் ஈடுபடும் குறிக்கோளுடையராய் இருப்பராயின் அதற்குத் துணையாதல் இல்வாழ்வான் கடமை. அதாவது பெற்றோரின் நல்ல குறிக்கோளுக்குத் துணையாதல் கடமை.





தன் மனைவி தன் இல்வாழ்க்கைக்குத் துணையாக இருந்து நல்லறம் செய்யும் குறிக்கோளுக்குத் தான் துணையாதல் கடமை.

மக்களின் எதிர்கால வாழ்வின் குறிக்கோளுக்கும் துணையாதல் அவன் கடமை.

அவ்வாறே துறவறம் மேற் கொண்டவர், நல்கூர்ந்தவர், இறந்தவர் ஆகியோர்க்கும் அவர்களின் குறிக்கோளுக்குத் துணையாதல் வேண்டும்.

மேலே கூறப்பட்ட அறுவர்க்கும் அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளுக்கு உதவி செய்வதே துணையாவதாகும்.

தென்புலத்தார், தெய்வம் என்பவர் குறிக்கோள் வாழ்க்கையர் அல்லர். விருந்தினர் முன்னர் வாராதவராகவும் இனியும் அடிக்கடி வாராதவராகவும் வந்து செல்பவர். அதனால் அவர் குறிக்கோளுக்கு உதவுதல் என்பது இல்லை. விருந்தோம்பலோடு சரி. சுற்றம் குறிக்கோளுடன் இருப்ப தாயினும் தன்னைச் சார்ந்திருத்தலின் அவர்களைக் காத்தல் கடமையாம். அவர்களை உணவு முதலியவற்றால் காக்கவே அவர்கள் தம் குறிக்கோளை எய்துவர். தன்னைத்தானே உணவு ஒழுக்கம் முதலியவற்றால் காத்துக் கொள்ளுதல் தன் குறிக்கோளுக்கு வேண்டுவது. எனவேதான் வள்ளுவர்

> **தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
> **ஐம்புலத்தாறு ஓம்பல் தலை** (குறள் 43)

எனத் 'துணை' என்று கூறாமல் 'ஓம்பல்' தலை என்றார். எனவே முன்னர்க் கூறப்பட்ட இயல்புடைய மூவர் முதலிய அறுவரே இல்வாழ்வான் துணையால் தம் குறிக்கோளை எய்துவர் என்னல் வேண்டும்.

### இரந்தார்

'இரந்தார்' என்பவர் இரந்து உண்டு வாழ்பவர்; இரவலர். வேண்டுமானால் இரந்துண்ணும் வாழ்க்கையராக இருக்கலாம். அவர்க்கு இரத்தலே குறிக்கோளாக இருக்க முடியாது. இரப்பதே அவர்தம் குறிக்கோள் என்றால் அவரை வள்ளுவர் வெறுப்பர்.

> **இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
> **கெடுக உலகியற்றி யான்** (குறள் 1062)

எனக் கூறிய திருவள்ளுவர், இரந்தவர்க்கு இல்வாழ்வான் துணையாக வேண்டும் என்று கூறமாட்டார். ஒருகால்

வறுமையாலோ பிறகாரணங்களாலோ இரந்துண்டு வாழ நேரின் அவரெல்லாம் 'துவ்வாதவர்' என்றதில் அடங்குவர். ஆதலின், அவரை இரந்தார்க்கும் எனத் தனியாகக் கூற வேண்டுவதில்லை.

பாணர் கூத்தர் முதலியோர் இரவலர் எனப்படுவர். ஆதலின் அவரைப் புரப்பது இல்வாழ்வான் கடமை என்னலாம். அவர் யாவரும் தம்மை ஆதரிக்கும் புரவலரை நாடிச் செல்பவரேயன்றித் தனித்த இல்வாழ்வானை நாடிச் செல்லுதல் இல்லை. அரசர், வள்ளல் போல்வாரிடம் சென்று பாடி ஆடி மகிழ்வித்துப் பரிசில் பெறுபவர். அவர் பரிசில் பெறுவதை இரந்து பெறுவது என்று கொண்டு கூறும் வழக்கு அக்காலத்திருந்ததேயன்றி, அவர்களை பிச்சைக்காரராக எண்ணியது அக்காலத்திலில்லை. ஆதலின் பாணர்போலும் இரவலரை வள்ளுவர் இரந்தார் எனக் கூறியதாகக் கொள்ளலாகாது.

இனி, இரவு என்பதற்கு மதுரை இளங்குமரனார் அவர்கள், "கருவி, பொறித்திறம், ஆக்கம் முதலியவை இல்லாமையால் கேட்டுப் பெறுகின்ற நிலை" என்றும், இரவச்சம் என்பதற்குக் "கருவி, பொறித்திறம், ஆக்கம் முதலியவை இல்லாமையால் கேட்டுப் பெறும் நிலையில் தன் மானம் இழக்க அஞ்சுதல்" என்னும் பொருள் கூறுவர். இத்தகையவர் வயிற்றுக்காக இரப்பவராகார். தேவையானவற்றைப் பிறரிடம் கெஞ்சிப் பெறுபவராவார். இவர்க்குக் கெஞ்சிப் பெறுவதே (இரப்பதே) குறிக்கோள் இல்லை. ஆதலின் இவர்க்கு இல்வாழ்வான் துணை வேண்டுவதில்லை. ஒருகால் அவர்க்கும் அவன் துணை என்றே கூற வேண்டுமானால் அவர் நல் கூர்ந்தாருள் அடங்கித் துவ்வாதவர் ஆவார். கருவி முதலியன இல்லாமைக்கு அவரது வறுமையே காரணம் ஆம். இளங்குமரனாரின் விளக்கத்துக்கு

**ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்த தில்.**

(குறள் 1066)

என்பதைச் சரியான உதாரணமாகக் காட்டலாம். தன்னிடம் நீர் இல்லாமையால் பக்கத்து வீட்டாரிடம் ஆவிற்கு நீர் வேண்டும் என்று கெஞ்சுகிறார். நீர் இல்லாமை அவனது வறுமையைக் காட்டும்.

## இறந்தார்

'இறந்தார்' என்பதற்குக் 'கடந்தார்' என்பதே பொருள். உடம்பை விட்டுக் கடந்தவரை இறந்தார் என்கிறோம்.





எல்லையைக் கடத்தலும், ஓரளவைக் கடத்தலும் இறத்தல் என்ற சொல்லால் குறிக்கப்படும். அளவு கடந்த வெகுளியினை 'இறந்த வெகுளி' என்பர் வள்ளுவர் (குறள் 531) ஊர் எல்லையை விட்டுப் போகிறவரையும் 'இறந்தார்' என்று குறிப்பிடுவது உண்டு.

**'இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்**
**சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்'**

என்னுமிடத்தில் கற்பொழுக்கம் காரணமாகத் தான் விரும்பிய ஆடவனுடன் ஊரைக்கடந்து சென்றவளை 'இறந்த கற்பினாள்' என்று கூறியதைக் காணலாம். எனவே, 'இறந்தார்' என்பது ஊரைக் கடந்து சென்றவர் என்னும், பொருளும் இடத்துக்கேற்ப அமையும் என்னலாம். இத்தகைய இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணையாவான்; எப்படி?

காதலர் இருவர்தம் ஊரை நீங்கிப் பாலைவழி வந்தபோது அவர்களை இடையிற் கண்டவர்கள், "நீங்கள் செல்லும் இடம் தொலைவில் உள்ளது; பொழுதும் மறைந்தது; ஆதலின் அண்மையில் உள்ள எம் ஊரில் தங்கிச் செல்க" என்று கூறி உதவுதல் உண்டு.

**எம்மூர் அல்லது ஊர்நணித்து இல்லை**
**வெம்முரட் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்**
**சேர்ந்தனை செம்மோ பூந்தார் மார்ப**
**இளையள் மெல்லியள் மடந்தை**
**அரிய சேய பெருங்கல் ஆறே**

(தொல்.பொருள். அகத் 40. மேற்.)

என்னும் சிற்றட்டகப் பாடல் காண்க. இவ்வாறு தம்மூர்க்கு வருமாறு கூறுவது மட்டுமன்றிக், காதலர் தமக்குத் திருமண இடையூறு வந்தமையால் உடன்போக்காக வந்தவராதலின் அவரைத் திருமணம் செய்வித்து உதவுதல் நம் கடமை என்று எண்ணித் திருமணம் செய்து வைப்பதும் உண்டு.

**இதுநும் ஊரே யாவரும் கேளிர்**
**பொதுவறு சிறப்பின் வதுவையும் காண்டும்**
**ஈன்றோர் எய்தாச் செய்தவம்**
**யாம்பெற் றனமால் மீண்டனை சென்மே**

(தொல்.பொருள். அகத் 40 மேற்கோள்)

என்னும் பாடலைக் காணலாம். உடன்போக்குக் கொண்ட காதலரைப் பார்த்தவர், "எம்முடைய இவ்வூர் உம் ஊராகும்;

இங்குள்ளோர் யாவரும் உம் கேளிர் ஆவர்; சூரியனும் மறைந்தான்; அதனால் எம்மூரில் தங்கிச் செல்லுங்கள். யாங்களே உங்கட்குத் திருமணம் செய்து வைக்கிறோம். இது உங்கள் பெற்றோர் கொடுத்து வைக்காத யாங்கள் கொடுத்து வைத்த தவப்பேறாகும்'' எனக்கூறியதாக அமைந்தது இப்பாடல். இதனால் ஊரை இறந்து (கடந்து) வந்த காதலரைத் திருமணம் செய்து வைக்கும் உதவியை அக்காலத்தார் மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படும். எனவே இத்தகைய இறந்தார்க்கு இல்வாழ்வான் என்பான் துணை என்பதைக் குறிக்கவே `இறந்தார்க்கும்' என்ற சொல்லை வைத்தார் வள்ளுவர்.

"எம்வெம் காமம்" எனத் தொடங்கும் அகப் பாடலில் (15)

வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்''

என்னும் அடிகள் காணப்படுகின்றன. உண்ண உடுக்க என யாதும் எடுத்து வராமல் வெறுங்கையுடன் வருகின்ற புதுமக்களை அவர்க்கு வேண்டுவன கொடுத்துக் காத்து நெறிப்படுத்தும் பண்புடைய தலைமையான மக்கள் சேர்ந்துள்ள மூதூர்'' என்பது அவ்வடிகளின் பொருள். இதனால் வெளியூரிலிருந்து வாழ்வைத் தேடி வரும் வம்பலரை - மக்களைக் காப்பவர் இருந்தனர் என்பது பெறப்படும். வாழ்வை வேண்டித் தம்மூரைக் கடந்து வருபவரும் 'இறந்தார்' எனப்படுவர். அவர்க்கும் இல்வாழ்வான் துணையாவான்.

## முடிப்புரை

இயல்புடைய மூவரும் இல்வாழ்வானுடன் இருப்பவர்; துறந்தாரும் துவ்வாதவரும் தன் ஊரில் இருப்பவர்; தன் ஊரில் இருந்து கொண்டே பிச்சை எடுத்து உண்பவராயின் அவர் துவ்வாதவரில் அடங்குவர். வெளியூரிலிருந்து எல்லை இறந்து (கடந்து) வருபவர் 'இறந்தார்' எனப்படுவர். அவர்க்கும் இல்வாழ்வான் துணையாதல் வேண்டும் என்பதற்காகவே வள்ளுவர் 'இறந்தார்க்கும் துணை' என்றார். ஆதலின், துறந்தார்க்கும் எனத் தொடங்கும் குறளில் 'இரந்தார்க்கும்' என்ற பாடம் இல்லாமல் 'இறந்தார்க்கும்' என்ற பாடம் இருப்பதே சிறக்கும் என்னலாம்.

இக்கருத்தையும் அறிஞர் உலகம் ஏற்று மேலும் விளக்கம் கண்டு தம் கருத்தை அறிவித்தல் நன்று.



# மேலாண்மை மொழி

**முனைவர் மலையமான்**

வடமொழி, தேவமொழி என்ற கருத்து சிலரால் நிறுவப் பட்டது. அது பல காலம் பரப்பப்பட்டது. அக்கருத்து நிலை நிறுத்தப்பட்டு விட்டது. இந்தியாவின் பழைமை மொழியான தமிழ் நீச மொழி என்று விளம்பரப்படுத்தப்பட்டது. இக்கருத்தைத் தமிழர்களும் முன்பு பெருவாரியாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

வடபுலத்திலிருந்த அகத்தியருக்குச் சிவன் தமிழை அருளி, அவரைத் தென்னாட்டுக்கு அனுப்பினார் என்றும், அவர் இங்கு வந்து தமிழுக்கு மூல / முதன்மையான இலக்கணம் (அகத்தியம்) இயற்றினார் என்றும் சொல்லப்பட்டு வந்தது. இலக்கண அறிவு இல்லாதிருந்த தமிழர்களுக்கு, முதல் இலக்கணத்தை எழுதி அளித்தவர் அகத்தியர் என்பதும். ஆகவே, தமிழர்கள் அந்த வடநாட்டு அறிஞருக்குக் கடன்பட்டவர் என்பதும் உணர்த்தப் பட்டது. தம் மொழிக்கு இலக்கணம் எழுதும் அளவுக்குத் தமிழர்கள் திறமையில்லாதிருந்தனர் என்பதும் இதன் உட்பொருளாகும். இதற்கு ஏற்ப அவருடைய பெயர் அகஸ்தியர் என்று வடமொழி (ஸ்) எழுத்து இடம் பெற்ற பெயராகவே, நெடுங்காலம் கூறப்பட்டு வந்தது. இதன்மூலம் தமிழரைவிட, வடமொழிக்குரியவர் மேன்மையர், அறிவுக் கூர்மையர், மேலாண்மையர் என்ற கருத்துகள் உறுதிப்படுத்தப்பட்டன.

வால்மீகி இராமாயணம் இயற்றினார். அது வடமொழியின் முதற்காப்பியம். இது 'ஆதி காவியம்' என்றும் சிறப்பிக்கப் பட்டது. இந் நூல் இந்தியாவிலுள்ள எல்லாமொழிகளிலும் மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ பரப்பப்பட்டது. இந்த இராமாயண நூல்களே. எல்லா இந்திய மொழிகளிலும், முதல் நூலாக / முதன்மை நூலாக விளங்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயலாக்கப்பட்டது. (Hidden Heritage by Pandiyan) ஆனால் இம்முயற்சி தமிழைப் பொறுத்தமட்டில் வெற்றி பெறவில்லை.

வடமொழியாளர்கள், தமிழிலுள்ள சிறந்த நூல்களைத் தம் மொழியில் பெயர்த்துக் கொண்டனர். அம் மூல நூல்களைத் திட்டமிட்டு அழித்தனர். பிறகு அவற்றை மீண்டும் தமிழில் பெயர்க்கும்படி செய்தனர். இந் நூல்கள் வடமொழியிலிருந்தே தமிழுக்கு வந்தவை என்று பிறர் நம்பும்படி செய்தனர். இதன் மூலம் அறிவுத்துறையில் தங்கள் மேலாண்மையைப் பறை சாற்றினர். "தமிழரிடமிருந்த பல அரிய விஷயங்களை (வட மொழியில்) மொழி பெயர்த்து, தமிழர் அறியுமுன்னரே

அவற்றைத் தாம் அறிந்தன போலவும் வடமொழியினின்றுமே தமிழுக்கு அவை வந்தன போலவும் காட்டினர்" என்று பரிதிமாற் கலைஞர் (வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்) தான் எழுதிய தமிழ் மொழிவரலாற்றில். இவ்வுண்மையைத் தெளிவாகக் கூறியிருக்கிறார் (ப. 33) "பிராமணர் தாம் அழிக்க முடியாத நூல்களைச் சிதைவு படுத்தினர். தமிழ் நூல்களை எடுத்து சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துப் பல கேடுகள் செய்திருக்கின்றனர்" என்று அறிஞர் கோவர் (Gover) கூறியுள்ளார். "தம் பெருமையை நிலை நாட்டுவதற்காகப் பிராமணரால் புராணங்கள் இயற்றப்பட்டன. வட இந்தியாவில் செய்தது போலவே, தென்னிந்தியாவிலும் தமக்கு இடையூறு எனக் கண்ட நூல்களை அழித்தனர்; மாற்றியும் கூட்டியும் திருத்தியும் எழுதினர் (தமிழர் சரித்திரம். ப. 20)

தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்த முழுமையான முதல் இலக்கண நூலாகும். அகத்தியரைப்போலவே, தொல்காப்பியரும் வட மொழிக்கு உரியவர் என்றும், இவருடைய இயற்பெயர், 'திரண தூமாக்கினி" என்றும் அறிவித்தனர். தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடர் வருகின்றது. ஐந்திரம் என்பது வடமொழி இலக்கணம் என்றும், அதைக்கற்ற தொல்காப்பியர், அதை ஒட்டியே தனது நூலை எழுதினார் என்றும் கூறி, வடமொழியின் மேலாண்மையைச் சிலர் வற்புறுத்தினர். வடமொழியின் ஐந்திரத்தை ஒட்டியதே தொல்காப்பியம் என்று (அதாவது, தமிழ் இலக்கணம், வடமொழியின் அடிச்சுவட்டில், அதைப் பின்பற்றி நடை பயில்கிறது என்று அறிஞர்கள் நம்பும்படி செய்தனர்.

ஆனால் அதே சிறப்புப் பாயிரத்தில்

**"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலம் தொகுத்தோன்"**

என்ற தொடர்கள், தொல்காப்பியர் கற்ற ஐந்திரம் என்பது தமிழ் நூலாகத்தான் இருக்க வேண்டும் என்பதைத்தெளிவு படுத்துகிறது. (அவ்வாறே, ஐந்திரம் என்ற பெயரில் இரு தமிழ் இலக்கண நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன) அன்றியும் வடமொழி இலக்கணம் கூறாத திணை, பால், அகம், புறம், குறிஞ்சி, வெட்சி முதலியவையும், வெண்பா முதலிய செய்யுள் வகைகளும், தொல்காப்பியத்தில், இடம் பெற்றுள்ளன. இவை தமிழுக்கே உரியவை. எனவே, வடமொழி இலக்கணத்தின் வழி வந்ததே தொல்காப்பியம் என்றபொய்யுரை அறிஞர்களால் ஒதுக்கப்படுகிறது.





தமிழின் தலை சிறந்த நூல் திருக்குறள். ஆனால் இதன் ஆசிரியரான திருவள்ளுவர் என்ற பெயர் வடமொழிவாணரான, ஸ்ரீவல்லபர் என்பதன் தமிழாக்கம் என்று கூறினர். இதன் மூலம், திருவள்ளுவர் வடநாட்டினர் என்று நிறுவ முயன்றனர். மேலும், திருவள்ளுவரின் தந்தை, 'பகவன்' என்ற வடமொழியாளர் என்றும் செய்தி பரப்பினர். அன்றியும் திருக்குறள் அறத்துப்பால் (நீதி குசுமு மாலா போன்ற) வடமொழியின் அறநூல்களை ஒட்டியும், பொருட்பால், அர்த்தசாத்திரம், சுக்கிரநீதி ஆகியவற்றைச் சார்ந்தும் காமத்துப்பால் வாத்சாயனரின் காம சூத்திரத்தைப் பின்பற்றியும் இயற்றப்பட்டது என்றும் வடநூலார் பறையறைந்தனர். இதன் உட்பொருள் என்ன? தமிழனுக்குத் திருக்குறள் போன்ற உலகம்புகழும் நூலை எழுதக்கூடிய அறிவும் திறமையும் இல்லை; அந்த மேன்மை வடமொழியாளருக்கு மட்டுமே உண்டு என்ற கருத்து மறைமுகமாகப் பல காலம் கூறப்பட்டு வந்தது. மேலும் திருக்குறளைத் தமிழ் வேதம் / தமிழ் மறை என்று தமிழ்ப்புலவர்களே போற்றும் நிலை இன்றும் உள்ளது. இதன்படி, வேதமே உயர்வுடையது என்ற மேலாண்மைக் கருத்தும். அதைப்பின் சார்ந்து (அ) அதைப் போல திருக்குறளையும் தமிழரின் வேதம் என்று ஒப்புக் கொள்ளலாம் என்ற முடிபும் தமிழறிஞர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வேதமே உயர்வுடையது என்ற கருத்தின் அடிப்படையில் தான், "எழுதும் மறைமொழிந்த பிரான்" என்று திருஞான சம்பந்தர் குறிக்கப்பட்டார் (பெரியபுராணம், 21-180) "வேதம் தமிழ் செய்த மாறன்" என்று நம்மாழ்வாரும் போற்றப்பட்டார் என்பது இங்குச் சிந்திக்கத் தக்கது.

தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய சிலர் வடமொழியின் மேலாண்மையை உயர்த்திப் படித்தனர். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் 'கரணம்' என்ற சொல்லுக்கு வேள்விச்சடங்கு என்று உரை கண்டார் (தொல். கற்பு 4) (இது 'வதுவைச் சடங்கு' என்பார் முதல் உரையாசிரியரான இளம்பூரணர்.) "கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண்வகையும் கொள்க" என்று அதே நச்சினார்க்கினியர் வடமொழி திருமண முறையைத் தமிழ் நெஞ்சுக்குள் திணித்திருக்கிறார். மேலும் பெண்ணிற்கு இயல்பான அறிவு கிடையாது. பெற்றோரும் கணவனும் கற்பித்தால் மட்டுமே அறியும் அறிவுடையவள் (அவள்) என்றும் அவர் குறித்தார். சங்க காலத்தில், ஔவையார், நச்செள்ளையார், ஒக்கூர்மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், காவற்பெண்டு முதலிய பல பெண்பாற்

கவிஞர்கள் சிறப்புடன் திகழ்ந்தனர் ஆனால் இதை மறுத்துவிட்டு மறைத்துவிட்டு - நச்சினார்க்கினியர், பெண்மையை இழிவு படுத்தும் முறையில் - வடமொழியினர் பழக்கத்தை - தமிழர் நெஞ்சில் புகுத்தியுள்ளார். இவ்வாறே சேனாவரையரும் பரிமேலழகரும் தமிழ் நூல்களில் வடமொழி மரபைப் புகுத்தி உரை கண்டனர்.

வடமொழி தேவமொழி என்ற கருத்து முனைப்பாகப் பரப்பப்பட்டது. நாயன்மார்களும் ஆழ்வார்களும், இறைவனைத் தமிழில் பாடி வணங்கியது மறைக்கப்பட்டது அவர்களுடைய பாடல்கள் மதிப்பிழந்தன. இறைவழிபாட்டில் வடமொழி புகுந்தது தமிழ் தாழ்த்தப்பட்டுப் பின்னிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்நிலை இன்றளவும் நீடித்திருக்கிறது. குடும்பச் சடங்குகளிலும், தமிழ் அழிந்தது. வடமொழி வாழ்வு பெற்றுவிட்டது.

வடசொற்களே தமிழ்ச் சொற்களைவிட உயர்ந்தவை என்ற கருத்து தமிழரிடையில் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. இதன் விளைவாக, பழந்தமிழ்ச் சொற்கள் தாழ்வு நிலை அடைந்தன. சமக்கிருதச் சொற்கள், மேலாண்மை பெற்றன எடு- (நாற்றம் - தாழ்ந்த பொருள், வாசனை - உயர்ந்தபொருள் இவ்வாறே சோறு - சாதம், சாறு - ரசம், தண்ணீர் - ஜலம் என்பனவற்றில் தமிழ்ச் சொற்கள் இழிபொருளையும் வடசொற்கள் உயர்பொருளையும் பெற்று வருவதைக் காணலாம்.)

தமிழகத்தில் உள்ள ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் வடமொழியாக மாற்றப்பட்டன. அவையே உயர்வு கொண்டவை என்று மக்களால் ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டன. இதன் விளைவாக, திருமறைக்காடு - வேதாரணியம் ஆனது. மயிலாடுதுறை மயூரபுரமாகிப் பின் மாயவரமாயிற்று. குடமூக்கு, கும்பகோணமாயிற்று. நவிர மலை பரவத் மலையானது. ஊரில் கோயில் கொண்டிருந்த இறைவனின் / இறைவியின் தமிழ்ப் பெயர்கள் வடமொழி பெயர்ப்பைப் பெற்றன. தமிழ் முருகன் - சுப்பிரமணியன் எனப்பட்டான். மாயோன் - விஷ்ணு ஆனான்.

முருகன், தமிழ் நாட்டில் மிகச் சிறந்த மனிதன் - தலைவன் என்றும், அவன் ஆறுதுறைகளில் வல்லவன் என்றும் ஆகவே அவன் ஆறுமுகம் எனப்பட்டான் என்றும், அனைவரும் பின்பற்றக்கூடிய - தொழக்கூடிய பெருமையை அவன் பெற்றிருந்தான் - என்று அறிஞர் தமிழண்ணல் ஆய்ந்து உரைத்திடுகிறார். ஆனால், இராமனுடைய கதை இங்கு





புகுத்தப்பட்ட பிறகு, முருகனுடைய பெருமை மங்கிவிட்டது - மங்கும்படி செய்யப்பட்டது. விநாயக வழிபாடு இங்கு வந்த பிறகு முருகனுடைய சிறப்பு மேலும் அழிந்தது. பொருத்தமற்ற உருவம் கொண்ட விநாயகன், முருகனுடைய அண்ணன் ஆக்கப்பட்டான். முருகன் இளையவனாய் இளைத்துவிட்டான்.

புண்ணியத் தலங்களுக்குச் சென்றால் பாவம் குறையும் என்ற கருத்து மக்களால் - தமிழர்களால் - ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டது. அப்படிப்பட்ட புண்ணியத் தலங்கள் ஒன்றிரண்டு தென்னகத்தில் இருக்கும்படி திட்டமிடப்பட்டது. (எடு - காஞ்சி, இராமேசுவரம்) மற்ற பெரும்பாலான புண்ணியத் தலங்கள் வடநாட்டில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது. எனவே, தமிழர்கள் புண்ணியம் தேடவேண்டும் என்ற நோக்கத்தில், வட நாட்டுக்குப் பயணம் செய்யும் கட்டாய நிலை உருவாக்கப்பட்டது. கங்கை ஆறே புண்ணியம் தரும் ஆறு என்று மக்கள் - தமிழர்கள் - நம்பும்படி செய்யப்பட்டது. இந்தக் கருத்து கம்பரின் மனத்தை உருத்திய காரணத்தால், 'கங்கையிற் புனித மாய காவிரி' என்ற தொடர் அவர் நூலில் படிந்தது போலும்

புத்தரும் வர்த்தமானரும், வடவரின் வைதிக முறையை எதிர்த்தனர் அறிவுநெறியைக் காட்டினர். அவரின் மதங்கள் செழித்து வளர்ந்தன. ஆனால், காலப்போக்கில், புத்தமதம் இந்தியாவிலிருந்தே வெளியேற்றப்பட்டது. சமண மதம் அழிக்கப்பட்டுவிட்டது.

பத்தினிப் பெண்களை வடமொழி இலக்கியங்கள் கூறுகின்றன. அருந்ததி, உலோபாமுத்திரை, சுநீதி, சாவித்திரி, அனுசூயை, சீதை, குந்தி, பாஞ்சாலி ஆகியோரைப் பத்தினிப் பெண்டிர் என்று மேன்மைப்படுத்தி உரைக்கின்றன. வடமொழி யாளரின் இந்த மேன்மைப்பட்டியல், இளங்கோ அடிகளின் மனத்தை உருத்தியிருக்கலாம். அதனால்தான், அவர் கண்ணகி, மாதவி, பாண்டிமாதேவி ஆகியவர்களைப் பத்தினி நிலைக்கு உயர்த்திக் காட்டினார் அதுமட்டுமன்று கண்ணகியின் வாயிலாக, பூம்புகாரில் வாழ்ந்த தமிழ் நாட்டுப் பத்தினிப் பெண்டிரின் பட்டியலையே அளித்தார்.

வடமொழியைத் தமிழில் கலந்து எழுதினால், அது இனிமையாக விளங்கும் என்ற கருத்து இங்குத் தோற்றுவிக்கப் பட்டது. அதன் விளைவாக 'மணிப்பிரவாள' தோன்றியது ஸ்ரீபுராணம் போன்ற நூல்களும், நாலாயிரப்பிரபந்த உரைகளும் (ஈட்டுரை) மேற்சொன்ன மணிப்பிரவாள நடையில் அமைந்தன.

அண்மைக்காலத்தில், ஒரு சங்கராச்சாரியார் வடமொழி (தமிழ் உட்பட) உலகமொழிகளுக்கெல்லாம் தாய் என்று அம்மொழியின் மேலாண்மையை வலியுறுத்தினார். (இதைமறுக்கும் முறையில் தமிழ் அனைத்துமொழிகளுக்கும் தந்தை என்று இராமலிங்க அடிகளார் மறுப்புரை கூறினார்) இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் சமஸ்கிருதம் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும் என்றும், வேறு எந்த இந்திய மொழியும் இடம் பெறக்கூடாது என்றும், ஒரு கருத்து உருவானது. இதைப் பரிதிமாற் கலைஞர் எதிர்த்ததன் விளைவாகத் தமிழகப் பல்கலைக் கழகங்களில் தமிழும் இடம்பெற்றது. முன்பு தமிழ் வித்வான் பாடத் திட்டத்தில் வடமொழியும் கட்டாயமாகப் படிக்க வேண்டிய நிலை இருந்தது. (2Dவித்வான்) இதை மாற்றி, தமிழ் மட்டுமே படித்து வித்வான் பட்டம் பெறும் நிலையை உருவாக்கிய பெருமை கா. நமச்சிவாயரையே சாரும். தமிழில் வடசொற்கள் ஒலி மாறாமல் எழுதப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, கிரந்த எழுத்துகளான, ஸ, ஜ, ஷ, ஹ, க்ஷ ஆகிய ஐந்தும் தமிழர்க்குக் கற்பிக்கப்பட்டன. (தனித்தமிழியக்கம் இதை எதிர்த்தது) தமிழில் ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்த போது வேண்டுமென்றே வடசொற்கள் திணிக்கப்பட்டன. (எ-டு. க்ஷேத்திர கணிதம், துவிச்சக்கரவண்டி, பிராணவாயு, அப்ஜ ஹிதாகமிலம்) இவற்றை மாற்றும் முறையில் கணியர் இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை, இவை போன்றவற்றை நீக்கி நல்ல தமிழ்ச் சொற்களே பயிலுமாறு கலைச் சொல்லாக்கம் செய்தார்.

சிந்து வெளி நாகரிகம், தமிழரின் முன்னோர்க்கு உரியது என்பதை உலகம் ஒப்புக் கொண்டு விட்டது. ஆனால், இந்த உண்மையை மாற்றி, அது ஆரியருக்கு உரியது என்று திரித்துக் கூறும் மேலாதிக்க முயற்சிகள் எஸ்.ஆர். ராவ் போன்றவரால் இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமொழியின் மேலாண்மை முயற்சி இன்றைய புதுக் கவிதைகளிலும் ஊடுருவி உள்ளது. எனவேதான், ரத்த புஷ்பம் ஜனிக்கின்றன. ஜொலிக்கின்றன என்பன போன்ற வடசொற்கள் புதுக் கவிதைகளில், தேவையற்ற நிலையிலும் வலிந்து புகுத்தப் படுகின்றன. இது முன்பே, தமிழுக்குள் நுழைந்தது, தமிழைச் சிதைத்தது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் பிறக்கக் காரணமாக இருந்தது.

சமக்கிருதம் மேலாதிக்க மொழிமட்டுமன்று. தமிழை உள்ளிட்ட மற்ற மொழிகளை அடக்கவும் / அழிக்கவும் வல்லது. "வடமொழி இயல்பாக மேலாதிக்க (மேலாண்மை) மொழியாக





இருக்கிறது. வடமொழியின் மேலாதிக்கத்தன்மை, தன்னியில்பாக (இயற்கையாக) இருப்பது நெடுங்காலமாக உணரப்படவில்லை" என்று கா. நா. சுப்பிரமணியன் என்ற மொழியியல் அறிஞர் கூறினார் ("Sanskrit is by its nature an imperialist language, though the recognition of the imperialist quality inherent in Sanskrit was not recognised for long" Kaa Naa Subramanian, Indian literature: Common forms and themes P. 121)

வட மொழி மட்டுமன்றி, அதன் கால்வழியான இந்தியும் மேலாண்மை மொழி என்பதையும், அதுவும் பிறமொழிகளை அழிக்கும் ஆற்றலும், நடைமுறையும், வல்லாண்மையும் உடையது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டிய வேண்டியது அறிவுடைய அனைவரின் கடமையாகும்.

---

## 'ழ'கரத்தை 'ழ'கரமாகவே ஒலிக்கவும்

கடலூர் அ. தேவநாதன்
தமிழ் 'ழ'கரப் பணி மன்றம்

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் தமிழ் எழுத்துக்களை நுனிநாக்கில் உச்சரிப்பதை ஒரு நாகரிகமாகக் கொண்டு, பெரும்பாலான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளர்கள் ழகர, ளகர, லகரச் சொற்களை ஒரே 'ல'கரச் சொற்களாக ஒலித்து வருகின்றனர். ணகர, னகர, நகரச் சொற்களும் இவ்வாறே படாத பாடு படுகின்றன.

தொலைக்காட்சிதான் இவ்வாறென்றால் மேடைப் பேச்சாளர்கள் பலர் இவ்வாறே கண்டவாறு மனம்போன போக்கில் உச்சரிக்கிறார்கள்.

இவர்களையெல்லாம் கூட மன்னித்துவிடலாம். பள்ளிகளில் தமிழ் கற்றுத் தரும் தமிழாசிரியர்களின் உச்சரிப்பே சரியாக இல்லை. எனவே தமிழக அரசு தமிழாசிரியர்கள் சரியாக உச்சரிக்கிறார்களா என்பதைக் கண்காணித்து அவர்களுக்கு உடனடியாகச் சிறப்புப் பயிற்சியளிக்க வேண்டும். புதிய தமிழாசிரியர்களை நியமிக்கும்போதும் உச்சரிப்பு சரியில்லாதவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது. இதில் கண்டிப்பாக இருந்தால் தான் வருங்காலத் தமிழ் இளைஞர்கள் தமிழைச் சரியாக உச்சரிப்பார்கள். தமிழக முதல்வர், கல்வியமைச்சர், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மூவருமே சிறந்த தமிழ் அறிஞர்களாக, உள்ள நிலையில் இதற்கான தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## வாழ்க பல்லாண்டு

கவிஞர் எஸ். சங்கரநாராயணன்

எழுபத்து நான்கு வயதினிலும்
இருபத்து நான்கு வயதினர் போல்
முழுமூச் சுடனே அரசியலில்
மூழ்கி எழுந்தவர் கருணாநிதி!

செந்தமிழ் நாட்டைக் காத்திடவும்
திறமிலா அரசை வீழ்த்திடவும்
முந்தி நின்ற அணியினரில்
முரசு கொட்டிய படைத்தலைவர்!

நாடும் மொழியும் இருகண்போல்
நாளும் எண்ணி காக்கின்றார்!
பீடுடைத் திருவா ரூர்தந்த
பெரியார் அண்ணா வழித்தோன்றல்!

இயலிசை நாடகம் எனும்மூன்றில்
ஏற்றம் பெற்ற தால்இவரை
இயம்பினர் 'முத்தமிழ் அறிஞ'ரென
யாவரும் ஏற்றுப் போற்றுவண்ணம்!

தமிழர் வாழ்வு சிறப்புறவும்
தரணியில் அவர்புகழ் ஓங்கிடவும்
அமிழ்தாம் மொழியை வளர்த்திடவும்
அன்னவர் வாழ்க பல்லாண்டு!

---



## நூல் மதிப்புரை

நூல் : அமுத மொழிகள் ஆயிரம்
ஆசிரியர் : வேலூர். ம. நாராயணன், எம்.ஏ.,
வெளியீடு : நிறைவாணன் பதிப்பகம்
3, பெரியார் வீதி, பாவேந்தர் நகர்
வேலூர் – 9. வ.ஆ.அ. மாவட்டம்
பக் : 120 விலை : ரூ. 32/-

இந் நூல் கவிமாமணி வேலூர். ம. நாராயணன் அவர்கள் தாம் பணியாற்றும் பாரத மாநில வங்கியில் ஒவ்வொரு நாளும் அங்குள்ள வெண்பலகையொன்றில் எழுதிப் பல வாடிக்கையாளர்களைக் கவர்ந்த பொன் மொழிகளைத் தொகுத்து அளித்துள்ள நூலாகும்.

இந்நூலாசிரியர் தமிழுக்கும் மனித நேயத்திற்கும் சீரிய பண்பிற்கும் உழைப்பிற்கும் பெருமை சேர்த்து வரும் மிகச் சிறந்த படைப்பிலக்கியத் தளபதி ஆவார்.

வங்கி அலுவலர் கூட்டல், கழித்தல் கணக்குகளைப் பார்ப்பதோடன்றி வளர் தமிழுக்கு நாளும் வலிவும் பொலிவும் சேர்க்கும் பணியில் இடையறாதுழைப்பது பாராட்டுக்குரியது. அன்பில் தொடங்கி வெற்றியில் முடியும் ஆயிரம் பொன்மொழிகளைத் தேர்ந்து வழங்கியுள்ளார்.

அறிஞர்களின் கருத்துகள், கவிஞர்களின் சிந்தனைகள், பன்னாட்டுப் பழமொழிகள், சமயப் பெரியோர்களின் அறிவுரைகள் ஆகியன நூலின் பக்கங்கள் தோறும் பொன்னென ஒளி உமிழ்கின்றன.

அமுதமொழிகள் ஆயிரத்தில், "வாழ்வில் நமக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய சொத்து நம் செயல்களே" என்பது போன்ற பயன்மொழிகள் பாயிரமாக அமைந்து படிப்போர்க்குச் சிந்தனைத் தெளிவை ஊட்டுகின்றன.

திருவள்ளுவர், தாகூர், காண்டேகர், காந்தியடிகள், பெர்னாட்சா என உலகம் போற்றும் உயர்ந்தோரின் உள்ளம் கவர்ந்த கருத்துக் கருவூலங்களை ஆரமாகத் தொடுத்துள்ளார்! அமுத மொழிகளாகத் தொகுத்துள்ளார் ஆசிரியர்.

இந் நூல் அன்றாட வாழ்வியலுக்குத் துணைபுரிவதும் பயன் தருவதும் ஆகும். எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் அனைவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

– முனைவர் கடலூர் மணிமா[illegible]

### மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79. | 5 00 |
| திரு வ. வேம்பையன், (கல்பாக்கம்), மறைமலைநகர் | 10 00 |
| தவத்திரு. ஈசுவர அடிகள் அவர்கள் | 5 00 |
| திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2. | 25 00 |
| புலவர் வீ. பழனிவேல் | 10 00 |
| தாமரைச் செல்வி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18. | 10 00 |
| முத்துமணி த/பெ. திரு. பொ. பாலசுப்பிரமணியம், சென்னை – 18. | 10 00 |
| டாக்டர் பூவண்ணன், கோவை – 11 | 10 00 |
| திரு. பி. வி. கிரி, சென்னை. | 15 00 |
| மறுமலர்ச்சிக் கவிஞர் தமிழோவியன், சென்னை –79 | 10 00 |
| திரு. எஸ். சிவா, பெங்களூர்– 95 | 100 00 |

### மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்) | 10 00 |
| தவத்திரு. ஈசுவரனார் அவர்கள் | 5 00 |
| ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு | 25 00 |
| திரு வ. வேம்பையன், (கல்பாக்கம்), மறைமலைநகர் | 10 00 |
| மறுமலர்ச்சிக் கவிஞர் தமிழோவியன், சென்னை –79 | 10 00 |

மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

செயலாளர், மறைமலையடிகள் நூலகம், கலைமன்றம்
154, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, [illegible]

[illegible] சென்னை-600 018

## இசைத்தமிழ்

திங்கள் தோறும் வீசும்
தேனிதழ்த் தென்றல்

தமிழிசை மரபுகளுக்குரிய மறைக்கப்பட்ட செய்திகளை இலக்கண, இலக்கியச் சான்றுகளோடு மாறுபட்ட இசைப்பண்கள் பிழைபட்ட சுரங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தி எடுத்துக் கூறவல்ல மாத இதழ்

ஆசிரியர்
முத்தமிழ்ச் செம்மல் டாக்டர்
புரட்சிதாசன், எம்.ஏ.

பழந்தமிழிசை பற்றிய அரும்பெரும் செய்திகள் தாங்கி வரும் அரிய கட்டுரைகள்

தமிழிசைக்குப் பாடுபட்ட பெருமக்கள் வரலாறுகள்

தமிழிசைவாணர்களின் படங்கள் வரலாறுகள்

தமிழிசை இயக்க வரலாறு

இசைத்தமிழ்க் கருவூலமாக மலரும் மாத இதழ்

சிறப்பாசிரியர்,
சைவசித்தாந்தக் கழக ஆட்சியாளர்
இரா. முத்துக்குமாரசுவாமி எம்.ஏ.

வள்ளுவர் பண்ணை
ந. பழநியப்பன்
உமா பதிப்பகம்
இராம. லட்சுமணன்

மாத இதழ் ரூ. 5/-
ஆண்டுக் கட்டணம் ரூ. 60/-
புரவலர் கட்டணம். ரூ. 5000/-

அலுவலகம்,
17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
தொடர்புத் தொலைபேசி:
8283328

மொத்த வியாபாரிகளுக்கு 30% கழிவு
தொடர்பு கொள்க:

**பாண்டியன் பாசறை**
17, வடக்கு போக் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.

Regn. No. G/17/ M/4899
Licence No. TN/MS/WPP/30

ஜூன் — 1997

## கழகப் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| மாமனிதர் மண்டேலா - இராம்குமார் | 75 00 |
| நினைவுத் திரைகள் (என் வரலாறு) - கா. பொ. இரத்தினம் | 60 00 |
| திருவாசகம் தெளிவுரை - ப. இராமநாத பிள்ளை | 75 00 |
| மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன் - அம்பி | 35 00 |
| இதயமும் இதய நோய்களும் - தமிழும் பன்னீர்செல்வம் | 25-00 |
| திருமுருகன் அந்தாதி - ம. அரங்கநாதன் | 5 00 |
| நெல்லை மாவட்டச் சித்தர்கள் - சக்தி பி. சுப்பிரமணியம் | 40 00 |
| மானிட உடல் இயக்கவியல் - டாக்டர் கதிரேசன் | 35 00 |
| மருத்துவத் தமிழ்க் களஞ்சியம் - டாக்டர் கதிரேசன் | 35 00 |
| ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் - அ. ந. சொக்கலிங்கம் | 45-00 |
| விண்வெளிப் பயணம் - டாக்டர் த. சுப்பு ரெட்டியார் | 35 00 |
| The Power of Vaastu - T. Subramaniam | 68-00 |
| வாஸ்து | அச்சில் |
| பாவேந்தர் நினைவுகள் - மு. துரைசாமி | 25 00 |
| கலித்தொகை- நச்சினார்க்கினியர் உரை | 150 00 |
| செந்தமிழ்ச் செந்நெறி - மா. சண்முக சுப்பிரமணியம் | 60 00 |
| இறைமையில் இசைந்த வாழ்வு - மா. சண்முக சுப்பிரமணியம் | 25 00 |
| தமிழ் வாழ வேண்டும் - டாக்டர் ச. முத்துக்குமரன் | 35 00 |
| குறள்வழிச் சிந்தனைகள்-ஒரு புதுப்பார்வை - புலவர் பா. வீரமணி | 35 00 |
| மரகதவீணை - இலக்கிய நாடகம் - டாக்டர் சொ. சிங்காரவேலன் | 40 00 |
| இலக்கியமும் மனித வாழ்க்கையும் - பொன்னம்பலநாதன் | 30 00 |

அப்பர் அச்சகம், சென்னை-108.